

கல்கி

KALKI 15-2-81 90 காசு

ஒரு சர்வாதிகாரியின் ஏற்றத் தாழ்வுகள் இந்தப் படத்தில் தெளிவாக்கப்பட்டிருக்கின்றன. அதிகாரம் மமதையை உருவாக்கும்; பூரண அதிகாரம் ஆணவ போதையை ஏற்றி, பைத்தியக்காரனாகவே ஆக்கிவிடும். மக்களை ஆள்வதற்குப் பதில் துன்புறுத்தவும் அழிக்கவும் ஒருவன் ஆரம்பித்து விடுகிறான் என்பதை இந்தப் படம் நேர்த்தியாகச் சித்திரிக்கிறது. இடி அமீனாக வரும் ஜோசப் ஒலிடா நாம் புகைப்படங்களில் பார்த்த அமீனாகவே காட்சியளிக்கிறார். படத்தில் கொடூரம் இருக்கிறது என்றாலும், அதைவிட அமீனின் கோமாளித் தனங்களே அதிகம். தனது ஆறு வயது மகனுக்கு ராணுவத்தின் மிகப் பெரிய பட்டத்தை அளித்தல், இங்கிலாந்து இளவரசி தன்னிடம் வந்து மன்னிப்புக் கோர வேண்டும் எனக் கூறுதல், நடுத் தெருவில் நடந்து போய்க் கொண்டிருக்கும் பொழுதே அங்குள்ள யாரோ சிலரின் கடைகளைத் தனக்குத் தெரிந்தவர்களுக்கு வாய் வார்த்தைகளாலேயே உரிமையாக்குதல் போன்ற

தொடர்ச்சி 18 ம் பக்கம்

இரண்டே வருடங்களில் விற்பனையில் முதல் இடம்


JOHNSON®

மிக்ஸர் கிரைண்டர்

25 வருடத்திற்கு மேற்பட்ட அனுபவமும், இந்தியாவிலே சமையலறைச் சாதனங்களில் ஏராளமான வகைகளும் கொண்ட ஜான்சனின் சீரிய படைப்பு ஜான்சன் மிக்ஸர் — கிரைண்டர். எங்கெங்கும் அறிமுகப் படுத்தினதால் ஐயமின்றி தலை சிறந்ததென இரண்டே வருடங்களில் பீடு நடை போடுகிறது.

ஏன் எனக் கேட்பின் :


இலவசம்! தனி எவர்சில்வர் கிண்ணம்! உலர்ந்த அரவைக்கென தனியான எவர்சில்வர் கிண்ணமிருப்பதால் மசாலாக்களின் மணமும், ருசியும் மில்க் ஷேக்குகளில கலக்காமல் பாதுகாப்பு அளிக்கிறது.



அதிக சுகாதாரம் பாகங்களை எளிதாக கழட்டும்படி தயாரிக்கப் பட்டிருப்பதால் நீங்கள் துப்புரவாகக் கழுவ முடிகிறது. உணவுப் பண்டங்களின் துகள்கள் உள்ளே நின்று விடும் சந்தர்ப்பம் இல்லை.

முழுமையான பாதுகாப்பு. பிளேட் பாகங்கள் இரு கிண்ணங்களிலும் உறுதியாக இணைக்கப் பட்டிருப்பதால் இயக்கத் தில் பிளேட் பறந்து விடாமல் பாதுகாப்பு அளிக்கிறது.





கன ரக ஓட்டம் அதிக உறுதியான 450 வாட் மோட்டார் நமது இந்திய சமையலுக்கென்றே சிறப்பாக அமைக்கப் பட்டிருக்கிறது. 45 நிமிடங்கள் நிறுத்தாமல், தடையின்றி ஓட்டலாம்.

மற்ற சிறப்பு அம்சங்கள்:

- மோட்டார் குளிர்ச்சியாக இருப்பதற்கென தனியான காற்றோட்டம்
- சீரிய கலவை மற்றும் அரவைக்கென மேம்படுத்தப்பட்ட பிளேட் அமைப்பு
- ஒரு வேகத்திலிருந்து மற்றொரு வேகத்திற்கு செம்மையாக மாற்ற இஞ்சர் ஸ்விட்ச்
- ஒரு வருடத்திற்கு உத்திரவாதம் ஜான்சன்



ASP-BE-8001A

JOHNSON®


இயக்கத்திலும், ஆற்றலிலும் இணையிலாச் சிறப்பு கொண்டது

ஆங்கிலத்தில் உரையாடல் கற்றுக் கொள்ளுங்கள்

RAPIDEX ENGLISH SPEAKING COURSE

READ

* மிகவும் எளிய, ஆங்கில உரையாடல் கற்றுக் கொள்வதற்கான பயனுள்ள புத்தகம்.
* விஞ்ஞான முறையில், தெளிவான நடையில் எழுதப்பட்ட, விரைந்து புரிந்து கொள்ளக் கூடிய புத்தகம்.
* 80,00,000 க்கும் மேற்பட்டவர்கள் இப்புத்தகத்தினால் ஆங்கிலத்தில் உரையாடும் திறனைப் பெற்றுள்ளனர்.
* ஆசிரியர்கள், அறிஞர்கள், கல்வியாளர்கள் ஆகியோரினால் பரிந்துரைக்கப்படுவது.
* பல முன்னணி ஏடுகள், தமது விமரிசனங்களில் இப்புத்தகத்தை புகழ்ந்து கூறி யிருக்கின்றன.



Pages 384

Price Rs. 21/-
Postage Rs. 4/-

பணத்தை திருப்பித் தர உத்திரவாதம்

ரேபிடெக்ஸ் உங்களுக்கு வெற்றி அல்லது திருப்தி இல்லையெனில், முழுப் பணமும் திருப்பித் தரப்படுமென்பதற்கு உத்திரவாதமளிக்கிறது.

PUSTAK MAHAL KHARI BAOLI, DELHI-110006

"Rapidex" Course available at

All leading Book Shops, Roadways Book Stalls, A. H. WHEELER & HIGGINBOTHAMS Railway Book Stalls & their City Branches

STOCKISTS: MADRAS: ★ P. T. Bell & Co., 15, Sunkurama Chetty St., ★ Madras Book House, 9, Hanuman Koil St., West Mambalam Rly. Station ★ Paragon Traders, 8.C. Pycrofts Road, Triplicane ★ Thirumalai Book House, Y.M.C.A. Bldg. ★ Rajan Book Agency, 10, State Bank Colony, Gill Nagar ★ Sapthagiri Book Shop, Near Mambalam Rly Station.

OTHER BOOK SELLERS: ★ Thirumalai Station Way Stores, 1, Ranganathan St., ★ New Purasai Book Centre, 260, Purasawalkam High Road.

[illegible]

[illegible]

● ஷூமேக்கர் என்றால் ''யார்'' என்ற கேள்வி கேட்கும் இன்றைய ஞான சூனிய அரசியல்வாதிகளுக்கும், ஆட்சியாளர்களுக்கும் தாங்கள் என்னதான் Intermediate technology பற்றி ஒரு வகுப்பே நடத்தினாலும் சுத்தமாக ஒன்றும் புரியப் போவதில்லை. பாவம் சார் நீங்கள்! உங்களைப் பார்த்தால் பரிதாபமாக இருக்கிறது!

பெருங்களத்தூர் — எல். ரவிசங்கர்

● இசைக் கருவிகளை மீட்டிய நட்சத்திரங்களின் புகைப்படங்களை இரண்டு பக்கங்களில் போட்டு அனாவசியமாகப் பக்கங்களை வீணடிக்க ஏராளமான பத்திரிகைகள் உள்ளன. இந்த வேலையெல்லாம் ''கல்கி''க்குத் தேவையில்லை.

ஈரோடு-10 — மேஜர்தாசன்

● ஸண்டே ஸ்டாண்டர்டில் ஏதோ நகைச்சுவையாக எழுதப் போக அதை முழுவதும் மெய்யென்று நம்பி ''எழுதுகிறார்கள்'' என்ற துணுக்கை எழுதிவிட்டாரே ராஜேஸ்வரி! இப்போது ஸண்டே ஸ்டாண்டர்டைப் படித்துச் சிரிப்பதா? கல்கியைப் பார்த்துச் சிரிப்பதா என்றே புரியவில்லை போங்கள்! 53ம் பக்க செய்தித் துணுக்கு அத்தனையும் தப்பு ஸார்! தப்பு!

சென்னை-34 — மோகன்

● விமரிசிப்பது, அரசுடைமை வங்கிகளில் ஓவர் டைம் தொகையை மட்டுமல்ல, ஓவர் டைம் மனப்பான்மையையும் கூட என்று துணிவுடன் கூற (கல்கி 11-1-81) உங்கள் ஒருவரால்தான் முடியும்.

தட்டிக் கேட்க ஆளில்லை என்பதால் பாங்குக் கிளார்க்குகள், பியூன்கள் ஓவர் டைம் தொகையை மாதாந்திர சம்பளத்தில் ஓர் அம்சமாகக் கொண்டு விட்டார்கள். ஒரு வருடத்தில் 15 மாத ஊதியம் கிடைப்பதைக் கட்டுப்படுத்துவது என்பது சாத்தியமில்லை. உபரி வருமானம் என்னும்போது நியாயம் கற்பிக்கச் சைத்தான்கூட சாத்திரத்தை மேற்கோள் காட்டும்!

ஒரு பாங்க் கிளார்க் – பியூனின் சராசரி ஊழிய காலம் 30 வருடங்கள். இந்த 30 வருடங்களில் கீழ்க்கண்ட விதி முறைகளைக் கொண்டுவந்தால் அரசுடைமை வங்கிகள் சம்பாதிக்கும் சுமார் 40 கோடி லாபத்தை ''ஓவர்டைம் பகாசுரன்'' விழுங்காமல் காக்கலாம்.

(அ) சம்பள கிரேடுகளில் 10 ஆண்டுகளுக்கு மேல் ஊழியம் பூர்த்தியானவர்களுக்கு அவர்களைக் கையொப்பமிடச் செய்து பொறுப்பைச் சுமத்துதல்.

(ஆ) சம்பள கிரேடுகளில் 10 ஆண்டுகளுக்கு ஒருமுறையாவது Efficiency/Grade Bar

(இ) பதவி உயர்வின்போது நிர்ணயிக்கப்படும் மார்க்குகளில் குறைந்தது 20 சதவிகிதம் பிராஞ்ச் மானேஜர்கள் கையில் இருக்க வேண்டும்.

(ஈ) ஒரே மொழி பிராந்தியத்துக்குள் 7 வருடங்களுக்கு ஒரு முறை (அல்லது ஊழிய காலத்தில் குறைந்தது நான்கு முறையாவது) மாற்றல் இருக்க வேண்டும்.

பிலாய் — ராஜன்

● சுபாவின் 'தங்கை ஜாதி' சிறுகதை ககமான கவிதை மாதிரி கவையாக எழுதப்பட்டுள்ளது.

அரகண்டநல்லூர் — கே. பிரதாப் சிங்

● ஜோதிர்லதா கிரிஜாவின் ''மனசு'' சிறுகதை வாசகர்கள் மனத்தில் தங்கிவிட்டது!

கர்னாடகாவில் என்ன குழப்பம் என்கிற கட்டுரை நூற்றில் பத்து சதவிகிதம் மட்டுமே எழுதப்பட்டுள்ளது. மீதமுள்ள தொண்ணூறு சதவீதத்தை சாண்டில்யனின் சரித்திரத் தொடர் போலத் தரலாம்!


பெங்களூர் — ப. மூர்த்தி

● காஞ்சி ஆச்சார்ய சுவாமிகள் 28.2.80 அன்று பம்பாயில் இருந்தபோது கேரளாவில் கசாப்புக்கடைக்காரர்களால் இறைச்சிக்காக வாங்கப்படும் எல்லாப் பசுமாடுகளையும் திருப்பி அவர்களிடமிருந்தே விலைக்குவாங்கி அவைகளைக் கிராமப்புறங்களிலுள்ள விவசாயிகளிடையே விநியோகித்தார்.

இப்போது மீண்டும் கேரளாவுக்கு மாடுகள் விற்கப்படுவதை ஆட்சேபித்து அரக்கோணம் வி. ராஜகோபாலன் அவர்கள் முதல்வர் எம். ஜி. ஆருக்கு மனு அனுப்பியுள்ளார். மதிப்புக்குரிய முதல்வர் உடனே கவனிப்பாரா?

பெங்களூர் — கே. வி. எச். கிருஷ்ணன்

''நம்ம கட்சித் தலைவருக்குப் பிடிச்சது எது?''
''பழரசம்தான்!''
''அதானே பார்த்தேன், அடிக்கடி உண்ணாவிரதம் இருக்கிறார்!'' — ஜீ. நடராஜன்



"நோயாளியைத் தொடாமலே தள்ளி நின்று குணப்படுத்துகிறாள் ஜூனா" என்று என் நண்பர்கள் எல்லாம் சொன்னார்கள். இதற்கு Bio-aura cure என்று பெயராம். எனக்கு நம்பிக்கை ஏற்படவில்லை. ஜூனாவை ஒரு முறை நேரில் பார்த்துவிடத் தீர்மானித்தேன்.

அறையின் நடுவே ஜூனா நின்று கொண்டிருந்தாள். —உயரமாக, வெட வெடவென்று. கறுப்பு உடையின் மேல் வெள்ளை ஓவர் கோட். தனக்கு எதிரே அமர்ந்திருந்தவரின் தலையின் மேல் தன் கைகளை — வட்டமாகச் சுழற்றுகிறாள். பிற்கு தோள்பட்டை, மார்பு. பிறகு தொடர்ந்து அவள் கைகள் நோயாளியை. வட்டமிடுகின்றன. நோயாளியின் உடலைத் தொடாமலே. இரண்டு நிமிடங்கள்தான்.

"நீங்கள் இன்னொரு முறை வரவேண்டியிருக்கும்!"

அவளிடமிருந்து விடைபெற்ற மேற்படி நபரை அணுகுகிறேன். ஆர்வத்துடன் விசாரிக்கிறேன்.

"எனக்கு ரேடிகுலைடிஸ் இருந்தது!" என்கிறான் அவன்.

"ஏன் 'இருந்தது'?"

"இங்கே, இப்போது வருகிறவரைதான் அது இருந்தது. இப்போது வலியே இல்லை. ஆனாலும் ஜூனா சொன்னபடி இன்னொரு முறை கூட வந்துவிட வேண்டியதுதான்!"

"சிகிச்சையின்போது உங்களுக்கு எப்படி இருந்தது?"

"அவள் கரங்களின் இதமான சூடும் விரல்கள் குத்துகிற மாதிரியான ஓர் உணர்வும்தான். உடனே என் உடம்பு சரியாகி விட்ட மாதிரி உணர்ந்தேன்!"

அடுத்த நபர் பார்க்கின்ஸன் வியாதிக்காரர். கைவிரல்களும் கால்களும் நடுங்க நடுங்கக் காத்திருந்தவரை, இரண்டு இளைஞர்கள் தூக்கிக் கொண்டு வந்து ஜூனாவின் முன் உட்கார்த்தினார்கள். நாடே புகழும் எழுத்தாளர், நடிகர் அவர்!

ஜூனாவின் சிகிச்சை ஆரம்பமாயிற்று. அவள் கரங்கள் அந்நோயாளியின் முதுகிலும், கை கால்களிலும் படர்ந்து, பிறகு அவர் தலைக்கு மேல் வட்டமடித்தன. ஆச்சரியம்! நோயாளியின் விரல்களில் நடுக்கம் நின்று விட்டது!

"எனக்கு என்ன வியாதி என்று கண்டு பிடியுங்கள் பார்க்கலாம்!" என்றேன் அவள் அருகே போய். அவள் கரங்கள் என் தலைக்கு மேல் வட்டமடித்தன. என் உடம்புக்குள் விர்ரென்று எதுவோ இறங்கின மாதிரி இருந்தது.

"உங்கள் இடது காது ஏதோ 'சொல்கிறது' காதில் நல்ல வீக்கம் இருந்திருக்குமே சில வருஷங்கள் முன்பு?"

சிறு வயதில் காது வலி வந்து அவஸ்தைப்பட்டதை எப்படி மறக்க முடியும்!



மாயச் சிகிச்சை!

"எப்படி என் நோயைக் கண்டுபிடித்தீர்கள்?"

"எப்போதும் மின்சாரம் போன்ற ஒரு சக்தியை உற்பத்தி செய்து கொண்டே இருக்கிறது நம் உடல். உடல் உறுப்புகள் எல்லாம் இதில் பங்கு கொள்கின்றன. உங்கள் உடலின் இம்மாதிரியான சக்தியில் ஏற்படும் தொல்லைகள் என் கைகளுக்குத் தெரிகின்றன. எந்த மாதிரியான தொல்லை அது என்று உணர்ந்து கொண்ட பிறகு, உடலின் எந்த உறுப்பு அதற்குக் காரணம் என்பதைத் தீர்மானித்து விடுகிறேன். இது ரொம்ப சுலபம்!" என்று சிரிக்கிறாள் ஜூனா.


உடலியல் கழகத்தின் மருத்துவப் பிரிவில் கற்றுத் தேறியிருக்கும் ஜூனாவுக்கு, மனித உடற்கூறு சாஸ்திரம் அத்துபடி.

ஜூனாவின் திறனை விஞ்ஞானிகள் சிலர் சோதனை செய்ததாக ஆர். பார்க்கு தாரோவ் சொல்கிறார். அதில் அவள் வியக்கத்தக்க விதத்தில் தேறினாளாம்.

ஜூனாவுக்குஅவளது பழைய நோயாளிகளிடமிருந்து வந்த பாராட்டுக் கடிதங்கள் சிலவற்றை என்னுடன் வந்த போட்டோ கிராபர் படம் எடுக்க ஜூனாவை நெருங்கியபோது "தள்ளிப் போங்கள்!" என்று முணு முணுத்தாள் ஜூனா அவரிடம். "உங்கள் படச் சுருளை நான் என்னையறியாமல் நாசமாக்கிவிடக் கூடும்!"

ஜூனா விளையாட்டுக்குச் சொல்கிறாள் என்றுதான் போட்டோகிராபர் நினைத்தார். பிலிம் சுருளைக் கழுவிப்பார்த்தபோதுதான் அவருக்குத் தெரிந்தது-அந்தப் படச் சுருள் பயனற்றுப் போய்விட்டது, ஜூனாவின் கைவிரல் களிலிருந்துவெளிப்பட்ட ஒளிக் கதிர்கள்காரணமாக!

—ஒய். அய்வஜோவா —
தமிழில் சாருகேசி
நன்றி: சோவியத் லாண்ட்


ஐயோ பாவம்! முகத்திலே கரியைப் பூசிக்கிட்டு நிக்கறுர்!
குற்றச் சாட்டுகள்
குற்றச் சாட்டுகள்
எரி சாராய ஊழல் குற்றச் சாட்டு
பேச்சு வார்த்தைக்கு இடமிருக்கிறது!
பேச்சு வார்த்தைக்கு அழைப்பு

கடவுளை நம்புகிறவன் முட்டாள்!

ஸ்ரீரங்கம் கிழக்குச் சித்திரைத் தெருவில் பிராமண நல்வாழ்வுச் சங்கத்தினர் ஒரு கூட்டம் நடத்தினர். இது மாபெரும் தவறல்லவா? என்ன தைரியம் இருந்தால் இப்படி செய்வார்கள்! இந்த அநியாயத்தை முளையிலேயே கிள்ளி எறிய வேண்டாமா?

திராவிடர் கழகம் இருக்கலாம்; திமுக, அதிமுக எல்லாம் தோன்றலாம்; வன்னியர் சங்கம் இருக்கலாம்; முஸ்லிம் லீக் தழைக்கலாம்; நாடார் சங்கம் அமைக்கலாம்; ஜெயின் சொசைட்டி வளரலாம்; இவர்கள் எல்லாரும் கூட்டம் போடலாம், மாநாடுகள் நடத்தலாம்; ஆனால் 'பிராமணர்கள் நல்வாழ்வு சங்கம்' என்று ஒன்று எப்படி இருக்கலாம்? அவர்கள் தங்கள் உரிமைகளுக்குப் போராட எவ்வாறு அனுமதிக்க முடியும்? இவர்கள் சங்கம் அமைப்பதாவது, பொதுக் கூட்டம் நடத்துவதாவது, மாநாடு கூட்டுவதாவது? சேச்சே! மாபெரும் பாதகம் அல்லவா? தேசத் துரோகமாயிற்றே அது! திராவிடர்கள் முன்னேறலாம்; பிராமணர்கள் நல்வாழ்வு தேடலாமா?

கிளம்பியது வீரதீர பராக்கிரமப் படை! திராவிடர் கழக சூரப்புலிகள், பிராமண எதிர்ப்பு கோஷங்களைக் கூட்டம் நடந்த இடத்தில் எழுப்பினார்கள். தட்டிக் கேட்க எழுந்த மூன்று பிராமணர்களை நையப் புடைத்தார்கள். அவர்களில் ஓர் இளைஞனது பூநூலைப் பிடித்திழுத்து அறுத்தார்கள்! 'அடடா! வீரமென்றால் இது வல்லவோ வீரம்!' என்று அனைத்து இந்தியாவும் ஆசியா கண்டமும் அகில உலகமும் மூக்கின்மேல் விரல் வைத்து ஆச்சர்யப்படுகிறது! இன்னும் ஆச்சர்யப்பட்டுக் கொண்டே இருக்கிறது! வியப்பு வடிந்தபாடில்லை!

ஆனால் சூரப்புலிகளின் வீரம் இம்மட்டுமல்ல! இதற்கு மேலும் உண்டு! கூட்டம் நடந்த இடத்திலிருந்து அவர்கள் நேரே பஸ் நிலையத்துக்குப் போனார்கள். அங்கே சோழன் போக்குவரத்து பேருந்துவின் மீது பிராமண எதிர்ப்பு கோஷங்களை எழுத முற்பட்டார்கள். ஆட்சேபணை எழுப்பிய ஓட்டுனரைத் தாக்கினார்கள்! ஆகா! இந்த மாபெரும் சாகசத்துக்காக அந்த அரை டஜன் பேர்வழிகளுக்கும் பரம வீர சக்கர விருது அல்லவா வழங்க வேண்டும் என்றெண்ணி நாடே விம்மிதமடைந்திருக்கிறது!

நாடார் சமூகத்தை இழிவுபடுத்துவது போல் குமுதத்தில் சில வரிகள் இடம் பெற்று விட்டால் அந்தப் பத்திரிகையை அந்தச் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் கொளுத்தலாம், அந்தப் பத்திரிகைக் காரியாலயம் எதிரே ஆர்ப்பாட்டம் செய்யலாம். ஆனால் பிராமணர்களை இழிவுபடுத்துவதாக அந்தச் சமூகத்தினர் கருதும் ஒருதிரைப்படம் வந்தால் அதை எதிர்த்துப் போர்க்கொடி உயர்த்த பார்ப்பனருக்கு ஏது உரிமை? இதை இப்படியே விட்டால் அவர்கள் ரொம்பத் துளிர்த்துப் போய் விட மாட்டார்களா?

எல்லோரும் ஓர் இனம் எல்லோரும் ஓர் குலம் என்று பாடினானே பாரதி, ஒரு வரியை மறந்துவிட்டான்! ''பிராமணர்கள் நீங்கலாக'' என்று அடைப்புக் குறிக்குள் அவன் போட்டிருக்க வேண்டும். அவர்கள் தாழ்வுற்று, வறுமை மிஞ்சி, விடுதலை தவறிக் கெட்டு, பாழ்பட்டுப் போக வேண்டியவர்கள்தானே! ஜாதி அடிப்படைச் சலுகைகள் தான் புனித பாரத தேசத்தில் செல்லுபடியாகுமே தவிர வருவாய் அடிப்படையிலான சலுகைகள் அல்லவே! பாரதி நூற்றாண்டு கொண்டாடுகையில் அவன் பாடலில் முக்கிய திருத்தம் செய்யவே திராவிட கழகத் தோழர்கள் போராடலாம்; கொடி பிடித்து ஊர்வலம் வரலாம்.

தெய்வமாவது ஒன்றாவது? எல்லாம் வெறும் ஹம்பக்! ஹிட்லர் தெரியுமல்லவா? ஹிட்லர்? இங்கேயும் ஒரு ஹிட்லர் அவதாரமெடுப்பான். யூதர்களை ஜெர்மானிய ஹிட்லர் ஒழித்துக்கட்டியது போல் இங்கேயும் பிராமணர்களை அந்த எதிர்கால அவதார புருஷன் அழித்தொழிப்பான். இனி தோன்றப்போகிற அந்த அவதார புருஷனை வேணுமானால் இறைவன் என வணங்கலாமே தவிர மற்றபடி சாமியாவது பூதமாவது? கடவுளை நம்புகிறவன் முட்டாள்! மூட நம்பிக்கைகள் ஒழிக! பிராமணன் தமிழனின் எதிரி என்ற ஒரு மூடநம்பிக்கை நீங்கலாக!

1981 பிப்ரவரி 15

ரௌத்திரி மாசி 2

மலர் : 39 இதழ் 29



கல்கி



தமிழ்த்திரு நாடு தன்னைப் பெற்ற எங்கள்
தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்

வஸந்த்! வஸந்த்!

சுஜாதா

7. உங்கள் பிரயாணம்

காபரே இடைவேளையென்பது ஓர் அசட்டுத் தனமான நேரத் தீவு. புதுசாக வந்திருப்பவர்கள் தத்தம் மனைவிமார் ஞாபகம் வந்து வெளிச்சத்துக்கு வந்த வெள்ளெலி போல் விழிக்க வஸந்த் தன் தற்காலிக நண்பனைப் பார்த்துப் புன்னகைத்தான். அவன் முக மாறுதலின்றி ''சொல்லு எப்படித் தப்பிச்சே?'' என்றான்.

''அது ஒரு ஜீனி வேலை.''

''நீ ஒரு கவர்மெண்ட் ஆசாமியா?''

''இருக்கலாம்.''

''அவங்களுக்கும் தெரியுமா?''

''தெரியலாம் தெரியாமலிருக்கலாம். நீங்க யாரையோ சந்திக்கணும்னு சொன்னீங்களே!''

''உள்ற வா.''

'உள்ற' அந்தப் பெண் பழுப்பாக இறைச்சி போல இருந்த எதையோகடித்துக் கொண்டு வெள்ள நீலப் போர்வைக்குள் மொத்தம் முக்கால் மீட்டர் துணியில் 'மற்றவை நேரில்' என்றான்.

''ஹலோ உங்களை நான் பார்த்திருக்கேன்.''

அவள் வஸந்தைக் கவனிக்காமல் தன் இரை மேல் கவனமாக இருந்தாள்.

''த பாரு, உன் பேர் என்ன சொன்னே?''

''ரங்காச்சாரி.''

''இவ பேரு செல்லம்.''

''அப்படின்னு லாவிணியாங்கறது புனைப் பெயராக்கும்?''

''அது டான்ஸுக்காக வெச்சுக்கிட்டது.''

''ரோஸ்ட் நல்லா இருக்குதுங்க மகா'' என்றாள் செல்லம்.

''தபாரு ரங்கா இவளைப் பார்த்தில்ல. குட்டி ஷோக்காத்தானே கீரா?''

''ரா.''

''உனக்குன்னு பெஷலா இவளை சும்மா உருவி விட்ட மாதிரி ஒரு டான்ஸ் காட்டச் சொல்லவா?''

''அதுக்கு நான் என்ன காட்டணும்?''

''எங்கே இருக்கு சொல்லிடு.''

வஸந்த் அந்தப் பெண்ணைப் பார்த்தான். சம்பாஷணை தன்னைப் பற்றியே இல்லை போல் தன் நகத்தைப் பார்த்துக் கொண்டிருந்தாள். பெரும்பாலும் கேள்வி பதில் புரியாத பாதையில் சென்று கொண்டிருப்பது அவனுக்குச் சற்றுக் கவலையாக இருந்தது. எவ்வளவு தூரம் இந்த நாடகத்தை நடத்த முடியும் என்று தீர்மானமாகத் தெரியவில்லை.

''எங்க இருக்குன்னு தெரிஞ்சா நான் இன்னேரம் அங்க இருக்க மாட்டனா பிரதர்?''

''லாவிணியா யுர் நெக்ஸ்ட் டான்ஸ்.''

''வந்துட்டேன்'' என்று அவள் தன் தோகையைத் துறந்து விட்டு மேடைக்குச் சென்றாள். உய்யு உய் என்று சீழ்க்கைகள் வரவேற்றன.

''அப்ப நான் வரட்டுமா?''

''எங்க கிளம்பிட்டே! எனக்குப் பதில் வரலியே.''

''முதல்ல நீங்க யாரு கட்சி அதைச் சொல்லுங்க முன்னால.''

அவன் சுதந்திரமாக வஸந்தின் சட்டைப் பையைத் தொட்டு, ''பைக்குள் என்ன வச்சிருக்கே?'' என்றான்.

''சும்மா காயிதம்.''

''காட்ட மாட்டியா?''

''காட்டிட்டாப் போச்சு.'' வஸந்த் சட்டென்று உதறிக் கொண்டு எழுந்தான். ஒரே பாய்ச்சலில் கதவை நோக்கி ஓடினான். கதவை மோதித் திறந்தான். வெளியே விரைந்தான். சந்துக்குள் நுழைந்து மற்றொரு முனை திரும்பி மோட்டார் சைக்கிள் திடுதிடு என்று உயிர் பெறும் ஓசை கேட்டுவிட்டுச் சற்று நேரம் கழியக் காத்திருந்து மறுபடி அந்த ரெஸ்டாரண்ட் வாசலை நண்ணினான்.

லாவிணியா தன் டேட்டி முடிந்து ஸாரி அணிந்து, பொட்டலமாக வீட்டுக்குப் பாக்கி சிக்கனை...

''செல்லம் எங்கே? வீட்டுக்கா?''

''ஆமா.''

''வீடு எங்கே சிந்தாதிரிப்பேட்டையா?''

''ஏதோ ஒரு பேட்டை.''

''கொஞ்சம் வெறுப்பில இருக்கிங்க போல. எனக்குத் தெரிஞ்ச காபரே ஆர்ட்டிஸ்ட் எல்லோருடைய வாழ்க்கையிலும் பின்னணியில ஒரு சோகக் கதை இருக்கு. கடைசி கேஸ் ஒரு நொண்டித் தங்கை.''

''எனக்கு அதெல்லாம் ஒண்ணுமில்ல. காசு தர்றாங்க ஆடறேன்.''

''நல்ல பிரின்ஸிபிள்.''

செல்லத்துக்குச் சுமார் இருபது இருக்கலாம். ஒரு இடது கையால் தூக்கிவிடலாம் போல மெல்லிசாக இருந்தாள். ''அந்தாளை உனக்கு எப்படித் தெரியும்?''

''முதலாளிக்கு வேண்டியவர்.''

''எனக்குக்கூட முதலாளியைத் தெரியும்.''

''அப்படியா? நான் வரேன்.''

''வீட்டு வரைக்கும் துணைக்கு வரட்டுமா?''

''வேண்டாம். உன்னைப் பார்த்தா ஆளு புதுசு மாதிரி இருக்கு. இவங்க சகவாசம் வேண்டாம். அதான் சொல்வேன் விலகிக்க, அடி படறதுக்குள்ள விலகிக்க.'' அவள் பின் கதவைத் திறந்து இருட்டில் சைக்கிள் ரிக்ஷா ஏறிச் சென்றாள்.

''ஒரு மோட்டார் சைக்கிள் மூர்க்கன், ஒரு காபரே கன்னி விஷயம். கொஞ்சம் சுவாரஸ்யமாப் போவுது இல்ல பாஸ்?''

''திருடங்க சகவாசம் அதிகமாய்ட்டு வருது. நீ ஏன் அங்கெல்லாம் போறே. நேரே வீட்டுக்கு வரவேண்டியவன் தானே?''

கணேஷ் கலைந்த தூக்க வெறுப்பில் இருந்தான்.

''அந்தாள் என்னை கவர்மெண்டான்னு கேட்டான். அப்படின்னு இது சர்க்கார் சம்பந்தமான விஷயம். எங்க இருக்குன்னு என்னையே கேட்டான். எங்க எது இருக்கு?''

''எல்லாத்தையும் காலைல யோசிக்கலாம். தூங்கித் தொலை.''

''காலைல போறயில்லை?''

''போலாம் போலாம்.''

அதிகாலை வஸந்த் உற்சாகத்துடன் கணேஷின் தூக்கத்தைக் கலைத்தான். பால் வாங்கி வந்து காப்பி தயாரித்தான். ரேடி யோட்டருக்குத்





பள்ளிகள் செய்திகள்

கே. கோபாலரத்னம்

● சென்னை ரோடரி கிளப் (வட மேற்கு) செயலாளர் கோபால ரத்னம். ஊன முற்றோர் நலன் ஆண்டின் தொடக்கத்தில் கண்பார்வை இல்லாதவர்களுக்காக 'ப்ரெயில்' முறையில் காலண்டர் அறிமுகப் படுத்தியுள்ளனர் இந்த ரோட்டரி சங்கத்தி னர். உலகம் முழுவதும் உள்ள ரோட்டரி சங்கக் கிளை களுக்கு இந்தக் காலண்டரை அனுப்பியுள்ளனர்.

டி. எஸ். கருணாகரன்



தண்ணீர் நிரப்பினான். காரைத்துடைத்தான். உடுப்பியிலிருந்து பொட்டலங்கள் தருவித் தான்.

''முதல்ல காஞ்சிபுரம் அங்கேயிருந்து வந்த வாசி போற பாதையைப் பிடிக்கணும். அங்கிருந்து.....''

''ஏங்க கூழமந்தல் போற பாதை இதானே?''

''கூளமந்தல்ல எங்க போகணும்?''

''உக்கல்.''

''அட நானும் அங்கத்தான் போவணும். பஸ் வருமான்னுட்டுக் காத்திருக்கிட்டிருக் கேன்.''

''ஏறுங்க பெரியவரே.''

பெரியவர் சந்தோஷமாக ஏறிக் கொண்டு கதவைப் படீரென்று சாத்தினார்.

''சினிமாக்காரங்களா?''

''இல்லே.''

''உக்கல்ல என்ன சோலி?''

''கோயிலுக்குப் போகணும்.''

''பெருமா கோவிலா?''

''எல்லாக் கோயிலேயும் பார்க்கணும்.''

''சாமி கும்பிடவா?''

''இல்லே.''

''ஆராய்ச்சியா?''

''அது மாதிரிதான் வெச்சுக்கங்களேன்.''

''கூளமந்தல்லயே ஒரு பளய கோவில் இருக்குது. கவர்மெண்ட்டு பாதுகாக்கறாங்க.''

''பெரியவரே கன்ஃப்யூஸ் பண்ணாதீங்க, முதல்ல உக்கலேப் பார்க்கலாம். அங்க ராஜ ராஜன் கிணறுன்னு ஒரு எடம் தெரியுமா உங்களுக்கு?''

''தெரியாதுங்க. ஆறு கெணறு நிறைய இருக்குது.''

ஆற்றில் நீரில்லே. சவுக்குத் தோப்புக்கள் தெரிந்தன. நகர நாகரிகம் தீண்டிய ஒரு இரண்டுங் கெட்டான் நிலையில் தன்னை இன் னும் தீர்மானிக்காத நிலையில் இருந்தது உக்கல் கிராமம்.. புழுதி மேகத்தில் சிறுவர்கள் தொடர. தெருத் திண்ணைச் சீட்டாட்டங் களிலிருந்து கேள்வி முகங்கள் எட்டிப் பார்த் தன. பாண்ட் அணிந்த வாலிபர்கள் தென் பட்டனர்.

''இந்த ஆத்துக்குப் பேரென்ன பெரிய வரே?''

''செய்யாறுங்க.''

''கோயில் எங்கே?''

''இதாங்க பெரிய தெரு. இப்படியே கிளக்கால போனீங்கன்னு பெருமாகோயில் சந்து வருங்க. இப்படியே வடக்கே போனு ஈஸ்வரன் கோவில்.

''நேரப் போனு?''

''கம்மாளத் தெரு. முதலியார் தெரு. அப்பறம் பாப்பாரத் தெரு.''

''ஹோல்டான். தொடர் கதையை நிறுத் திருவாங்க.''

''மேக்கபோனுசெம்படவத்தெருவருங்க!''

''சரிதான் பாஸ் மனு இன் ஆக்ஷன்.''

''கோவில்ல கிணறு இருக்கா பெரியவரே'' என்றான் கணேஷ்.

''பெரியவரே நேத்திக்கு உங்க கிரா மத்துக்குப் புதுசா பட்டணத்தில இருந்து யாராவது வந்தாங்களா? பழுப்பா நீளமா ஒரு மோட்டார்ல?''

''இல்லிங்களே. எனக்குத் தெரிஞ்சவரைக் கும் தெரியலிங்களே. நான் ஊர்லதானே இருந்தேன்.''

கார் பெருமாள் கோவில் வாசலில் நிற்க, சிறுவர்கள் சூழ்ந்துகொள்ள, வஸந்தும்

● காலையில் சூட்டும் டையும் அணிந்து ஆபீஸ் சென்று பைல்களைப் புரட்டுபவர், மாலை வேளைகளில் கட்டுக் குடுமி, பஞ்ச கச்சமாய் அணிந்த வேட்டியுடன் அமர்ந்து உபன்யாசம் செய்கிறார். வி. எஸ். கருணாகரன் கிண்டி சிறு தொழில் பேட்டையில் சிறு தொழில் துறையின் உதவி இயக்குநர். தம் குடுமியை மறைக்க பகலில் 'விக்' வைத்துக் கொள்கிறார். ''என் தந்தைக்கு நான் கொடுத்த வாக்கைக் காப்பாற்றுகிறேன். அவர் விருப்பப்படி பக்தியைப் பரப்ப, நன்னெறி வளர்க்க உபந்நியாசம் செய்கிறேன். என் அலுவலக வேலைகள் பாதிக்கப்படுவதில்லை. மாறாக, என் மேலதிகாரிகளுக்கு என்னிடம் ஒரு நெருக்கத்தை ஏற்படுத்தியுள்ளது'' என்கிறார் இந்த இளைஞர்.

- சிக்கி



நாகி ரெட்டி

● இந்தியாவிலேயே பன்னிரண்டு மொழிகளில் வெளியாகும் பத்திரிகை ஒன்று தான்: அம்புலி மாமா அதன் நிர்வாக ஆசிரியர் நாகி ரெட்டி. குழந்தைகளுக்கான இந்தப் பத்திரிகையின் ஆசிரியருக்கு வயது 66! பி. என். கே. பிரஸ் அதிபர். ஆசியாவிலேயே பெரிய விஜயா வாஹினி ஸ்டுடியோவை நிர்மாணித்த பெருமை பெற்றவர். இப்போது புதிய பெருமை சேர்த்துக் கொள்கிறார். ப்ரெயில் முறையில் அம்புலி மாமாவை வெளியிடுகிறார். இந்தியாவிலேயே பார்வையற்றவர்களுக்காக ஒரு பத்திரிகையை முதல் முதல் தொடங்கி யிருப்பவர் இவரே.

- சிவபாலன்

கணேஷும் பெரியவர் வழி காட்ட உள்ளே சென்றார்கள்.

நுழை வாயில் சிதிலமாக இருந்தது. கோபுரமற்று உயர்ந்த கல் தூண்கள் மேல் கூரை வேய்ந்திருந்தது. எதிரே நடன மேடை போன்ற அமைப்புத் தெரிந்தது. சுமார் பன்னிரண்டடி உயரத்தில் அதன் பின் தெரிந்த கருவறை திறந்திருந்தது.

''கிணறு இருக்கா?''

''அங்க பாருங்க. ஓரத்தில ஒண்ணு இருக்குதுங்க.''

கோயிலின் தென் மேற்கு மூலையில் அந்தக் கிணறு இருந்தது.

சுமார் பத்து அடி விட்டத்துக்கு ஏறக்குறைய பாழுங் கிணறு. தண்ணீர் இல்லை.

''இந்தக் கிணத்தைப் பத்தி ஏதாவது கதை உண்டா பெரியவரே?''

''இதில புதையல் இருக்கிறதாச் சொல்லுவாங்க. எங்க இருக்குன்னு அந்தக் கல் சுவத்தில எழுதி வெச்சிருக்கிறதா சொல்றாங்க. அதை யாராலும் படிக்க முடியாதுங்க! நீங்க அதைத் தேடிட்டுத்தான் வந்திருக்கிங்களா?''

''இண்ட்ரஸ்டிங்'' வஸந்த் கணேஷைப் பார்த்தான். கணேஷ் அந்தக் கருவறைப் பக்கம் செல்ல வஸந்த் அவனைப் பின் தொடர்ந்தான்.

கருவறையின் கற்கட்டின் வெளிப்புறத்தில் எழுத்துக்கள் வெட்டப்பட்டிருந்தன.

'லப்பெருநிலச் செலவியுந்தனக்கே உரிமை'

''தலைகால் புரியலை பாஸ்.''

''ஒருசில பேருக்குப் புரிஞ்சிருக்கு.''

''மடவிளாகத்தில ஙக கால் ஒடிஞ்ச சிலைங்க இருக்குங்க. பாத்துங்க. முள்ளுச் செடிங்க அதிகம் இருக்கும்.''

வஸந்த் நெருஞ்சி முட்களின் உபயத்தில் நொண்டினான்.

''எனக்கு என்னவோ நாம தேடற இடமே தப்புன்னு தோணுது. பேராசிரியர் இதையா ஆராய்ச்சி செய்திருக்கார்? அஞ்சு நிமிஷத்துக்கு மேலே இந்த இடத்தில எவனாலயும் நிக்க முடியாது. ஏன்யா உங்க உக்கல் கிராமம் முழுக்க இங்கதான் வந்து உக்கார்றாங்களா பத்பூ தாங்கலியே.''

''நம்ம வீட்டுக்கு வர்றீங்களா மோர் குடிக்கலாம்?''

''அப்புறம் வரோம் பெரியவரே.''

''இல்லை பட்டணத்துக்காரங்களுக்கு டீத் தண்ணி வேணும்னு எம்மவ நல்லா டீ வைக்கும்.''

''மவளுக்கு என்ன வயசு?''

''சின்னதுங்க. பத்துப் பதினஞ்சு.''

''பாஸ் ஒரு கப் டீ அடிச்சுட்டு வந்துறலாமே.''

''யு ஆர் ஸப்போஸ்ட் டு பி இன்லவ் வித் இனியா வஸந்த்.''

''ஓ எஸ் மறந்தே போய்ட்டேன். நீங்க போய்க்கங்க பெரியவரே.''

கணேஷ் மறுபடி கிணற்றுக்குச் சென்று எட்டிப் பார்த்தான். ''ம்ஹூம். இதில் ஏதும் இருக்கிறதா எனக்குத் தெரியலை.''

''அப்ப நான் வரட்டுங்களா?''

''வாங்க.''

''ராத்திரி தங்குவீங்களா?''

''சான்ஸே இல்லை.''

பெரியவர் சிறுவர்களை விரட்டி யடித்துக் கொண்டு விலக, வஸந்தும் கணேஷும் தனியே விடப்பட்டார்கள். கோயிலை விட்டு வெளியே வந்து சற்றுத் தூரம் நடந்தார்கள்.

''வஸந்த் ஒரு ஆள் நம்ம பின்னால வந்துக் கிட்டிருக்கான். கவனிச்சியா?''

''கவனிச்சேன் பாஸ், விசாரிக்கலாமா?''

''கண்டுக்காதே, நட.''

நேராக வெளித் தெருவில் நிறுத்தப் பட்டிருந்த காருக்கு நடந்தார்கள்.

காரைக் கிளப்பும் தருணத்தில் அவன் சற்று அவசரமாக அருகில் வந்து ''ஒரு நிமிஷம் உங்களோட பேசணும்'' என்றான்.

''பேசுங்க.''

''கார் மெட்ராஸ் போறதா?''

''இப்போதைக்கு இல்லே.''

''நான் ஏறிக்கலாமா?''

''நீங்க யாரு?''

''உங்க கிட்ட முக்கியமா ஒரு விஷயம் சொல்லணும்.''

''சொல்லுங்க.'' கணேஷ் காரின் இன் ஜினை இயக்கிவைத்தான்.

''தனியா உடனே வந்தா சொல்றேன்.''

''ஏன் இங்கேயே சொல்லுங்களேன்.''

''நீங்க என்ன பண்றீங்க உடனே சதா சிவம்கிறவரைப் போய்.....''

அவன் சொல்ல வந்ததை முடிக்காமல் சடக்கென்று நிறுத்தி விட்டான். அல்லது நிறுத்தப்பட்டு விட்டான். அவனிடமிருந்து அடுத்து 'அக்' என்று ஒரு விநோத சப்தம் எழுந்தது. அப்படியே கார்க் கதவுக்குள் எட்டிப் பார்ப்பவன் போல் வஸந்தின் முகத் தோடு முகம் ஒட்டிக் கொண்டான்.

''என்ன ஸார் முத்தம் கொடுக்கறீங்க?''

அவன் வாய் திறந்து காற்றுத்தான் வெளி வந்தது.

''வஸந்த் ஸம்திங் ராங், டெரிப்ளி ராங்க்.''

வஸந்த் கார்க் கதவைத் தள்ள முயற்சி செய் தான். முடியவில்லை. இதனிடையில் கணேஷ் காரின் மறுபுறம் வெளிப்பட்டு அந்தப் புதியவனைப் பின்புறத்திலிருந்து அணுக,

''மை காட்!''

அவன் முதுகில் கத்தி சொருகப்பட்டு ரத்தம் வழிந்து கொண்டிருந்தது.

(தொடரும்)

சாட்சிகள் சரியில்லை!



நான் பாரீஸ் போய் இருந்தபோது சிகரெட் தயாரிக்கும் நிறுவனம் ஒன்று, தனது பிரதான விற்போகஸ்தர்கள் எல்லோரையும் ஒருநாள் விருந்தளித்து உபசரித்தது. பல பிரமுகர்கள் விழாவுக்கு வந்திருந்தனர். நானும் அதில் கலந்து கொண்டேன்.

விருந்தினருக்குத் திடீரென்று ஒரு பரீட்சை வைத்தனர். ''எங்கள் சிகரெட் பாக்கெட்டுகளை யாராவது கொண்டு வந்திருந்தால் காலிசெய்து காலிப் பெட்டியை மட்டும் எங்களிடம் கொடுத்து விடுங்கள்'' என்று அறிவித்தனர். அப்படியே எல்லோரும் செய்தனர்.

இதன் பிறகு ஒரு கேள்வி கேட்டனர். ''எங்கள் சிகரெட் பாக்கெட்டின் மேல் போட் டிருக்கும் படத்தில் ஒட்டகம் இருக்கிறது. அதை மனிதன் அதன் மேல், உட்கார்ந்து கொண்டு ஓட்டுகிறானா அல்லது அதன் முன்னால் கயிற்றைப் பிடித்து இழுத்துக்கொண்டு செல்கிறானா?''

சிலர் இப்படியும் சிலர் அப்படியும் பதில் கூறினார்கள். ஒருவர் கூட பதில் கூறாமல் இருக்கவில்லை.

இரு சாரார் கூறிய பதில்களும் சரியானது அல்ல என்பது அக்கம்பெனி நிர்வாகிகள் சிகரெட் பாக்கெட்டை வெளியில் எடுத்துக் காண்பித்த பின்னர்தான் எனக்குப் புரிந்தது. ஆம்! பாக் கெட்டின் மேல் ஒட்டகம் மட்டும்தான் இருந்தது. மனிதன் படமே இல்லை. இத்தனைக்கும் பதில் கூறிய அனைவரும் அப்பாக்கெட்டைத் தினந்தினமும் ஐந்து அல்லது ஆறு தடவைக் குக் குறையாமல் சிகரெட் பிடிப்பவர்கள்.

அதுபோலதான் நமது நாட்டில் கொலை, திருடு முதலிய குற்றங்களில் சாட்சி சொல்ப வர்கள் இருக்கிறார்கள். அதனால்தான் குற்ற வாளிகளைக் கண்டு பிடிப்பது போலீசுக்கு மிகவும் கஷ்டமாக இருக்கிறது.

—மேக்ஸ் மூல்லர் பவனில் முன்னாள் போலீஸ் ஐ. ஜி. எப். வி. அருள் கூறியது.

கேட்டவர் : ''சங்கரி புத்திரன்''



கடுகு பதில்கள்!

✠ டாக்டர் எஸ். ராமநாதன், திருநெல்வேலி

கே. 'காளி' என்ன செய்வார் என்ற கேள்விக்கு ரிப்'பூட்டு' வார் என்று பதில் வந்தது எப்படி?

ப: பரிசு ஒரு 'லாக்' ரூபாய் கூடக் கொடுக்கலாம் 'கல்Key' ஆசிரியர் ஒத்துக் கொள்ள மாட்டாரே!

✠ பி. தங்கவேலு, மைசூர்-4

கே. மனைவியைக் கணவன் வாங்க, போங்க என்று அழைக்க வேண்டும் என்ற சர்ச்சையைப் பற்றி நீர் மூச்சு விடவில்லையே?

ப: இந்த வாங்க, போங்க என்று மனைவியும் கணவனைக் கூப்பிட வேண்டியதில்லை. (கணவனும் மனைவியைக் கூப்பிட வேண்டியதில்லை) என்று நான் நினைக்கிறேன். மரியாதையாகப் பேசுவது தம்பதிகளின் அந்யோந்யத்தைக் குறைக்கிறது என்பது என் கருத்து. 'ஏ மச்சான் சோறு இன்னவாயேன்' என்ற வாசகத்தில் பளிச்சிடும் நெருக்கம், உரிமை, 'நீங்க, வாங்க' வில் வருமா?

✠ ஐ. ஜி. மோகன், காட்பாடி

கே. சந்தாதாரர் அனுப்பும் ஜோக், துணுக்குகள் கூட பிரசுரிக்கப் படுவதில்லையே, ஏன்?

ப: அப்புறம் சபா மெம்பர்களுக்கு டான்ஸ் ஆடவும் பாட்டுப் பாடவும் சான்ஸ் தருவதில்லையே என்பீர்கள். சந்தாதார் என்ற காரணத்துக்காக உங்கள் ஜோக், துணுக்கைப் போட முடியுமா? சுவையாக இருக்க வேண்டாமா?

✠ டி. ரவிசந்திரன், பட்டுக்கோட்டை

கே. வெளிநாட்டுக்குப் பயணம் செய்ய விரும்புவது கப்பலிலா? விமானத்திலா?

ப: இரண்டிலும் இல்லை. நான் பயணம் செய்ய விரும்புவது ஓசியில்!

✠ ஏ. ஜே. சீதா கல்யாணி, கல்கத்தா-26

கே. சமீப காலமாகத் தமிழ் பத்திரிகைகளில் கதை, கட்டுரைகளில் ஆங்கிலச் சொற்களே மிகுதியாக உபயோகப்படுத்துகிறீர்கள். தலைப்பு முழுதும் ஆங்கிலத்தில் தரப்படுகிறதே ஏன்? தமிழ் மொழியின் கதி என்னவாகும்?

ப: இட் ஹாஸ் பிகம் எ ஃபாஷன். தட் சஸ் ஆல். நத்திங் வில் பி ஹாப்பன்டு டமில், ஆண்டி!



✠ மாலினிராஜா, சென்னை-17

கே. உங்கள் பதில்களில் யாரையும் தாக்கி எழுதுவதில்லையே ஏன் பயமா?

ப: பயம் அல்ல. நாகரிகம். எனக்குத் தனிப்பட்ட முறையில் பலபேர் மேல் வருத்தம், கோபம், மனத்தாங்கல் இருக்கலாம். அது சரியானதாக இல்லாமலும் இருக்கலாம். அதையெல்லாம் பதில்களில் வெளிப்படுத்துவது சரியில்லை. நல்லது என்று பட்டதை — அது தவறான அடிப்படையில் இருந்தாலும் — சொல்வதால் யாருக்காவது, எங்காவது உற்சாகம், மகிழ்ச்சி ஆர்வம் ஏற்படலாம்.

✠ செம்பா ஜனார்த்தனன், திருவனந்தபுரம்

கே. சமீபத்தில் மெய்சிலிர்த்த அநுபவம் எது?

ப: இரண்டு நிகழ்ச்சிகளைச் சொல்கிறேன். ராஜாஜி நினைவு கூட்டத்தில் பிலு மோடி பேசினார். அவர் சொன்னார்: என்னுடைய தந்தை இறந்தபோது நான் மிகவும் கலங்கிப் போனேன். ராஜாஜி அப்போது என்னிடம், 'பிலு ஏன் வருத்தப் படுகிறாய்? நான்தான் உன் தந்தை இருக்கிறேனே' என்றார். இதை பிலு மோடி நெகழ்ச்சியுடன் கூறியபோது மெய் சிலிர்ப்பு ஏற்பட்டது.

மற்றொன்று ஒரு கிழக்கு ஜெர்மானியத் திரைப்படத்தைப் பற்றியது. புரட்சிக்காரப் பெண்ணுக்குப் பத்தாண்டு சிறைவாசம் கிடைக்கிறது. அதில் ஓராண்டு தனிமைச் சிறை. ஓராண்டு முடிந்ததும் அவள் அறையிலிருந்து வெளியே வர அனுமதிக்கப்படுகிறாள். வெளியே வந்ததும் சிமெண்ட் தரை பாதையை ஒட்டியுள்ள ஒரு சிறிய புல் திட்டிற்குச் சென்று தன் பூட்ஸைக் கழற்றி வெறும் பாதத்தால் புல்லை ஸ்பரிசிக்கிறாள். ஒரு வருட காலம் சிமெண்ட் தரையிலேயே இருந்த அவருக்குப் புல் தரையில் நடப்பது புத்துணர்ச்சியை ஏற்படுத்துகிறது. இந்த உணர்ச்சியை அற்புதமாகத் தன் முக பாவத்தில் காட்டினார். இந்தக் காட்சியைப் பார்த்தபோது மெய் சிலிர்ப்பு ஏற்பட்டது. இப்படிச் சின்ன சின்ன விஷயங்களில் டைரக்டரின் திறமை அந்தப் படத்தில் பளிச்சிட்டது என்பதையும்—சம்பந்த மில்லா விட்டாலும் குறிப்பிட விரும்புகிறேன்.

✠ மேஜர் தாசன், ஈரோடு-10

கே. தங்களிடம் உள்ள கெட்ட பழக்கம் என்ன?

ப: எத்தனையோ. உதாரணமாக, உதவி என்று முன் பின் தெரியாதவர்கள் கேட்டால் கூடச் சட்டென்று யோசிக்காமல் லட்ச ரூபாயை எடுத்துக்கொடுத்து விடுவேன்!

பரிசு பெறுபவர் :

ஏ. ஜே. சீதா கல்யாணி
5/2 கபீர் ரோடு
கல்கத்தா—700 026

கழுத்தில் விழுந்த மாலை

லக்ஷ்மி

4

விடியற்காலை முகூர்த்தம். எவ்விதமான கலவரம் -இன்றி இனிதே நடந்தேறியது. கஸ்தூரிக்கிருந்த கவலையில் அவள் இரவு ஏதும் சாப்பிடவில்லை. அண்ணனின் வற்புறுத்தலை ஒதுக்க முடியாது ஒரு டம்ளர் மோரைக் குடித்துவிட்டுத் தனது அறையில் தன்னந்தனியே படுத்துக் கொண்டு விடியும்வரை விழித்துக் கொண்டே இருந்தாள்.

'இந்தப் பிள்ளை ஹர்ஷன் திடீரென்று காலை மண்டபத்துக்கு வர மறுத்துவிட்டால்?.... முருகா! தாலி கட்டிய கையோட உனக்கு அபிஷேகம் செய்து வைக்க உன் சந்நிதிக்கு ஓடி வருகிறோம். கைவிட்டுடாதே அப்பா' கண்களில் நீர் ஒழுக மனமுருகப் பன்முறை பிரார்த்தித்துக் கொண்டாள்.

மனையிலிருந்தபடியே தாயை வெட்டி விடுவது போல் ஹர்ஷன் பல முறை பார்த்தான். ஆனால் அவள் எதிர்பார்த்த பைத்தியக்காரச் செயல் ஏதும் நடைபெறவில்லை.

பச்சைத் தண்ணீரைக் கூட வாயில் விடாது கடும் பட்டினியாக இருந்த கஸ்தூரி தாலி கட்டி முடிந்து மற்ற சடங்குகள் முடிவு பெற்ற உடனேயே வேதாசலத்தைக் கூப்பிட்டுச் சொன்னாள்: ''அண்ணா! கல்யாணப் பெண் மாப்பிள்ளையோடு நீங்க காரில் கோவிலுக்கு வந்துடுங்க. நானும் விரைவில் அங்கே வந்து சேர்ந்துக்கிறேன்.''

கருணை காட்டிய முருகனுக்குக் காணிக்கை அளிப்பவள் போல மூச்சிரைக்க முருகா... முருகா... என்று முணு முணுத்த வண்ணம் அவள் படிகளில் ஏறி மேலே கோவிலுக்கு வந்து சேர்ந்தாள்.

அபிஷேகத்துக்கு முன்பே ஏற்பாடாகி விட்டிருந்ததனால் அதுவும் மிகவும் இனிதே நடந்தேறியது.

மாலையும் கழுத்துமாகத் தன் எதிரே நின்ற மணமக்களை மெல்லப் பார்த்தாள் கஸ்தூரி.

ஆனந்தத்தின் அழுத்தத்தினால் அவள் கண்கள் பனித்தன.

உறவினர்கள், நண்பர்கள் எதிரே அவமானப் படாது எப்படியோ சமாளித்தாகி விட்டது. ''இனி அவர்கள் பாடு'' என்று எண்ணிக் கொண்டாள்.

பிரார்த்தனையை முடித்துக் கொண்டு அவர்கள் கீழே வருவதற்குள் பகல் சாப்பாடு தயாராகி விட்டிருந்தது. ஊருக்கு உடனே திரும்ப நினைத்தவர்கள் முதல் பந்தியிலேயே உட்கார்ந்து விட்டனர்.

கல்யாணத்துக்குத் தலையலங்காரம் செய்ய எடுத்து வந்த கவரிங் நகைகளைப் பற்றித் தான் பெரியம்மா சுமதிக்குக் கவலையாக இருந்தது. அவைகளைச் சேகரித்துக்கொண்டு கிளம்ப அவசரப்பட்டாள். கனமையாக அழுத்திய கவரிங் காசு மாலை மாதங்கியின் ரவிக்கையையும் கழுத்தையும் பிய்த்துக் கொண்டிருந்தது. அது போதாது போல் சுமதி வேகமாகப் பெண்கள் மண்டபத்திலே தங்கியிருந்த அறைக்குள் வந்தாள்.

''எங்களுக்கு இனி என்ன வேலை இருக்கு? சாப்பாட்டுக்குப் பிறகு கிளம்பணும். தலைச் சாமான், காசு மாலை எல்லாத்தையும் கழற்றிக் கொடு — வாடகைக்கு எடுத்துட்டு வந்தேன். எந்த வேளையில் எடுத்தேனோ இப்படியாச்சு!'' கோபத்துடன் படபடத்தாள்.

கழுத்தில் கனத்த காசு மாலையை எடுக்க முதலில் பூமாலையைக் கழற்ற மாதங்கி முயன்றபோது அது — காசு மாலையுடன் சிக்கிக் கொண்டு விட்டது.

''என்ன சிங்கிநாதம் பண்றே? கழுத்தில் விழுந்த மாலை கழற்ற முடியலைன்னு அந்தக் காலத்திலே ஒரு நாடகப் பாட்டுக் கேட்டிருக்கேன். அதுபோல ஆடறியா?...'' கோபத்துடன் கூறிவிட்டு அவள் கழுத்திலிருந்த மாலையை வேகமாக அப்புறப்படுத்த முயன்றாள்.

ரோஜாப் பூ இதழ்கள் பொல பொல வென்று தரையில் உதிர்ந்தன.

உள்ளே வந்த கஸ்தூரி பதறிப்போனாள்.

''இருங்க... அப்படி அவசரப்பட்டா... கல்யாணமாலைகளை அவிழ்த்து நான் வீட்டிலே எங்க அறையிலே மாட்டி வைக்கணும்னு நினைச்சுக்கிட்டு இருக்கேன். இங்கேயே உதறிக் கொட்டுகிறீர்களே? நியாயமா... இந்தத் தலை ஜோடிப்பை நாளைக்கு நானே கொண்டு வந்து உங்க வீட்டிலே கொடுத்துவிட மாட்டேனா? இதென்ன வைரச் செட்டா பயப்பட....'' எரிச்சலுடன் கூறிவிட்டு மாதங்கியை மெல்லத் தன் அருகே அழைத்துக்கொண்டாள்.

மாலையில் ஏற்பட்ட சிக்கலை லாகவமாகத் தளர்த்திப் பூமாலையைக் கழற்றி ஒரு கூடைக்குள் பத்திரமாக வைத்துக்கொண்டாள்.

''ரோஜாப்பூ மாலை சித்த நேரத்திலே கொட்டிப் போகும். ஊர் போறதுக்குள்ளே காஞ்சு போயிடும்....'' என்று முணு முணுத்தாள் சுமதி.

''மாலை காஞ்சு போனால் என்ன? கல்யாணத்தின் நினைவு பசுமையா எப்பவும் மனசிலே நிக்குமே!'' சுடச் சுடப் பதிலளித்த கஸ்தூரி காசு மாலை, தலை சாமான் அனைத்தையும் மெல்ல உருவி எடுத்துச் சுமதியிடம் கொடுத்தாள்.

''இவ்வளவுதானே? இன்னும் ஏதாவது பெண் கழுத்திலே நீங்க போட்டிருக்கீங்களான்னு பார்த்துக்குங்கோ. பிறகு பேச்சு ஏதும் வேண்டாம்.'' கண்டிப்பாக அவள் பேசியதைக் கேட்ட சுமதிக்கு முகம் சுருங்கிப் போயிற்று. தொடர்ந்து அங்கே நிற்க அவளுக்குப் பிடிக்கவில்லை. தன் மகளுக்குக் கிடைத்திருக்க வேண்டிய பாக்கியத்தை ஒரு நொடியில் தட்டிக் கொண்டு போய்விட்ட மாதங்கியைப் பார்க்க நெஞ்சு நெருப்பாக எரிந்தது.

''சாப்பிட்டுக்குப் பிறகு நாங்க கிளம்பணும். எங்களுக்கு ஊரில் கவனிக்க எத்தனையோ இருக்கு.'' இரு பொருள் படக் கூறிவிட்டுச் சுமதி அப்பால் சென்றுவிட்டாள்.

மாதங்கிக்குத் துக்கம் நெஞ்சை அடைத்தது. கல்யாண மண்டபத்தில் கூடியிருந்த பலர்... யார் யாரோ... அவளுக்கு நினைப்பு கூட இல்லை. தாலி கட்டியதும் அவளை நெருங்கி வந்து மலர் தூவிப் பாராட்டுதல்களையும் வாழ்த்துக்களையும் வழங்கிச் சென்றனர். அத்தனை ஆண்டுகள் அவர்களே கதி என்று அவள் பெரியப்பா குடும்பத்துடன் ஒட்டிக் கொண்டு வாழ்ந்தவள். அடிமையாக அவர்களுக்குப் பணிவிடைகள் செய்தவள். அந்தத் தருதிகளுக்காவது ஒரு வார்த்தை — ஒப்புக்காகிலும் பெரியப்பாவோ — பெரியம்மாவோ அவளை வாழ்த்தவில்லை. பாராட்டவில்லை. அதற்குப் பதில் பெரியம்மா சிடுசிடுவென்று என்னென்னவோ பேசிவிட்டாளே? தன்னைத் திரும்பிப் பாராது வெடுக்கென்று வெளியேறிவிட்ட பெரியம்மாவின் அசட்டையை நினைத்து மாதங்கி கண் கலங்கிப் போனாள்.

''என்ன இது... நல்ல நாளும் அதுவுமா?'' கஸ்தூரி விரைந்து வந்து மருமகளைத் தன் மார்புடன் அணைத்துக் கொண்டாள். கண்களில் கோடிட்ட கண்ணீரை மெல்லத் தன் கரத்தால் துடைத்து விட்டாள். ''காப்பிகூடச் சாப்பிடலே — பசியா இருக்கே. அதனாலே மனமும் பலவீனமாகிவிட்டது போல் பிரமிப்பு. கொஞ்சம் பால் கொண்டு வரச் சொல்றேன். சாப்பிடு. பிறகு நாம எல்லாரும் ஒரு பந்தியா உட்கார்ந்து விருந்து சாப்பிடுவோம். முகத்தைக் கழுவிப் பொட்டு வச்சுக்கிட்டுத் தலை வாரிக்கோ... என் பெட்டி மேலே உனக்கு மாத்துப் புடவை எடுத்து வைச்சிருக்கேன். காஷ்மீர் சில்க். இந்தப் புடவையைப் போலக் கனமா இருக்காது. அதைக் கட்டிக் கொண்டதும் உன் மனமும் லேசாகிப் போயிடும்....'' அன்போடு அவளது கன்னங்களை வருடினாள்.





மாதங்கிக்கு மிக்க ஆறுதலாக இருந்தது. சாப்பாட்டுக்குப் பின்னர் கல்யாணத்துக்கு வந்தவர்கள் விடை பெற்றுக் கொண்டு விட்டதால் மண்டபம் காலியாகத்தெரிந்தது.

கல்யாணத்துக்கு முன் ஏற்பட்ட கலவரத்தைச் சமாளிக்க அண்ணன் வேதாசலம் மாதங்கியை மனையில் வைக்கத் துணிந்து விட்டபோது ஹர்ஷன் உடனேயே சம்மதித்து விடவில்லை. பலவிதமாகப் பேசி வாதாடித் தான் அவர் வெற்றி பெற்றிருந்தார். ஆனாலும் அவர் மனத்தை ஒரு சந்தேகம் உறுத்திக் கொண்டுதானிருந்தது. வற்புறுத்தியதால் நடந்த கல்யாணம் — வேண்டாம் இந்தப் பெண் என்று பயல் பின்னால் மாதங்கியை உதறிவிட்டால்?

யாரோ பெற்ற பெண் குழந்தை! அவளைக் கண்கலங்க விடுவது மகா பாவமாயிற்றே. ஹர்ஷனுக்கு அந்த வாய்ப்பைக் கொடுக்கக் கூடாது. பரபரவென்று இரவே திட்டம் போட்டு விட்டிருந்தார் வேதாசலம்.

கல்யாண விருந்து முடிந்ததும் மணமக்களையும் கூட இருவரையும் காரில் ஏற்றிக் கொண்டு கிளம்பி விட்டார்.

''மாமா! இதெல்லாம் என்ன?'' கோபமாகக் கேட்ட ஹர்ஷனை அவர் பேசவிடவில்லை.

''நாளைக்கு நீ வெளி நாடு போகத் தீர்மானிச்சா பதிவுத் திருமணம் செய்து கொண்ட சான்றிதழ் தேவைப்படுமே. அதனாலேதான் உடனுக்குடன் பதிவுத் திருமணத்தை முடிச்சுட ஏற்பாடு செய்தேன். சாட்சிகளையும் கூட்டிக் கொண்டு வந்திருக்கேன். உம், வா உள்ளே.'' பதிவுத் திருமண அலுவலகத்துக்குள் அவனைத் தள்ளிக் கொண்டு சென்றார்.

''கஸ்தூரி! இனி கவலையை விடு. சாமிக்கு முன்னாலும் — சட்டத்துக்கு முன்னாலும் இந்தக் கல்யாணத்தை நடத்தி முடிச்சாச்சு. இதை இனி யாரும் அசைக்க முடியாது. புரிஞ்சுக்கோ...'' உற்சாகத்துடன் தங்கையிடம் வந்து ஆர்ப்பரித்தார்.

அவர்கள் அன்று மாலை ஊர் வந்து சேர்வதற்குள் இருட்டி விட்டது. முன்னதாகவே கிளம்பி வந்திருந்த உறவினர்கள் மணமக்களை வரவேற்க எல்லா ஏற்பாடுகளையும் செய்து முடித்திருந்தனர். காரிலிருந்து இறங்கிய மணமக்களை ஆரத்தி சுற்றி வரவேற்றாள் ஒரு சுமங்கலி.

''கல்யாணம் முடிந்த மறுநாள் என் மனைவி, 'உப்புமா கிண்டி அனுபவமுண்டா, கேசரி கிண்டி அனுபவமுண்டா, அல்வா கிண்டி அனுபவமுண்டா?' எனக் கேட்டாள்.''

''நீ என்ன சொன்னாய்?''

'' 'கிண்டி' அனுபவம் நிறைய உண்டு என்றேன்.''

- ஆரார்



வலது காலை எடுத்து வைத்துத்தான் மாதங்கி மருமகளாக அந்த வீட்டுக்குள் நுழைந்தாள்.

இரவு சாப்பாடு முடிந்தது. வந்தவர்களை அனைவரும் கிளம்பி விட்டனர். சற்று முன் சிரிப்பும் பேச்சுமாகக் கலகலத்த வீட்டில் இப்போது வேதாசலமும் அவர் மனைவியும், கஸ்தூரியும் மணமக்களும் மட்டுமே தான் இருந்தனர்.

அடுத்தபடியாக மணமக்கள் தேனிலவுக்கு பெங்களூருக்குக் கிளம்புவது என்று திட்டம். முன்னதாகவே அண்ணன் வேதாசலம் எடுத்த முடிவு — மெயில் வண்டிக்கு டிக்கட்டுகளை எடுத்துக் கொடுத்திருந்தார்.

மாடி அறையிலிருந்து அவன் மட்டுமே கையில் பெட்டியுடன் இறங்கி வருவதைக் கண்ட கஸ்தூரி திகைத்துப் போனாள்.

''மாதங்கி இன்னும் தயாராகலையா?... வண்டிக்கு நேரமாகுதே?'' கவலையுடன் கேட்டாள் கஸ்தூரி.

''அவள் வரப்போவதாக யார் சொன்னது? என் கம்பெனி காரியமாக நான் மட்டும் பெங்களூருக்குப் புறப்பட்டுக்கொண்டிருக்கிறேன்.''

மகன் சீறியதைக் கேட்டு வாயடைத்துப் போனாள் தாயார்.

''நீயும் உன் மனைவியும் பங்களூர், மைசூர் எல்லாம் சுத்திப் பார்க்கணும்னு ஏற்பாடு செய்துட்டு... இதென்ன விளையாட்டு...'' மாமா வேதாசலம் குறுக்கிட்டபோது ஹர்ஷன் வெகுண்டு போனான்.

''மாமா பெரியவங்களுக்கு நாலு பேர் முன்னாலே அவமானம் வரக் கூடாதுன்னு நான் உங்க முடிவுக்கு எதிர் பேசாது ஒப்புக் கொண்டேன். இனியும் நீங்க என் விஷயத்தில் குறுக்கிட்டால் நான் பொறுக்க மாட்டேன். சொல்லிட்டேன். உங்க இஷ்டத்துக்குக் கல்யாணத்தை நடத்தி வச்சுட்டீங்க. இஷ்டத்துக்கு நிம்மதியைத் தேடிக் கொண்டு நான் தனியே போகிறதைத் தடுக்கிறது தவறு... தடுக்கவும் விடமாட்டேன்.''

''என்னப்பா சொல்றே?''

''பெங்களூருக்கு நான் தனியாக் கிளம்பறேன். அவ்வளவுதான்.''

வேலையாளை விட்டுக் கொண்டு வரச் சொன்ன டாக்சியில் ஏறிக் கொண்டு ஹர்ஷன் போய்விட்டான்.

திகைப்பிலிருந்து விழித்துக் கொண்ட கஸ்தூரி மெல்ல மாடிப் படிகளைக் கடந்து மேலே வந்தாள்.

மணமக்களுக்காகத் தயாரிக்கப்பட்டிருந்த அறையின் கதவு ஒருக்களித்துக் கிடந்தது.

ஓசைப்படாது திறந்து கொண்டு உள்ளே வந்தவள் திடுக்கிட்டுப் போனாள்.

ஜன்னல் ஓரமாகச் சுவரின் மீது சாய்ந்து கொண்டு மாதங்கி விசித்து விசித்து அழுது கொண்டிருந்தாள்.

ஹர்ஷன் அவளிடம் கடுமையாகப் பேசியிருக்க வேண்டும். இதென்ன கொடுமை... ஒரு புது மணப் பெண்ணுக்குப் புக்ககத்தில் முதல் முதலாக இப்படி ஒரு வரவேற்பா?

கஸ்தூரி அதிர்ந்து போனாள்.

(தொடரும்)







திரைப்படவிழா:

பரிசு பெற்ற படங்கள்

தங்க மயில் பரிசைப் பகிர்ந்து கொண்ட படங்கள் இரண்டு: பல்கேரியப் படம் THE UNKNOWN SOLDIER'S PATENT LEATHER SHOES. மற்றொரு படம் 'ஆக்ரோஷ்' (ஹிந்தி).

பல்கேரியப் படம்: பல்கேரிய தேசியப் பண்பாட்டில் ஆழ வேரூன்றிய படம். நினைவலைகள்தான் படத்தின் ஆணிவேர். அவை மிக அழகாகப் படம் பிடிக்கப் பட்டிருக்கின்றன. நிகழ் காலத்தின் ஆரம்பம் லண்டனில். ஆனால் நினைவலைகளின் தொடக்கம் பல்கேரியாவில் உள்ள சிறு கிராமம். தான் வாழ்ந்த இடங்கள், தன் உறவினர்கள், நண்பர்கள், தனது கிராமத்தை வெள்ளம் நெருப்பு ஆகியவை அழிக்க முற்பட்டது... இப்படி நினைவலைகள் சிறகடித்துப் பறக்கின்றன கதாநாயகனுக்கு. நினைவலைகளுக்குப் புறாவை உவமையாக்கி அந்தப் புறாவும் சிறகடித்துப் பறக்கிறது. மெலிதான இடித்துக்காட்டல், இதயத்தை உலுக்குகிறது. சிறுவனாக நடிப்பவர் நம் உள்ளங்களைச் சிறைப் படுத்தி விடுகிறார்.

ஆக்ரோஷ்: மனைவியைக் கொலை செய்த குற்றத்துக்காகக் கைது செய்யப்படுகிறான் இளைஞன். அவன் குற்றத்தை ஒப்புக்கொள்ளவுமில்லை, மறுக்கவும் இல்லை. மவுனம்

1. தங்க மயில் பரிசு பெற்ற ஆக்ரோஷ் (ஹிந்தி) படத்தில் ஓர் உணர்ச்சிகரமான கட்டம்
2. தங்க மயில் பரிசு பெற்ற பல்கேரிய படத்தில் ஒரு காட்சி
3. விசேஷப் பரிசாக ஒரு வெள்ளி மயில் பெற்ற காறு தோசத்துப் படத்தில் ஒரு காட்சி
4. பல்கேரிய படமும் இந்தியப் படமும் முதல் பரிசைப் பகிர்ந்து கொள்கின்றன. இடதுபுறம் டைரக்டர்கள் வல்சனோவ், நிஹாலனி. வலதுபுறம் கைதட்டுவோர் அமைச்சர் சாத்தே, தேர்வுக்குழு தலைவர் சுக்ராய்





அவன்: "அந்தப் போட்டோவில் இருக்கிறது யாருடா... காலம் சென்ற உன் அப்பாவா..?"

"இவன்: "ஊஹூம்! ஒரு ஆபரேஷனின் மூலம் என் அப்பாவைக் காலம் சென்றவராக்கி நிறையச் சொத்துக்கு என்னை அதிபதியாக்கிய டாக்டர்!"

- உ. ராஜாஜி

சாதிக்கிறான்! அவனுக்காக வாதாட பாஸ்கர் என்ற வக்கீல் நியமிக்கப்படுகிறார். அரசாங்கத் தரப்பு வக்கீலாக இந்த வழக்குக்கு வாதாட வருபவரோ பாஸ்கரையே உருவாக்கிய வக்கீல். எது வந்தாலும் இந்த வழக்கில் வெற்றி பெற பாஸ்கர் முழு மூச்சாக உழைக்கிறார். ஒரு நாள் இரவு தாக்கப்படுகிறார். பல சம்பவங்களுக்குப் பிறகு குற்றவாளி யார் என்பதையும், பின்னணி என்ன என்பதையும் கண்டு பிடிக்கிறார். வழக்கில் வெற்றி பெறுவது முக்கியமா அல்லது நேர்மை, வாய்மை ஆகியவற்றின் பக்கமிருப்பது முக்கியமா? கதை உணர்ச்சிமயமாகிறது. நஸ்ருதீன் ஷா, ஸ்மிதா படேல் அம்ருத்புரி போன்ற தலைசிறந்த நட்சத்திரங்கள் படத்துக்கு உயிரூட்டி யிருக்கிறார்கள்.


VENETIAN LISE என்ற படத்துக்காகச் சிறந்த இயக்குனராகத் தேர்ந்தெடுக்கப் பட்டவர் STEFANO ROLLA. இவரது முதல் படமே இதுதான். தன்னைத் தத்து எடுத்துக் கொண்டு வளர்க்க முன்வரும் பெற்றோரை அடிக்கடி ஒரு காரணமும் இன்றி மாற்றிக் கொண்டே போகும் ஓர் இளைஞனைப் பற்றிய கதை. ஒரு வீட்டை விட்டு ஓடி இன்னொரு

டாக்டரிடம் வந்து வளவளவென்று தன் நோயைப் பற்றி இல்லாததை எல்லாம் பேசிக் கொண்டிருந்தான் அவன். 'வாயை அகலத் திறங்கள்' என்றார் பொறுமை இழந்த டாக்டர்.

அவன் அப்படியே செய்தான்.

"நான் பேஷண்டுகளைக் கவனித்துவிட்டு வரும் வரை அப்படியே இருங்கள்" என்றார் டாக்டர்.

- பிரியா பாநு



ஊரில் ஒரு தம்பதியிடம் சரண் புகுகிறான். அவர்களுக்கு இவன் மீது அன்பும் பாசமும் வளர ஆரம்பித்ததும் அவர்களைத் துறந்து ஒவ்வொரு வண்டியாகப் பிடித்து வேறு ஊர் செல்கிறான். அங்கு வேறொரு பெற்றோர் இவனை ஸ்வீகாரம் எடுத்துக் கொள்கிறார்கள். இதன் நடுவில் இவனை முன்பு வளர்த்த பெற்றோர் இவனைத் தேடிக் கண்டு பிடிக்கின்றனர். அவனை அழைத்துப் போக முயற்சி செய்கிறார்கள். வாக்குவாதம் முற்றித் தமது வளர்ப்பு மகனையே கொன்று விடுகிறார் தந்தை. அவனை வளர்த்த பெற்றோர்கள் அனைவருமே அழுகிறார்கள். யாரிடமும் ஒட்டாமல் வளரும் ஒருவனின் சோகக் கதை.

BALINT FABIAN MEETS GOD இந்த ஹங்கேரிப் படத்தின் கதாநாயகனாக நடித்த கோனெஸ் சிறந்த நடிகர் என்ற விருதும் வெள்ளி மயிலும் பெற்றார். முதல் உலகப் போரில் பாபின் என்ற ராணுவ வீரர் தம் எதிராளியான இத்தாலிய வீரரைக் கொன்று விடுகிறார். இத்தாலிய வீரரின் முகம் இவர் மனத்தில் ஆழப் பதிந்து விடுகிறது. இதனிடையில் பாபினின் மனைவி அந்த ஊர் மாதா கோவில் பாதிரியாரிடம் காதல் கொள்கிறாள். காதலனின் இரு மகன்களுக்கும் இது தெரிய வர அவனைக் கொலை செய்து விடுகிறார்கள். போருக்குப் பிறகு வீடு திரும்பும் பாபின், மனைவி ஏன் நொடித்துப் போயிருக்கிறாள் என்று கேட்க யாருமே சரியாகப் பதில் சொல்லவில்லை. குற்ற உணர்வு தரும் வேதனையில் மனைவி இறக்கிறாள். பாபின் நெருங்கிய நண்பர்கள், உறவினர்கள் எல்லோரிடமும் உண்மை என்ன என்று கேட்கிறார். மழுப்புகிறார்கள். கடவுளைத் தவிர வேறு யாருக்கும் உண்மை தெரியாது என்று பாபினுக்குத் தோன்றுகிறது. கடவுளிடமே கேட்க நினைத்துத் தற்கொலை செய்து கொள்கிறார். ஸோல்டான் ஃபேபரி இயக்கிய படம்.

சபீனு படத்தில் நடித்த ANGELA MOLINA என்பவருக்குத்தான் சிறந்த நடிகை விருது அளிக்கப்பட்டது. கதையைப் பற்றி 25–1–81 இதழில் காணலாம்.

புதிதாக முன்னேற்றம் அடைந்து வரும் நாடுகளை அலட்சியம் செய்து விட்டதாகக் கருதக் கூடாது. என்பதற்காகவோ என்னவோ ஒரு விசேஷப் பரிசு அறிவிக்கப் பட்டது. கானு நாடு இதனைப் பெற்றது. படத்தின் பெயர்: LOVE BREWED IN THE AFRICAN POT நாகரிக நங்கை படிப்பறிவில்லாத ஒருகார்மெக்கானிக்கைக் காதலிக்கிறாள். நங்கையின் தகப்பனாரோ அவள் ஒரு வக்கீலை மணக்க வேண்டுமென்று விரும்புகிறார். இந்த நிலையில் பிரச்னைகளுக்குப் பயந்து, எதிர்ப்புகளுக்கு அஞ்சி இளைஞன் ஓடி விடுகிறான். அவனைக் காதலித்த நாகரிகநங்கை பைத்தியமாகிறாள்.

இந்தப் பரிசு அறிவிப்புகளுடன் திரைப்பட விழா முடிவுற்றது. அதன் இனிமையான நேரங்களுடன் அது அளித்த கசப் புணர்வுகளும் நீண்ட நாட்கள் மனத்தில் இருக்கும். — சலன்



உட்வர்ட்ஸ் கிரைப் வாட்டர்

CAS/OPPL/3/80/TAM/C



அட்டைப்படத்தொடர்ச்சி

சிலவற்றை உதாரணங்களாகக் கூறலாம். அன்மைக் காலச்சரித்திரத்தை சுவாரஸ்யமாகவும் கட்டுக் கதை சேர்க்காமலும் படம் பிடிப்பது ரொம்பக் கஷ்டம். ஆனால் அதைச் சிறப்பாகச் செய்து முடித்திருக்கிறார், இந்தியாவில் பிறந்து. கென்யாவில் வாழும் இயக்குனர் ஷரத் பட்டேல்.

அவரிடம் சில கேள்விகள் எழுப்பினேன்:

கேள்வி: நீங்கள் இடி அமீனைப் பார்த்திருக்கிறீர்களா?

பதில்: ஓ! பார்த்திருக்கிறேன். கென்யா நாட்டுக்கு அவர் வந்தபோதெல்லாம் பார்த்திருக்கிறேன். ஒரு சில விருந்துகளில் சந்தித்தும் இருக்கிறேன்.

கே: உங்களுக்கு அமீன் வாழ்க்கையைப் படமெடுக்க வேண்டுமென்று எப்படித் தோன்றியது?

ப: நான் எடுக்கும் முதல் முழுநீளத் திரைப் படம் இதுதான் என்றாலும் இதற்கு மூன் நூற்றுக்கும் மேற்பட்ட டாக்குமெண்டரி படங்களை எடுத்திருக்கிறேன். இடி அமீனைப் பற்றிப் படமெடுக்க என்னைத் தூண்டியது என்னை ஆழமாகப் பாதித்த ஒரு சம்பவம்தான். இடி அமீனால் கொல்லப்பட்டார் என் நண்பர் அனில் கிளார்க். எனது உயிர்த்தோழர் கொல்லப்பட்டது என்னை அதிர்ச்சிக்குள்ளாக்கியது. அவனைப் போல் ஆயிரக் கணக்கான மக்களின் மரணத்துக்குக் காரணமானவன் அமீன். இந்தக் கொடுங்கோலனை உலகத்துக்குக் காட்டிக் கொடுக்க விரும்பினேன்.

கே: படம் எடுத்து முடிக்க எவ்வளவு நாட்களாயிற்று?

ப: திரைக் கதை, வசனங்கள் எழுதி முடித்து ஒரு வருடத்துக்குள் படம் முடிந்து விட்டது. ஆனால்

< இடி அமீனாக ஜோஸப் ஒலிடா
அமெரிக்க தூதராக அல்ஃப் ஊமிண்ட்

V இயக்குனர் ஷரத் பட்டேல்



அதற்கு முன் கிட்டத்தட்ட 500 பேர் மூன்று வருடங்களுக்கு மேலாக அமீனைப் பற்றி ஆராய்ச்சிகளைச் செய்து பல்வேறு விஷயங்களைச் சேகரித்தார்கள்.



கே: அமீனைப் போலவே உருவ ஒற்றுமையுள்ள ஜோசப் ஒலிடாவை எப்படிக் கண்டு பிடித்தீர்கள்?

ப: கென்யா நாட்டின் மேற்கு எல்லையில் பிறந்தவர் ஜோசப் ஒலிடா. இடி அமீன் ஆண்ட உகாண்டாவின் எல்லைக்கு அருகில்

காதலியுடன் அமீன் >

< படப்பிடிப்பின் போது நீச்சல் குளத்துக்குள் காமிரா! மையத்தில் டைரக்டர்

பிறந்து வளர்ந்தவர். அமீன் நடத்திய பல பயங்கரங்களை நேரில் கண்டவர். ஒருமுறை என்னை வேறு ஏதோ வேலையாகப் பார்க்க வந்தார் ஜோசப். அவரைப் பார்த்தவுடன் நான் அதிர்ச்சி அடைந்தேன். காரணம் இடி அமீனைப் போலவே உருவ ஒற்றுமை இருந்ததுதான். இந்தப் படம் ஆரம்பிக்கும் போது கூப்பிட்டு அனுப்பினேன். வந்தார். அமீன் மாதிரி நடிக்க மூன்று மாதங்களுக்கு மேல் பயிற்சி பெற்றார். அமீனைப் பற்றிய எல்லா விவரங்களையும் படித்தார். டாக்கு மெண்டரிகளைப் பார்த்தார். அமீனின் நடை உடை பாவனைகள் எல்லாவற்றையும் அப்படியே பின்பற்றினார். இப்பொழுது அவர் எங்கு சென்றாலும் அமீனை அழைத்தது போலவே அவரையும் பெரிய தந்தையே வாருங்கள் என்று மக்கள் வரவேற்கிறார்கள். ஆனால் ஒரு வித்தியாசம். அமீனை அப்படி அழைத்தது சட்டத்தால்; இவரை அழைப்பது அன்பால்!

கே: இந்த படத்தில் உள்ள மற்ற சிறப்பு அம்சங்கள் என்ன?

ப: 'ஸ்டார் வார்ஸ்' படத்துக்கு யார் ஸ்பெஷல் எஃபெக்ட் கொடுத்தார்களோ அவர்கள்தான் இந்தப் படத்துக்கும் உழைத்தார்கள். இந்தியாவில் தயாராகும் காந்திஜி படத்துக்கும் இவர்கள் சேவையே தொடர்கிறது. இடி அமீனால் துன்புறுத்தப்பட்ட டென்னிஸ் ஹில்ஸ் என்ற ஆங்கிலேயர் இந்தப் படத்தில் தமது பாகத்தில் தாமே நடிக்கிறார்.

கே: இப்பொழுது இடி அமீன் எங்கே இருக்கிறார் என்று உங்களுக்குத் தெரியுமா?

ப: ஏன் தெரியாமல்? தென் ஆப்பிரிக்காவில் சுற்றுலாப் பயணி என்ற பெயரில் உள்ளே நுழைந்து ஒரு ஐந்து நட்சத்திர ஓட்டலின் ஐந்தாவது மாடியில் தங்கி யிருக்கிறார். இவரைச் சுற்றி இவரது சொந்த மெய்க் காவலர்கள்.

கே: அமீன் உங்கள் படத்தைப் பார்த்தால் சீறுவாரே?

ப: அவரைப் பற்றி நான் படமெடுத்ததற்கு அவர் எனக்கு நன்றியல்லவா சொல்ல வேண்டும்!

நாற்பத்திரண்டே வயதான இளைஞர் இயக்குனர் ஷரத் பட்டேல். சாதாரண சிப்பாயாக இருந்து நாட்டின் மன்னனாகி மமதையால் வீழ்ச்சியுற்ற இடி அமீனைப் பற்றிய இந்தத் திரைப் படத்தில் என்டபீ விமான நிலையத்தில் நடந்த பயணக் கைதிகள் மீட்புப் போர்ச் சாகசம் மெய்சிலிர்க்கும் விதமாகப் படமாகியுள்ளது. —"சலன்"

இடி அமீன் வளர்ச்சியும், வீழ்ச்சியும்!



15

அதுவரையில் சுகுமாரன் மாடிக்கே வர வில்லை. அவளுக்கு ஆத்திரமாகவும் வியப்பாகவும் இருந்தது. அவன் எங்கே போனான்? அவனுடைய இடத்தில் ஒருவன் அத்துமீறிப் புகுந்து அடித்துக் கொண்டிருக்கும்வரை அவன் கீழே இருக்கிறானே! மேலே நடப்பது எதுவும் தெரியாமல் இருக்கிறானோ? அல்லது பரமேஸ்வரனை இன்னார் என்று தெரிந்து கொண்டு..... இதில் குறுக்கிடக் கூடாது குறுக்கிட வேண்டாம் என்று அவன் ஒதுங்கியிருக்கிறானோ?

பரமேஸ்வரன் கண்டபடி திட்டித் தீர்த்துக் கொண்டிருந்தான்.

''அம்பிகா உன்னைப் போல் அன்னக்காவடின்னு நினைச்சியா? அவ ஒரு லட்சாதிபதியோட மகள் தெரியுமா? அவளைப் போல ஒரு பெண்ணைக் கல்யாணம் செய்துகொள்ள வாய்ப்பு வரும்போது அந்த வாய்ப்பை உன்னைப் போன்ற அனாதைகள் தடுக்க விட மாட்டேன். நீ அவளுடன் சொன்னவுடன் என் முயற்சியை விட்டு விட்டு ஓடி விடுவேன்னு நினைச்சியா? அவளை மணப்பேனே தவிர உனக்கு வெற்றி கிடைக்க நான் விட மாட்டேன். அவளுக்கும் எனக்கும் கல்யாணம் நடக்கும்போது நீ உயிரோட இருக்கமாட்டே. இல்லாட்டா எங்கேயாவது ஒரு ஆஸ்பத்திரியிலே ஒரு காலை ''ஆம்புடேட்'' பண்ணிக்கிட்டு இன்னொரு காலை ஸ்லிங்கிலே தொங்கப் போட்டுக்கிட்டுக் கிடப்பே. அது மாதிரி செய்தே காட்டுவேன்.''

''கடைசியாகச் சொல்றேன். உனக்கு உயிர் மேலே ஆசை இருந்துதுன்னா இதோ— இப்ப நடந்ததே... இதையே ஒரு பால பாடமா நினைச்சுட்டுப் பேசாம ஒதுங்கிப் போயிடு. இல்லே சந்தி சிரிக்கிற மாதிரி பண்ணிடுவேன்.'' — அவன் தடதடவென்று படிகளில் இறங்கிப் போய்விட்டான்.

புயலைப் போல் வந்து கொடிகளையும் மரங்களையும் வேருடன் அடித்துச் சாய்ப்பது போல் சாய்த்துவிட்டுப் போன பின் அந்த மாடி அறையில் அமைதி நிலவியது.

கீழே வந்த பரமேஸ்வரன் மேஜை அருகே நின்று கொண்டிருந்த சுகுமாரனைப் பார்த்தான். இருவரும் அர்த்த புஷ்டியுடன் பரஸ்பரம் சிரித்துக் கொண்டனர். பரமேஸ்வரன் போய்விட்டான்.

மாடிப் படிகளில் மெதுவாக ஏறி வந்தான் சுகுமாரன். தன்னை நடிப்புக்குத் தயார்ப்படுத்திக்கொண்டான்.

நடு ஹாலில் சுமங்களா நிற்கும் கோலத்தைப் பார்த்துத் திடுக்கிட்டவன் போல் அவளிடம் ஓடிவந்து, ''என்ன இதெல்லாம்?'' என்று கேட்டான். முகத்தில் இரக்கம் சுரந்தது.

முழங்கை, கன்னம், நெற்றி ஆகிய இடங்களில் கசிந்த ரத்தத்தைக் கையால் துடைத்து, அதைப் பார்த்துவிட்டு, ''நெருப்புன்னு தெரியாமல் போய் ஒரு விட்டில் — அந்த வெந்தழலில் சில கணங்கள் சிக்கித் தவித்து, எப்படியோ தப்பி நிற்கிறது!

''அடடா! அவர் வந்து கேட்டதிலிருந்து உங்கள் கணவராகத்தான் இருக்க வேண்டுமென்று புரிந்து கொண்டு மேலே அனுப்பினேன். மேலே உங்கள் இருவருக்குமிடையில் அந்தரங்கமான விஷயம் பற்றி ஏதோ காரசாரமான பேச்சு நடக்கிறபோது நான் தலையிடக் கூடாதென்று கீழேயே இருந்து விட்டேன்.

''உங்களை அவர் உரிமையுடன் கைநீட்டி அடித்திருப்பார் என்பதையும்தெரிந்துகொண்டேன். நீங்கள் இரண்டு முறை சப்தம் போட்டபோதுகூட நான் பரபரப்புடன்தான் இருந்தேன். மேலே வரலாமா என்று துடித்தேன். அப்படி நான் தலையிடுவது உங்களுக்குப் பாதகமாக இருக்குமென்று வெறுமனே இருந்து விட்டேன்.''

அவனுடைய முகத்தைக் கவனித்தாள்.

இவன் உண்மை பேசுகிறானா?

பரமேஸ்வரனிடம் அடிபடும்போது 'சுகுமாரன்' என்று ஒரு முறை கத்தினாளே அப்பொழுது இவன் ஏன் வரவில்லை!

அவன் மாலையில் டெலிபோனில் யாருடனோ பேசியதும்... மேலும் அரை மணி நேரம் வேலை செய்யும்படி கூறியதும்...சிறிது நேரத்துக்கெல்லாம் பரமேஸ்வரன் வந்து நின்றவுடன் மாடி அறைகளில் இருந்தவர்களை அவசர அவசரமாக வெளியே அனுப்பினதும்... அதன் பிறகு மாடிக்கு நாலுக்காகத் தன்னை அனுப்பின கையுடன் பரமேஸ்வரனையும் மேலே அனுப்பி வைத்ததும்...

ஒரு முன்னேற்பாடான நிகழ்ச்சியோ?

அவனைப் பார்த்தாள்; புன்னகை மட்டும் சிரமப்பட்டுக் காட்டினாள்.

உள்ளே கனல்!

'ஏய் சுகுமாரனே... உன்னையும் நம்ப முடியாது. உன்னுக்குள் ஏதோ நரி வேலை செய்கிறாய் என்று நினைக்கிறேன்'—முகத்தை அழுத்தி முந்தானையால் துடைத்துக் கொண்டாள். ஒன்றும் பேசவில்லை. படி இறங்கிக் கீழே வந்தாள்.

விடியல் அணைக்க ஒளிக்கு

மகரிஷி

இமே நாலைந்து வாடிக்கையாளர்கள். சலவை செய்யப்பட்ட துணிகளை வாங்கிப் போகக் காத்திருந்தனர். அவர்களைக் கவனிக்க முடியவில்லை. டிரை கிளீனிங்கை விட்டு வெளியே வந்தாள்; ஆட்டோ ஒன்றை அழைத்தாள்.

அதில் ஏறிக் கிளம்பி விட்டாள் கமலா.

"நான் உங்களை நம்பத் தயாராக இல்லை. கமலா உங்களைப் பற்றி எல்லாம் கூறிவிட்டாள். அவளை ஏமாற்றியது போல் என்னையும் ஏமாற்றப் பார்க்கிறீர்கள்! திட்டம் அதுதானே!'' என்றாள் அம்பிகா கோபத்துடன்.

கதவுக்கு அப்பால் பரமேஸ்வரன் அப்படியே நின்றான். உள்ளே அவனை அனுமதிக்க அவள் விரும்பவில்லை. சாற்றித் தாழிடுவது போல் கதவை ஒரு கையால் பிடித்துக் கொண்டிருந்தாள்; முகத்தை வேறு பக்கம் திரும்பியபடி பேசினாள்.

''இல்லை, அம்பிகா! நீ அவள் சொன்னதை அப்படியே நம்பிவிட்டாய். நேற்றே எல்லாவற்றையும் விளக்கி விட்டேனே. இன்னும் என்னை நம்ப மாட்டேன் என்கிறாய்! நீ நினைப்பதுபோல் அவள் அப்படியொன்றும் ஒழுக்கமானவள் அல்ல. அவள் ஓர் அநாதை! இதை முதலில் தெரிந்துகொள். அவள் யார் யாரிடம் வளர்ந்தாள்; எப்படி வளர்ந்தாள்; படித்தாள் என்பது பற்றியெல்லாம் நீ தெரிந்து கொள்ள வேண்டாமா? அவள் வந்து சொன்னாள் என்பதற்காக எடுத்த எடுப்பில் என்மேல் சந்தேகம் கொள்வது நியாயமா?

''நான் அவளுடன் நெருக்கமாகப் பழக நிர்ப்பந்திக்கப்பட்டேன். அவள் வளர்ந்த குடும்பத்துக்கு நான் நிறையப் பணம் கொடுத்திருந்தேன். அவர்கள் நடத்திக் கொண்டிருந்த சோப் கம்பெனி திடீரென்று நஷ்



டத்தில் ஓடத் தொடங்கியது. அந்த நேரத்தில் அந்தக் கம்பெனியை விலைக்கு வாங்கி என் பொறுப்பில் மேற்கொண்டு நடத்தலாமென்று கிட்டே அணுகி விசாரிக்கத் தலைப்பட்டபோது ஏற்பட்ட தொடர்பு, அது.''

நிலைவாயிற்படியில் அவனை மறைத்துக் கொண்டு நின்றிருந்தவள் உள்ளே போனாள். இதைப் பயன்படுத்திக் கொண்டு பரமேஸ்வரன் உள்ளே நுழைந்து விட்டான்.

''பெண்கள் விஷயத்தில் எந்த ஆணும் நூற்றுக்கு நூறு யோக்கியமானவன் என்று நான் சொல்ல மாட்டேன். ஏனென்றால் என்னை அப்படிக் கூறிக்கொள்ள ஆசைப்படவில்லை. சுலபமாக அவளுடன் பழக வாய்ப்புக் கிடைத்தது. அவளுடைய வீட்டிலும் இதற்கு அனுசரணையாக இருந்தார்கள்.

''இந்தச் சாதகமான சூழ்நிலைதான் எல்லா வரம்பு மீறலுக்கும் காரணம். அவர்கள் இவளை என்னுடன் எந்தக் காரணத்துக்காகப் பழக விட்டார்கள் என்பது அவர்களுக்கே வெளிச்சம்.''

சோபாவில் முகத்தைத் திருப்பிக்கொண்டு அம்பிகா உட்கார்ந்திருந்தாள். முகம் ரத்தச் சிவப்பு.

அவள் முகத்திலிருந்து இன்னும் சாதாரண நிலையை அடையவில்லை என்பது தெரிந்தது.

ஆத்திரத்துடன் எழுந்தாள்; கண்ணாடி அலமாரியைத் திறந்தாள்; அந்தப் போட்டோவை எடுத்தாள். அவன் மேல் வீசி எறிந்தாள்.

''சரி... நீங்கள் சொன்னதை நம்புகிறேன். இதற்கென்ன பதில்?''

அவன் இதை எதிர்பார்க்கவில்லை. மிகுந்த ஆத்திரத்துடன் அதைத் துண்டு துண்டாகக் கிழிக்கப் போனான்.

''நோ...நோ... அதை நீங்கள் கிழிப்பதை அனுமதிக்க மாட்டேன். அதைக் கிழிக்கக் கூடாது. அது நாகரிகமும் அல்ல'' என்று பலமாகக் கத்திக் கொண்டே அந்தப் போட்டோவை அவனிடமிருந்து பிடுங்கினாள். போட்டோவைப் பத்திரப்படுத்திக் கொண்டாள்.

''இதை என் அப்பாவிடம் காட்டியாக வேண்டும். அவருடைய அபிப்பிராயம் தெரிய வேண்டும்'' என்றாள்.

''வேண்டாம், அம்பிகா! இதை அவரிடம் காட்ட வேண்டாம். எதாக இருந்தாலும் அதை நமக்குள் பேசித் தீர்த்துக் கொள்வோம். உன் அப்பா என் மேல் உயர்ந்த அபிப்பிராயம் வைத்திருக்கிறார். அவரிடம் இதைக் காண்பித்துக் குழப்ப வேண்டாம்'' என்று கெஞ்சினான்.

''இது நமக்குள் பேசித் தீர்த்துக்கொள்கிற விஷயம் மட்டுமல்ல... உங்களைப் பற்றிய சிக்கல் இது. நீங்கள் சொல்வது போல் பேசித் தீர்த்துக் கொள்கிற விஷயமல்ல. சில பேருடைய வாழ்க்கைத் தொடர்புடையது. சுமங்களாவின் வாழ்க்கை, என் வாழ்க்கை... உங்கள் வாழ்க்கை... இப்படியொரு சங்கிலித் தொடர் இதன் பின்னே இருக்கிறபோது நாம் மட்டும் பேசி எப்படித் தீர்த்துக் கொள்ள முடியும்?''

இவ்வளவு நேரம் குழம்பிப் போயிருந்த பரமேஸ்வரன் திடீரென்று தன் பக்கத்து அஸ்திரமாக மற்றொன்றைப் பிரயோகித்தான்.

''நான் இதுவரை சுமங்களாவைப் பற்றி மற்றொரு விஷயம் சொல்லவில்லை. அதாவது சொல்லப் பிடிக்கவில்லை. ஒரு அசம்பாவிதம் அதற்குள் இன்னொரு அசிங்கம். இதை வெளிப்படையாகச் சொல்லி அநாவசியமாக ஒரு பெண் மேல் மாசு கற்பிக்கும் நோக்கம் எனக்கில்லை. அதை அப்படியே விட்டு விடலாம்... பெரிது படுத்தவேண்டாம் என்று இருந்தேன். ஆனால் ஓர் அபவாதம் என் மேல் பலமாகத் தாக்கும்போது நான் அந்த உண்மையைச் சொல்லி என் பக்கத்து நியாயத்தை நிலைநாட்டிக் கொள்வதில் தவறொன்றுமில்லை.''

என்ன சொல்லப் போகிறான் என்று அவனையே கவனித்தாள்.

உதட்டை சரப்படுத்திக் கொண்டான். சோகத்துடன் கூறுவது போல — அதைச் சொல்லக் கொஞ்சம் கூட இஷ்டம் இல்லாதவன் போலப் பாவனை செய்தான்.

''அவள் யாருமற்ற அநாதை! நல்ல பெண் என்று எண்ணினேன்; ஆதரவு தரலாம் என்று பரிதாபப் பட்டேன். கல்யாணம் செய்து கொண்டேன். ஆனால் அவள் என்னுடன் ஏனோ வாழ வரவில்லை. தன்னுடைய பழைய காதலனுடன் ஓடிவிட்டாள்!''

தன் காதைப் பொத்திக் கொண்டாள் அம்பிகா.

அவன் தன் புனைந்துரைகளைத் திரிக்க ஆரம்பித்தான்.

''அப்படியொரு காதலன் அவளுக்கு இருப்பதே எனக்குத் தெரியாது. கல்யாணம் ஆன பிறகும் அவனுடனான தொடர்பை இவள் 'கட்' செய்துகொள்ளவில்லை. இதைத் தெரிந்து கொண்டு கண்டிக்கத் தொடங்கினேன். ஏற்கனவே திட்டமிட்டிருந்தபடி ஒரு நாள் ஓடிவிட்டாள், சாகஸக்காரி!''

''உண்மையாகவா?''

அவள் கையைப் பிடித்திழுத்து, ''சத்தியமாக'' என்று சத்தியவந்தனானான்.

''அவள் எங்கே இருக்கிறாள், என்ன செய்கிறாள் என்பது எனக்குத் தெரியும்! இப்பொழுது அவளுக்கும் அந்தக் காதலனுக்கும் நடுவே ஏதோ பூசல் தொடங்கி விட்டதாகக் கேள்விப்பட்டேன். என்னுடன் திரும்பி வந்து ஒட்டிக் கொள்ளப் பார்க்கிறாள். என் செல்வாக்கைக் குறைக்க அந்த இருவரும் வெகு நாளாகத் திட்டம் போடுகிறார்கள்.

''உங்க பேஷண்ட் உங்களுக்குத் தன் சொத்தை எழுதிவிட்டுப் போனாராமே!''

''அதிலே ஒரு சிக்கல்''

''என்ன?''

'' 'என்னைக் காப்பாற்றின டாக்டருக்கு' என்று எழுதித் தொலைத்துவிட்டார்!''

- செல்வபாண்டியன்





மங்கல மதிமுகத்தில் மெருகூட்ட
ஐடெக்ஸ்
டீலக்ஸ் குங்குமம்
(Matt Finish)
நாடெங்கணும் நாகரீக நங்கையர்
நாடி அணிவது ஐடெக்ஸ் குங்குமம்.
மங்கையரின் மலர்முகத்தின் இன்னழகை
எடுத்துக் காட்டுவதற்கெனவே
14 கண்கவர் வண்ணங்களில் கிடைக்கிறது.
சாஸ்திரிய முறைப்படி தயாரிக்கப்படும்
ஐடெக்ஸ் குங்குமம் சருமத்திற்கு எவ்வித
தீங்கும் விளைவிக்காதது.
ஐடெக்ஸ் 38 வருடங்களாக உங்கள்
நம்பிக்கைக்கு உரித்தான உயர்ந்ததோர் சின்னம்.
அரவிந்த் லாபரடரீஸ் சென்னை 600033

என்னிடம் நஷ்ட ஈடு வாங்க முயற்சி செய்கிறார்கள். என்னுடைய மறு விவாகத்துக்குத் தலையிட்டால் விவாகரத்து தனக்குக் கிடைக்கும்... நஷ்டஈடும் ஜீவனாம்சமும் வாங்கி விடலாம் என்று மனப்பால் குடிக்கிறார்கள்.''

அம்பிகா குழப்பம் சூழ்ந்த நிலையில் மனம் பேதலித்தாள்.

''அப்படியானால் நீங்கள் ஏன் அவளை விவாகரத்துச் செய்யக் கூடாது?''

''நல்ல யோசனைதான். உனக்கு ஆட்சேபணை இல்லையென்றால் நானே அவளுக்கு நோட்டீஸ் அனுப்பி விடுகிறேன். அதுமட்டுமல்ல; அவளுடைய காதலனையும் கோர்ட்டுக்கு இழுக்கிறேன்; கோர்ட்டிலேயே அதை நிரூபிக்கிறேன். கோர்ட் மூலமாகவே தீர்வுகட்டிவிடுகிறேன். அதன் பிறகாவது உன் மனம் சமாதானமடைகிறதா பார்க்கிறேன்'' என்று கூறினவன், ''நான் வருகிறேன். என்னையும், என் நேர்மையையும் நீயே பாராட்டப் போகிறாய்...! ஏனென்றால் என் பக்கம் உண்மை இருக்கிறது.''

அவன் வேகமாகக் கீழே இறங்கிப் போனான்.

உடம்பு முழுவதும் வலி. பரமேஸ்வரனின் உதை உள் வலியாகமாறி விட்டது.

மாடிப் படியிலிருந்து உருண்டு விழுந்து விட்டதாக டாக்டரிடம் ஒரு பொய் சொன்னாள், அவசரத்துக்கு.

ஒரு வாரமாக யாருக்கும் அவள் தகவல் தரவில்லை. அடிபட்ட நிலையில் உடலும் உள்ளமும்புண்பட்டுப் போய் மாடர்ன் டிரைக்ளினிங்கை விட்டு வெளியே வந்தவள் ஆட்டோவில் தன் அறைக்கு வந்து, தேவையான பணத்தை எடுத்துக்கொண்டு அதே ஆட்டோவில் மருத்துவ மனைக்கு வந்தாள்.

மருத்துவ மனைக்கு வருவதற்குள் ஆட்டோவிலேயே இரண்டு முறை மயங்கி விழுந்தெழுந்தாள். நடுவில் எங்கும் விழுந்துவிடக் கூடாது என்ற பயம் சுமங்களாவுக்கு

(தொடரும்)



'ஹாட்ரிக்' வெற்றி

''பல்கலைக் கழகங்களின் சரித்திரத்திலேயே முதல் தடவையாக டென்னிஸிலே இரண்டு தடவை 'ஹாட்ரிக்' வெற்றி கிடைச்சிருக்கு. 1955-56, 1956-57, 1957-58 ஆண்டுகளில் முதல் ஹாட்ரிக் வெற்றி. இரண்டாவது ஹாட்ரிக் வெற்றி 1978-79, 1979-80, 1980-81 ஆண்டுகளில் நிறைவேறியிருக்கிறது. எந்தப் பல்கலைக் கழகமும் அடைந்திராத பெருமை இது!'' என்று பூரிப்படைகிறார் சென்னை சர்வ கலாசாலை உடற் பயிற்சி இயக்குநர் திரு எஸ். சுப்பிரமணியம்.

ஜெய்ப்பூரில் நடைபெற்ற சர்வ கலாசாலைகளுக்கான டென்னிஸ் போட்டியில் சென்னை சர்வகலாசாலை ஆட்டக்காரர்கள் புதுடில்லி சர்வ கலாசாலை ஆட்டக்காரர்களை வென்றார்கள். வெற்றி வாகை சூடிய சென்னை சர்வ கலாசாலை குழுவில் இடம் பெற்றவர்கள் ரத்னகாந்த் வில்ஸன், ஜி. சதாசிவம், அஜேய் பட்டேல்.

இருபத்திரண்டு வயதுள்ள ரத்ன காந்த் வில்ஸன் சென்னை சட்டக் கல்லூரியில் 'பி.ஜி.எல்.' பயிலுகிறார். பதினெட்டு வயதுள்ள ஜி. சதாசிவமும் இருபத்திரண்டு வயதுள்ள அஜேய் பட்டேலும் கோயமுத்தூர் பி.எஸ். ஜி. பொறி இயல் கல்லூரியில் பி.ஈ. பட்டத்துக்குப் பயிலுபவர்கள்.


சென்னை சர்வ கலாசாலை சேர்ந்தாற்போல் மூனு வருஷம் தொடர்ந்து வெற்றி பெற்றதினாலே அந்தக் கோப்பையைப் போல் மற்றொரு 'பிரதி' கோப்பை செய்து நிரந்தரமாக வைத்துக் கொள்ளும் உரிமையைப் பெறுகிறது.

1980-81ம் ஆண்டுகளில் சர்வ கலாசாலைகளுக்கான 24 விளையாட்டுப் போட்டிகளில் சென்னை சர்வ கலாசாலை வென்ற போட்டிகளின் எண்ணிக்கை 13.

ஆடவர்களுக்கான கூடைப் பந்தாட்டத்தில் இரண்டாவது முறை வெற்றி கிட்டியது. படகோட்டும் போட்டியில் சென்னை சர்வ கலாசாலை மாணவர்கள் இரண்டாவது தடவையும் தொடர்ந்து கீர்த்தி பெற்றார்கள். இந்த வெற்றிகளில் 'ஹாட்ரிக்' டென்னிஸ் வெற்றி சென்னை சர்வ கலாசாலையின் புகழை விளையாட்டு உலகில் ஒரேயடியாக உயர்த்தி விட்டது!

— குண்டுமணி

படம் : ஆட்டக்காரர்கள்: ரத்னகாந்த்வில்ஸன், ஜி. சதாசிவம், அஜேய் பட்டேல், எஸ். சுப்பிரமணியம், (இயக்குநர்) பரண்டிரங்கன் .(உதவி இயக்குநர்),மானேஜர்.


ஒரு மங்கையின்
வாழ்வில் மிக
இனிமையான
நேரங்களில்
இணைந்திருப்பது கட்டாவ்.
கட்டாவின் டெர்கோஸா ஸாரிகள்
Rediffusion/K/1221c TM



கம்ப்யூட்டர் பூக்கள்

கார்த்திகா ராஜ்குமார்

2035வது வருடம், டிசம்பரின் முதல் வெள்ளிக் கிழமை.

''வா யஷ்மின், உட்கார்.'' — சீக்ஸ்.

யஷ்மின் தன்னைத் தளர்த்திக் கொண்டான். கவனமானான்.

வழக்கமான சம்பிரதாய விவகாரங்கள். பிறகு....

''யஷ்மின் அந்தச் 'சிலபேர் திடீர் மறைவு' விஷயமா நேத்தைக்கு நோட் வந்திருக்க. இதோட இப்படி நடக்கிறது ஏழாவது டைம். என்ன பண்றீங்க? டேக் இமீடியட் ஆக்ஷன்னு.

''முகம் தெரியாத ஒருத்தராலே தெரிஞ்சுக்க முடியாத இடத்துக்குப் புரிஞ்சுக்க முடியாத காரணங்களுக்காக 'அவங்க' — அந்தச் சிலபேர் கடத்தப்பட்டருங்கன்னு நினைக்கிறேன். எல்லா விவரங்களும், காரணங்களும், மர்மங்களும் எனக்குத் தெரிஞ்சாகணும் யஷ்மின். இதோ இது தொடர்பான ஃபைல்ஸ்.''

ஃபைலை வாங்கிக் கொண்டான் யஷ்மின்.

யஷ்மின். 2008ல் பிறந்து இப்பொழுது 175சி.எம். உயரமாய் இருக்கும் திடகாத்திரம். அடர்ந்த புருவங்களின் கீழ் துருதுருவென்ற கண்கள். மொழுக்-மொழுக் ஷேவிங். ஷார்ப்பான மூக்கு. ரிம்லெஸ் ஸ்பெக்ஸ்.

யஷ்மின் ஃபைலில் இருந்தவர்களின் விஷயங்களில் இருந்த பொதுவான அம்சங்களைத் திரட்ட ஜெனரலைஸ் கம்ப்யூட்டர் ஜி.வி.-19ஐ உதவிக்குக் கூப்பிட ஃபீட் பண்ணிய இரண்டாவது மணி நேரத்தில்...

டிரிப் டிரிப்பென்று விஷயங்களைப் பேப்பரில் பிதுக்கியது.

AGE: IN THE CASE OF MEN 25–28: IN WOMEN 20–23

DISAPPEARENCE PERIOD: 3 MONTHS 75% CASES (MAXIMUM 5 MONTHS) GENRAL FEATURES: ALL ARE EDUCATED WELLDEVELOPED.

REMEMBARANCE OF THE 'D' PERIOD: LIKE SOME SWEET DREAMS 40% LIKE HAVING SOME NICE EXPERIENCE BUT CANNOT EXPRESS IN WORDS 50% NOTHING SIMPLY BLANK. LIKE A DEEP SLEEP-40%...

இப்படி இன்னும் பொதுவான விஷயங்கள். இருந்தவைகளில் சற்று வித்தியாசமான வைகளைத் துளாவியபொழுது, இந்த 'ராகேஷ்' கேஸ் யஷ்மின் மனத்தில் வெகுவாய் உறுத்த...

"வாட்! யு வான்ட் ராகேஷ். யா. தட்ஸ் மீ'' என்றபடி ஒரு புன்னகையைச் சரக்கென்று உதிர்த்துவிட்டு, சீரியஸானான் அந்த 29 வயது இளைஞன்.

165 கி.மீ. வேகத்தில் பறந்த பின், அவசரமாய் இந்த 42 ஸ்டோரி காம்ப்ளக்ஸ் லிப்டில் கண்ணை உறுத்திய 21 வயது 90-70-95' செ.எம். அலட்சியம் செய்து ராகேஷ், ராகேஷ், என்று அலைந்தது வீணாகவில்லை.

''ஐ ஆம் யஷ்மின்'' ஸ்நேகமாய்ச் சிரித்துக் கை நீட்டிய யஷ்மினைத் தன் ஸ்பெக்ஸ் வழியே ஆராய்ந்தான் ராகேஷ்.

''ஐ ஆம் எ ஜர்னலிஸ்ட். சில விஷயங்களை விவரமாய்ச் சொன்னீங்கன்னு ரொம்ப உதவியாயிருக்கும் எனக்கு. எல்லாமே கான்ஃபிடென்ஷியலா வைச்சுக்குவேன்.''

ராகேஷ் முடிவெடுக்க யோசிக்கு முன்– அவனைப் பற்றி...

ஓய். ராகேஷ். 29.11.2006. 165செ.எம். சதுர முகம். பூனைக் கண்கள். சதுரக் கண்ணாடிகளுக்குப் பின் பாதுகாப்பாகத் இரிந்தன. நீண்ட 'சிலை' மூக்கு. பிளவுபட்ட உதடுகள். எல்லாமே திடம். சிவப்பு நிற பனியனில் E-32 MY FRIEND (E-32 மனிதனை REPLACE பண்ணி மனிதனும் மனிதனுக்கு எதிராக வளர்ந்து கொண்டிருக்கிற கம்ப்யூட்டர் ரகம்) MY FRIENDக்குக் கீழ் . சின்ன பாக்கெட்டில் நிறைய சின்ன சின்ன ஆயுதங்கள்... அப்புறம்...

''ஓ கே. யஷ்மின். ஐ வில் டெல் யூ எவ்ரிதிங்க். நான் ஒரு எலக்ட்ரானிக் எஞ்சினியர். மே மாசம் ஒரு நாள் ஷாப்பிங் போறப்ப, யாரோ கார்லே இருந்து கூப்பிட்ட மாதிரி இருக்க, காருக்குள் எட்டிப் பார்க்க... அவ்வளவுதான் தெரியும். பிறகு நடந்ததெல்லாம் ரொம்ப மங்கலாத்தான் நினைவிலே இருக்கு. பெரிய ஹால். ஆஸ்பத்திரி மாதிரி நிறைய பெட்ஸ். பிறகு நடக்கறோம். எழுந்து போகறோம். சில வித்தியாசமான; விவரிக்க முடியாத அனுபவங்கள் இப்ப யோசித்துப்பாக்கறப்ப தெளிவா எதுவுமே புரியலே.

''மறுபடியும் இந்த மாதிரி எக்ஸ்பீரியன்ஸுக்காக விரும்பி, அதெல்லாம் என்னன்னு கண்டு பிடிக்கச் சில டிவைசஸ்களைத் தயார் செய்துட்டு அலையறேன். முடியலே இல்லே. செய்தவைகளை யூஸ் பண்ணவே முடியலே.''

நிஜமாய் வருத்தப்பட்டான் ராகேஷ்.

''ராகேஷ்... அப்படின்னு நான் அவைகளைக் கண்டுபிடிக்க நீங்க ஏன் உதவக்கூடாது?'' சந்தேகமாய்ப் பார்த்த ராகேஷை கன்வின்ஸ் செய்து அவனின் 'ஆராய்ச்சிக் கனி'களை வாங்கிக் கொண்டாள் யஷ்மின். மறைந்து போய்த் திரும்பியவர்களின் முக்கிய தருதிகள் எல்லாவற்றிலும் செக்-அப் செய்து கொண்டு, அந்தப் பாதுகாப்பு சாதனங்களுடன் முகம் தெரியாத எதிரிக்காகக் காதலுடன் யஷ்மின் சுற்றி அலைந்த பத்தாவது நாளில்...

பரிச்சயமில்லாத மூன்று பேர் திடுமென்று வந்து எதையோ பேச ஆரம்பிக்க யஷ்மின் குழப்பிக் கொண்டிருந்த சில நிமிடங்களில் ஒருவரின் கையிலிருந்த 'ஒன்று' ஆவேசமாய் யஷ்மினை ஸ்பரிசிக்க...

கண்ணை விழிக்க முயன்றாள் யஷ்மின். வலி தெரிந்தது. அவுட் ஆஃப் ஃபோகஸில் வெள்ளை உடைக்காரி ஒருத்தி மிதந்து வந்து ''இன்ஜெக்ஷன் கொடுத்திடலாமே...'' என்று கிரீச்சிட்டாள். சில கணங்களில் இன்செக்ஷன் நீடிலின் ஸ்பரிச சுருக்! இமர் தூக்கம்! தூக்..க!

மீண்டும் கண்ணைத் திறக்க உணர்வு வந்து. ரகசியமாய், ஜாக்கிரதையாய்த் திறந்த பொழுது....

ஒருவிதமான ர்ர்ர்ர்ர்ரைத் தவிர நிசப்தம். மெல்லத் தலையைத் தூக்கிப் பார்க்க.... பெரிய ஹாலில் நிறைய இளைஞர்கள்–தூக்கமாய்.... யோசித்தாள் யஷ்மின். 'எனக்கு மட்டும் இவ்வளவு சீக்கிரம் முழிப்பு வரக் காரணம்.... ஒருவேளை ஏற்கனவே எடுத் இருந்த ஆண்டி.... டிரக்கின் வேலையோ? எப்படியோ போகட்டும். நிதானம்...கவனம் – இனி அத்தியாவசியம்.


ராகேஷ் கொடுத்து அவளுள் மறைத் இருந்த எலக்ட்ரானிக் டிவைஸ்களை ரகசியமாய்ச் சரிபார்த்தாள். கண்களை மூடியபடி காத்திருக்க... ஒருவர் வந்து எழுப்பி...

நடந்து கொண்டிருந்த பத்துப் பேரில் ஏழாவதாக, மேலே போடப்பட்ட வெள்ளை ஏப்ரனுடன் நடக்க, அவளின் சகாக்கள் ஏதோ மெஸ்மரிஸத்துக்கு உட்பட்டவர்களைப் போல விரைத்துக் கொண்டு போக... யஷ்மினும் அப்படியே நடித்தாள்.

பெரிய விஸ்தாரமான ஹால். ஆனால் ஏதோ மௌன ரகஸ்யம் எங்கும் விரவியிருக்க... ஹாலின் ஸ்டேஜில் – கறுப்பு வெளுப்பு முடியும், பெரிய மீசையும் டைப்பாக, லட்சியக் கனவுகள் கண்களில் பிதுங்க

பாலத்தைக் கவரை இடித்துக்கொண்டு ஆற்றில் விழுந்து தண்ணீரில் மிதந்து செல்லும் காரினுள் இருந்த முதலாளி டிரைவரைக் கேட்கிறார்: ' புது வண்டியை வெள்ளோட்டம் விடச்சொன்னா வெள்ளத்தில் ஓட்டம் விட்டுட்டியே...?''

- உ. ராஜாஜி



ஒரு அறுபது வயது. வசதியான இருக்கையில் ஆரோகணித்திருந்தது.

''யங் மென் மீட் யுவர் புரொபஸர் பைரன்! சே குட் மார்னிங்!'' -சிக்ஸ்டிராக் ஸ்டீரியோ ஸ்பீக்கர்களில் ஒரு குரல்!

புரொபசர் பைரன் எழுந்து நின்று அவர் களைப் பிரேமையுடன் பார்த்து, ஆழமாய்ப் புன்னகைத்தார். ஒரு சின்னக் கூண்டுக்குள் போய், மறுபடியும் புன்னகைகளைத் தாராள மாய் உதிர்த்துவிட்டு, பேச ஆரம்பித்தார்.

''மை டியர் யங்மென், மை ஹார்ட்டி வெல்கம் டு யூ ஆல். அஃப்கோர்ஸ் உங்களை நாங்க கொண்டு வந்த வழிக்காக... ரியலி ஐ ஆம் ஸாரி. ஆனா இப்ப இருக்கிற நாச மாகிக் கொண்டிருக்கிற சமுதாயத்திலே— என்னுல ஏற்படப் போகிற அதிசயமான மாற்றங்களுக்கு நீங்க காரணமா இருக்கப் போறீங்க. உங்களோட தியாகத்தை, சேவைகளை நாங்க பயன்படுத்திக்கப்போறோம் —ஒரு வகையில கட்டாயமாகத்தான்.

''உங்களைத் தியாகம் செய்ய வைக்கிற மனநிலைக்குக் கொண்டு வந்து வாங்கிக்கிறோம். அதுவும் கூட ஒன்லி ஃபார் எ ஷார்ட் டைம்.''

மறுபடி ஒரு புன்னகையுடன் நிறுத்திக் கொண்டார்.

இரண்டு பேர் அவர்களை அழைத்துக் கொண்டு போய், நிறைய நேரம் கழித்து, பெரிய பெரிய நாற்காலிகளில் புதைய வைத்து ப்ளேட் வேண்டிங் ஆகும்போது செய்யும் ஏற்பாடுகளைப் போல் செய்து...

முன் பக்கம் வரிசையாய் வியாபித்து இருந்த கம்ப்யூட்டர்களின் சிவப்பு, ஆரஞ்சு, பச்சை விளக்குகள் கண் சிமிட்டி, டிரிப்... டிரிப் என...

யஷ்மின் குழம்பிக் கொண்டிருந்தான்.

'என்ன நடக்கப் போகிறது?' அவன் தலைக்கு மேல் இருந்த ஹெல்மெட்டுக்குள் மெல்லிய டிர்ர்ர்ர்ரிக் கொண்டிருக்க... தூக்க மாய் உணர்ந்தான். திடீரென்று யாரோ உலுக்க நிமிர்ந்தான்.


பைரன் அவனை சுவாரஸ்யமாய் ரசித்து, ஒரு புன்னகையை பைப்புடன் ஊதி, பின் யோசித்து, நிதானமாய், கனமான குரலில், ''ஹூ ஆர் யு மை டியர் யங்மென்?'' என்றார்.

''புரொபசர், நான் உண்மையைச் சொல் லிடறேன். நான் ஒரு ஃப்ரீ லான்ஸ் ஜர்ன லிஸ்ட். நிறைய கேசின்ஸ்லே என்னோட இன்வெஸ்டிகேட்டிவ் டைப் விஷயங்களுக்குக் கிராக்கி அதிகம். அதான் திடீர் திடீர்னு பெயர் காணமப் போற விஷயமா... கண்டுபிடிக்க... ஸாரி, டைரெக்ட்டா அப் படிச் சொல்லிட முடியாது... அது... வந்து''

அவன் சொல்லி முடிக்கு முன் அவசரமாகக் குறுக்கிடல்.

''ஓகே... ஓகே... அப்படின்னா நீ ஏன் இந்த எலக்ட்ரானிக் டிவைஸ்களை உன்கிட்ட வைச்சிக்கணும்? அதுவும் மறைச்சு?''

''அ....அது... எல்லாம் இதே விஷயமா நாஃ போறேன்னதும் என் ப்ரண்ட் ஒருத்தன் – அவன் எலக்ட்ரானிக்ஸ் என்ஜினியர்— கொடுத்தான். ஒன்லி ஃபார் ஸேஃப்டி ஸேக்,



மணலைக் கயிறாகத் திரிக்க முடியுமா?

''மணலைக் கயிறாகத் திரிக்க முடியுமா?'' என்பது ஒரு பழமொழி.

ஆனால் மணலையே கயிறாகத் திரித்திருக்கிறார் ஒரு தொழில் மேதை. அவர்தான் ஜி.டி நாயுடு.

சில ரசாயனச் சேர்க்கையுடன் அவர் மணலைக் கயிறாகப் பல வண்ணங்களில் திரித்து வைத்திருப்பதை இப்போதும் அவருடைய பொருட்காட்சியில் காணலாம். நேரில் கண்டு வியந்தவர்: - வ. தேனப்பன்

மை குட்னஸ். எப்படித் தெரிஞ்சது உங் களுக்கு....

கனக் கனக்கென்ற சிரிப்பு.

''கிரெடிட் கோஸ் டு அவர் கம்ப்யூட் டர்ஸ்.''

சஸ்பென்ஸுடன் சில நிமிட மௌனங்கள்.

''ஓகே. யஷ்மின். ஏஸ் எ பிரஸ்மேன் உனக்குச் சில விஷயங்களைச் சொல்றேன்— நாளைக்கு நீ போகலாம்.''

இரண்டு பேர் அவனுக்காகக் காத்திருக்க 'ஒரு ஆச்சரியப் பந்து' அவனுள் வெடித்துப் பரவியது.

''யஷ்மின் இப்ப இருக்கிற சமுதாயத் தோட நிலையைப் பார்த்தியா? திஸ் ப்ரசன்ட் சொஸைட்டிலே நோ மொராலிட்டி. செக்ஸ் வக்கிரங்கள் சகஜமாயிடுச்சு. சோகமாகிப் போய்க் கவலையோட யோசிச்சிட்டு இருந்த சமயத்திலேதான் இந்த ஐடியா எனக்கு ஸ்ட்ரைக் ஆக, இந்த ப்ராஜக்டை ஆரம்பிச் சேன்.கவனி யஷ்மின்.ஒரு புதிய தலைமுறையை உருவாக்கி அழுகிப் போய்ட்டு இருக்கிற இந் தச் சமுதாயத்தைச் சீர்ப்படுத்தப் போறேன். சொல்றேன் உனக்கு.''

ஒரு மகா வியப்பு அவனுக்குள் ஜிவுக் கென்று வியாபித்தது.

புரொபசர் பைரனின் பிரத்தியேக கேபின். அறையில் பாதி கம்ப்யூட்டர்கள்— கன்ட்ரோல் போர்டுகள். ஒரு ஈ-32 பவ்ய மான வேலைக்காரனும் – பளபளக்கும் கை களில் ஜூஸ் பாட்டில்கள் கிளாஸ் சகித மாய் இருக்க....

கேபினுள் கம்ப்யூட்டர்களின் டிரிப்... டிரிப்கள், சில டக்...டக்... டர்ர்ர்ர்ர்கள், இன்னும் சில விசித்திர கசமுசா சப்தங்கள். நிறைய குளோஸ் சர்க்யூட் டி.வி.கள். இத்தனைக்கும் நடுவில் சின்னதாய்க் கண்ணாடி அறை. உள்ளே நுழைந்தவுடன் கப் சிப் நிசப்தம். யஷ்மினை உட்காரச் சொல்லி விட்டு, தானும் அந்தப் பெரிய்ய சேரில் புதைத்து கொண்டு கனவுப் பார்வையுடன் குரலில் லட்சியம் வழிய பேச ஆரம்பித்தார் பைரன். (தம் சொற்பொழிவை...)

''அன்பான யஷ்மின், ஒரு புதிய தலை முறையை எப்படி நான் உருவாக்கப் போறேன்னு சொல்றேன் கேட்கறயா?

என்னோட புனிதமான நோக்கத்தைப் புரிஞ்சுக்க யஷ்மின்.

''முதல்லே உன்னை மாதிரி யங், எஜு கேடட் இளைஞர்களைக் கடத்திட்டு வரோம். ஆரம்பத்திலே பலவந்தமாத்தான் – இந்த இடத்துக்கு.

''அவங்க தங்களோட பழைய நினைவுகளை மறக்க, எங்களோட இந்தப் புதிய சூழ் நிலைகளுக்கு வர டிரக் இன்ஜக்ஷன். கிட்டத் தட்ட போதை இன்ஜெக்ஷன் மாதிரி. பிறகு நாட்ஸ் இன்ஜெக்டிவ் கம்ப்யூட்டர் வழியே– கிட்டத்தட்ட இது ப்ரைன் வாஷ் மாதிரி. ஆனா இந்த ப்ரைன் வாஷ் தற்காலிகமாகத் தான் இருக்கும். இருக்க முடியும். கொஞ்ச நாட்களுக்கு அவங்க எங்களோட கண்ட் ரோல்ல இருக்கிற உயிருள்ள கம்ப்யூட் டர்கள்.''

''ஓ! இதெல்லாம் எதுக்கு புரொபசர்? எதுக்கு இந்த ப்ரைன் வாஷ், அதனாலே உங்களுக்கு என்ன ஆயிடப் போறது?''


''ஒரு சைன்டிஃபிக் சீக்ரெட் சொல் றேன். கேட்டுக்க, யஷ்மின். செக்ஸுவல் இன் டர் கோர்ஸ்லே வெளிப்படற செமன்லே இருக்கிற ஸ்பர்மாட்டோ ஜுவான்ஸ்லே... 'ஜீன்'னு சொல்லப்படற ஒரு அம்சம் உண்டு. கெமிகலா பார்த்தா அது வெறும் R N A டைப் கெமிகல் ஸ்டிரெக்சர்ஸ்தான். ஆனா அதிசயமா இவைகள்லேதான் ஒருத்தரோட குணங்கள் மறைஞ்சு இருக்கு. அடங்கி இருக்கு.

''எங்களோட சித்தாந்தங்களையே 24 மணி நேரமும் நினைச்சிட்டு இருக்கிற இந்த நிலை யிலே அவங்களோ ஜீன்லே இருக்கிற கெமிகல் ஸ்டிரெக்சர்ஸ்லே இருக்கிற குணங்கள் நிச்சயமா நாங்க நினைக்கிற,, சொல்ற, எதிர்பார்க்கிற வகையிலேதான் அமையும்னு நம்பறோம். எதிர்பார்க்கிறோம்.

''முழுசா இப்படி எங்க சிந்தனைகள்ல அவங் களைப் பக்குவப்படுத்தின பின்னாலே அவங் கள்லே இருந்து செமெனை எடுத்து நிறைய டெஸ்ட் ட்யூப் பேபீஸ்களை உருவாக்கிட்டு இருக்கிறோம். இப்படி நிறைய டெஸ்ட் டியூப் பேபீஸ் உருவாகிட்டு இருக்காங்க தெரியுமா?''

புரொபசரின் பெருமிதம் யஷ்மின் வயிற் றில் பய எக்ஸாஸ்டரை ஸ்டார்ட் செய்ய, வேசாய் முகம் வெளிறிப் போனான்.

> டிக்ஷனரி படிப்பதில் ஆசையுள்ள அறிஞர்கள் பலர். லார்ட்பிட், லார்ட்சேத்தம் என்ற அறிஞர் களுக்கு டிக்ஷனரியில் இருந்த எல்லா வார்த்தை களும் தெரிந்திருந்தன. ராபர்ட் பிரவுனிங் டிக் ஷனரி முழுவதையும் தினமும் படிப்பார். ஆபிர காம் லிங்கனுக்கு டிக்ஷனரியைக் கையில் எடுத்து விட்டால் நேரம் போவதே தெரியாது.
>
> -பிரியா பாலு



''போகலாமா யஷ்மின்?''

கண்ணாடி அறையிலிருந்து வந்தவுடன் ஈ-3 2விடம் ஜூஸ் வாங்கி யஷ்மினிடம் கொடுத்துவிட்டு, தானும் ஒன்றை எடுத்து 'சிப்'பிக்கொண்டு ஒரு டி.வி.யைத் தொட....

கோடுகளுடன் ஒளிர்ந்த ஸ்கிரீனில் அந்தப் பெரிய இடத்தின் பல பகுதிகள் தெரிந்தன. அந்த ஹால், இன்ஜெக்ஷன் விவரங்கள், ப்ரைன் வாஷ்.... இத்யாதிகள் நடக்கும் இடங்கள்.....

ஜூஸை 'சிப்'பிவிட்டு, புன்னகையுடன் திருப்தியுடன் இன்னொரு டி.வி.யை ஆன் செய்ய....

''யஷ்மின் இந்தக் கெட்டுப்போன சமு தாயத்தை மாத்தறதுக்கு உருவாக்கிட்டு இருக்கிற நவீன அவதாரங்களைப் பார்த் தாயா''

ஸ்க்ரீனில் உருவாகிக் கொண்டிருக்கும் டெஸ்ட் ட்யூப் பேபீஸ்களின் பல நிலைகள் ஒளிர்ந்தன.

தம் ஆராய்ச்சிக் கனிகளை காதலுடன் பார்த்தார் புரொபசர்.

''நாளைக்குச் சந்திக்கலாம் யஷ்மின்.''

மிகவும் சங்கடமாய் உணர்ந்தான் யஷ்மின். திடுமென்று வெகு சுலபமாய்த் தெரிந்து கொண்ட விஷயங்கள் அவனுள் ஜீரணமாகாமல் அப்படியே இருந்தன. குழம்பினான். எந்த நம்பிக்கைகளில் என் னிடம் இதையெல்லாம் சொன்னார்? ஒரு வேளை அந்தக் கிழம் என்னிடம் ஏமாந்து விட்டதோ?

சரி, இப்பொழுது நான் என்ன செய்வது? ஏதோ என் அதிர்ஷ்டம், அவ்வளவு கண் காணிப்பு இல்லாமல் என்னை விட்டுவைத்து இருக்கிறது. இருக்கிற சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தித் தப்பிப் போவதுதான் புத்தி சாலித்தனம்.'

ஆசை மனத்துள் உந்தியது.

ஜாக்கிரதைப் பார்வையைச் சுற்றிலும் சுழல விட்டு விட்டு அறையின் வாசலுக்கு வந்தான் யஷ்மின்.

யஷ்மினுடைய இத்தனை செய்கைகளையும் சின்ன குளோஸ் சர்க்யூட் டி.வி.யில் சோகமாய்ப் பார்த்துக் கொண்டிருந்தார்கள் புரொபசர் பைரனும், அவருடைய உதவி யாளர்கள் இரண்டு பேரும்.

''அவனை நம்பினேன். என்னைப் புரிஞ் சுக்குவான்னு நெனைச்சேன். ஆனா அவனும் இந்த ராட்டன் சொசைட்டிலே ஒருத்தன் தான்னு ப்ரூவ் பண்ணிட்டான். போகட்டும். என்னோட நோக்கத்தோட புனிதத் தன்மை எனக்குத் தெரியும். ஏய் யஷ்மின் ,தகுந்த ஆயுதங்களுடன் தப்பி ஓடி எங்களைக் காட் டிக் கொடுக்கப் போறியா...'' மனத்துள் யஷ்மினைத் திட்டிய புரொபஸர் பைரன் பிறகு சோகமாய்த் தம் உதவியாளர் களிடம் சொன்னார்.

''ஓ.கே. ஃபினிஷ் ஹிம்....''

யஷ்மின் தன் உயிர் இன்னும் சில நொடி களில் பறிக்கப்போவதை அறியாமல், வெற்றிக் களிப்புடன் வேகமாய்ப் போய்க் கொண்டிருந்தான்.

கராத்தே பயிற்சி 23

பயிற்சியாளர்: **டோனி பொன்னையா**
சித்திரம்: படம்: உத்ரா
தயாரிப்பு: குண்டுமணி



இன்று அமோகமாகப் பரவி வரும் கராத்தே கலை ஒகினேவாவுக்கு முதலில் கடமைப்பட்டுள்ளது. அங்குதான் முதன் முதலில் கராத்தே 'டோஜோ' ஏற்படுத்தப்பட்டது. பழங்காலத்தில் ஜப்பானால் ஒகினேவா கைப்பற்றப்பட்டுக் காலனியாகத் திகழ்ந்த போது ஒகினேவாக்கள் எந்தவிதமான ஆயுதமும் கையில் ஏந்தக் கூடாது என்று தடை விதிக்கப்பட்டிருந்தனர். இதனால் ஒகினேவாக்கள் 'தன் கையே தனக்குதவி', 'தற்காப்புக்குக் கைகளே ஆயுதம்' என்ற முறையில் செயல்பட வேண்டியிருந்தது. கம்பு, தடி, கத்தி, வாள் இரும்புத் தடிகளுக்குப் பதிலாகக் கைகளும் கால்களுமே அவர்களுக்குத் 'தற்காப்பு ஆயுதங்'களாக இயங்கின.

வெறும் கைகளினால் தற்காத்துக் கொள்ளும் கலை சீனாவிலிருந்தும் இந்தியாவிலிருந்தும் ஒகினேவாவுக்குப் பரவியது. இந்தக் 'கைச் சண்டை' யை ஒகினேவாக்கள் பயிற்சியில் உக்கிரமாகக் கற்றுக் கொண்டார்கள். இந்தக் கைச் சண்டை பிறகு ஜப்பானுக்குச் சென்று மெருகேறி, உலகம் முழுதும் கராத்தே கலையாக உருவெடுத்தது. இப்பொழுது கராத்தே கலையை ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் ஆஸ்திரேலியாவிலும் மும்முரமாகப் பயின்று வருகிறார்கள்.



கராத்தே கலையில் வேகத்துக்குத்தான் அதிக முக்கியத்துவம் தரப்படுகிறது. முரட்டுப் பலத்தை விட வேகத்துக்கே முதலிடம்.

ஒருவருக்குக் குத்துதலில், தாக்குதலில் உதைப்பதில் படுவேகம் வந்துவிட்டால் பிறகுதானே (Power) சக்தியும், பலமும் வந்துவிடும். வெறும் கைகளினாலேயே செங்கற்களை உடைப்பது, ஓடுகளைத் தகர்ப்பது, பல கைகளை முறிப்பது கராத்தே பயிற்சியினால் கிடைக்கும் அகர சக்தி. இதுவல்ல கராத்தேயின் முக்கிய குறிக்கோள். எதிரி ஆசாமி தகரும் திறனுள்ளவர் என்பதை மறந்து விடக் கூடாது. ஆகவே அழுத்தமான தாக்குதலை வேகமாக எதிரியை வீழ்த்துவதற்குக் கடைப்பிடிக்க வேண்டும்.





கராத்தே பயிற்சியில் முரட்டுத்தனத்துக்கு இடமில்லை. பண்பாடும் நல்லநல்ல குணநலன்களுக்கே சிறப்பிடம். கராத்தே பயிற்சியாளர்கள் பலத்த சண்டைகளுக்கு உட்படக்கூடாது என்பது அவர்களுக்கு அறிவுறுத்தப்படுகிறது. ஆனால் தற்காப்புக் காலத்தில் எதிரி முரட்டுத்தனமாகத் தாக்க வரும்போது தன்னைத் தாக்க வரும் புள்ளிக்குப் பாடம் கற்பிக்க வேண்டும்.

ஒரு பெண்மணி வெள்ளை பெல்டிலிருந்து கறுப்புப் பெல்ட் வரை ஆகும் வசதி உண்டு. இரண்டு முரட்டு ஆடவர்களையும் ஒரே சமயத்தில் வீழ்த்தக்கூடிய சக்தியை ஒரு பெண்மணி கராத்தேயினால் பெறலாம்.

முதலில் மனிதன் ஆதிகாலத்தில் மிருகங்களிலிருந்து தன்னைக் காத்துக்கொள்ள Martial arts என்னும் கலையில் தேர்ந்தான். இந்த Martial arts என்ற கலையை உருவாக்கிப் பரப்பியவர் பான்கு (Phan-Ku). மிருகத்தைவிட மனிதனுக்குத் தற்காத்துக் கொள்ளும் அறிவு மிகுதியினால் அவன் மேம்பட்டு நிற்க முடிகிறது. Martial arts என்ற தற்காப்புக் கலையின் தோற்றத்துக்கு அடிப்படை, மனிதன் தோன்றிய காலத்தில் அவன் பயங்கர மிருகங்களிடமிருந்து தப்பிக்கச் செய்த சண்டை முறைகளேயாகும். அந்தத் தற்காப்பு இன்று எதிரிகளை முறியடிக்கும் கராத்தே கலையாக வளர்ந்து உலகம் முழுவதும் பிராபல்யமாகிவிட்டது.




'பாண்டர்'கள்!
பத்து லட்சத்துக்கு பாண்டா...? உங்க பெயர்?
பாண்டு ரங்கன்!
அதி Bond ரங்கன்!
சம்பந்தி! உங்க கறுப்புப் பணத்துக்குப் பாண்டு கிடைச்சது போல உங்க கறுப்புப் பொண்ணுக்கும் என் மகன் பாண்டு மாதிரி கிடைச்சிருக்கான்!
என்னங்க இது பாண்டு ஊர்வலம்!
கறுப்புப் பணத்துக்குப் 'பாண்டு' கொடுக்க பாண்டு ஊர்வலம் வருங்க!
தூக்கமில்லா வியாதிக்குத் தினமும் என் வீட்டும் வருவீங்க...இப்ப ஆளையே காணுமே?
கறுப்புப் பணம் இருந்தப்போ தூக்கமில்லே. இப்பத்தான் பாண்டு வந்துடுச்சே! தூக்கத்துக்கு என்ன பஞ்சம்?
கத்தை கத்தையா 50 லட்சம் பணத்தைக் கொடுத்துட்டுக் கால் கடுதாசி பாண்ட் வாங்கிக்க மனசு வரல்லே! அட்லீஸ்ட் பத்து ரூபாய்க்கு ஒரு பாண்ட் வீதம் கொடுங்க!


இருபதாயிரம் வரதட்சிணைக்கு நீங்க 'பாண்ட்' தான் கொடுக்க முடியும்னு ஒத்துக்க மாட்டோம் டபுளா நாப்பதாயிரம் கொடுக்கணும்!
உங்க பையனுக்கு வேலைதானே? தாராளமாகக் கொடுக்கறேன்! ஒரு அஞ்சு லட்சத்துக்கு 'பாண்ட்' வாங்கிக் குங்கோ!
உப்பு, புளி, மிளகாய், கத்தரிக்காய் வாங்கறதுக்கும் செலவுக்குப் 'பாண் டா'கக் கொடுக்கறீங்களே! சுத்தமா உங்க கிட்டே வெள்ளைப் பணமே நயா பைசாவுக்குக் கிடையாதா?
போற போக்கைப் பார்த்தா 'பாண்டு' தான் செல்லுபடி ஆகும்! வெள்ளைப் பணம் செல்லு படியாகாதுன்னு சட்டமே வந்துடும் போலிருக்கே!
சார்! ஒரு சந்தேகம்!... கறுப்புப் பணத்துக்கு பாண்டு தறுங்க!... அப்புறமா பாண்டுகளைத் தந்தால் கறுப்புப் பணமாகவே திரும்பவும் தரு வாங்களா?


உங்களைப்
போன்றவர்களை திருப்தி
செய்ய சார்மினரால்தான்
முடியும்
CHARMINAR
சற்றே இளைப்பாறு! சார்மினாருக்கு இணையுண்டோ

நேற்றுவரை அமைதியோடு கைகோத்துக் குலாவிக் கொண்டிருந்த வீடு... இன்று.. வார்த்தை உஷ்ணங்களினால் தகிக்கிற கடுகளமாக மாறிக் கொண்டிருக்கிறது. காரண காரிய கட்டுப்பாடுகளை மீறியதாய்...உரத்த குரலெழுப்புவதாலேயே மட்டும்பிரச்னைகளைச் சந்தித்துவிடவும், தீர்வு கண்டுவிடவும் முடியுமென்று நம்புகிற மனிதக் கூட்டத்தின் நடுவே.... அழுவதற்குக்கூடப் பிரக்ஞையற்றுப் போன நிலையில்... நான் நின்று கொண்டிருக்கிறேன்.

''நம்ம ராதாவோட குழந்தை முகத்தைப் பார்த்துட்டு... அப்படி ஒரு மாபாதகத்தைச் செய்யணும்னு நினைக்கிறதுக்குக்கூட அவனுக்கு எப்படித்தான் துணிச்சல் வந்ததோ? ... நம்பவே முடியலியே!'' — மாமா குரல் ஓங்கிப் பேசுகிறார்.

''எது எப்படியானாலும் சரி! அங்கே போய் அவனைப் பார்த்துச் சுடச் சுட நாலு வார்த்தை கேட்காமல் விடறதில்லே'' —தன் பங்குக்குச் செய்ய வேண்டிய கடமையாக நினைத்துக் கொண்டு சித்தப்பா ஏதோ சொல்லப் போக... அண்ணா அவரை இடைமறிக்கிறான்.

''வாயாலே கேட்டு என்ன பிரயோசனம்? நம்மாலே எதை எப்படி 'ப்ரூவ்' பண்ண முடியப் போகிறது? சாட்சி, சம்மன் இல்லாமல் எந்த ஆதாரத்தோடே நம்ம சொல் அம்பலமேறப் போறது?''

சமையல் அறை மூலையிலிருந்து கேட்கும் விசும்பல் ஒலி.. அம்மாவின் ஆத்மார்த்தமான சோகத்தை அஞ்சல் செய்ய... மூடமாகி வந்திருக்கும் என் உள்ளம்... நிதரிசனத்தின் கையாலாகாத்தனத்தை எண்ணிக் கோழையாய் விழிக்கிறது.

''நீ எதற்கும் கவலைப்படாதே ராதா! நாங்க எல்லோரும் எதுக்கு இருக்கோம்? வாய் வார்த்தையாய்ச் சொன்னுக் கேட்டுண்டா சரி! இல்லேன்னு என்ன? எங்க கை பூப்பறிச்சிண்டா இருக்கப் போறது? எது எப்படிப் போனாலும் போறதுன்னு... ஜெயிலுக்குப் போகக் கூட நான் தயார்!''

முகத்தில் உள்ள நரம்புகளெல்லாம்புடைத்து நிற்க... விழிக் கோளங்களிரண்டும் சிவப்பாய்த் தெறித்து விழ... ஆக்ரோஷமாய்ப் பேசுகிறான் பெரியப்பா பிள்ளை குமார்.

இவர்கள் பேச்சின் சுருதி உயர உயர என்மேல் உள்ள பரிவால் இத்தனை கரங்கள் ஆதரவுக்கு நீளும்போது நான் தனிமைப்பட்டவளில்லை என்கிறநிம்மதி கலந்த உணர்வு ஏற்படுவதைத் தவிர்த்ததாய்ப் — பிரச்னையின் பரிமாணத்தைச் சரிவரப் புரிந்துகொள்ளாத அவர்கள் மீது அனுதாபமும் என்மீது தன் விரக்கமுமே மேலோங்கி நிற்கிறது.

வஞ்சினம் பேசி, வரிந்து கட்டிக்கொண்டு நியாயம் கேட்கப் போனவர்கள் இரண்டு நாட்கள் கழித்துத் திரும்பி வந்திருக்கிறார்கள். இந்த வீட்டின் கூடம் மறுபடியும் ஒரு நியாயஸ்தலத்தின் பாணியில் நிரம்பி வழிந்து கொண்டிருக்கிறது. பிரதிவாதியில்லாத அந்த விசித்திரமான நீதிமன்றம் எனக்கு வழங்கப் போகிற தீர்ப்பை... அவர்கள் முக பாவங்களிலிருந்து முன்கூட்டியே அனுமானித்து விட்டவளாய் உணர்ச்சிகள் பாறையாய் இறுகிக் கிடக்கும் முகத்துடன் உறைந்திருக்கிறேன் நான்.

மாமா வாதத்தைத் தொடங்கி வைக்கிறார்.



''இதோ பாருங்மா குழந்தை! நாங்க வயசிலே பெரியவாசொல்றோமேன்னு கோபப் படாதே! இரண்டு நாள் ஆற அமர அவா ளோடே எல்லாம் பேசிப் பார்த்தோம்!... எங்களுக்கென்னவோ தனிப்பட்ட முறை யிலே அவா உன் மேலே குரோதமோ, வெறுப்போ பாராட்டறதாப் படலே!... எங்களுக்கு என்ன தோன்றதுன்னு...''

''நீ இன்னும் கொஞ்சம் பொறுமையா இருந்திருந்தா....''

தொடர்ந்து அவர்கள் பேசுவதெல்லாம் காதில் விழாத நிலையில் எங்கோ...எங்கோ.. போகிறேன்.

''என்னடீ புஸ்தகம் அது?''

புத்தகத்தை மூடி வைத்துவிட்டு நான் நிமிர்வதற்குள் அவருடைய கை முரட்டுத் தனமாய் அதை என்னிடமிருந்து பிடுங் கிக்கொள்கிறது.

''ஓஹோ! இந்த ஆளுடைய புஸ்தகமா? அதுதான் நான் வந்தது கூடத் தெரியாமல் படிச்சிண்டிருந்தியா?... பெண்கள் கெட்டுப் போறதை நியாயப்படுத்தறதோடே அதுக்கு வழி வேறே சொல்லிக் கொடுக்கிறவர்னு இவர்!... இனம் இனத்தோடேதானே சேரும்!''

''உங்களுக்குப் பிடிக்கலேன்னு இனிமேல் நான் படிக்கலே.''

நான் சொல்லி முடிப்பதற்குள் அவர் கையிலிருந்த புஸ்தகம் பறந்து சென்று பரணிலுள்ள குப்பைகளில் சங்கமமாகிறது.

''முந்தியே ஒரு தடவை, இந்த ஆள் எழுதினதைப் படிக்காதேன்னு நான் சொன் னதுக்கும் இப்படித்தான் நடுங்கின மாதிரி நடிச்சே! செய்யறதையும் செஞ்சிட்டு வேஷமா போடறே! சொன்ன சொல்லேக் காப்பாத்தறவதாண்டி உத்தமி!''

''அந்த வழக்கம்தான் அவா வம்சத்தி லேயோ யாருக்கும் கிடையாதே'' என்றபடி மாமியாரும் கூடச் சேர்ந்து கொள்கிறார்.

''வரதட்சிணைப் பணம் பாக்கி ரெண் டாயிரத்தை ஆடிச் சீரோடே சேர்த்துக் கொடுத்திடுறோம்னு! அடுத்த ஆடியும் வந்தாச்சு! தகப்பனுர் காலமாயிட்டா என்ன... பேசின பணத்தை இரண்டு மாசத் திலே கொடுத்திடறேன்னுன் இவ அண்ணு! ஆச்சு... ஒரு வருஷம் முடியப்போறது!''

மெள்ளத் தலே நிமிர்கிறேன்.

''அண்ணு வேலே பார்க்கிற கம்பெனி யிலே கதவடைப்பு நடந்து ஏகப்பட்ட கஷ் டத்திலே இருக்கிறதா எழுதியிருக்கானே அம்மா! இன்னும் கொஞ்ச நாள் பொறுத் துக்கோங்கோ. கட்டாயம் அவன் கொடுத்திடு வான்.''

இதைச் சொல்லி முடிப்பதற்குள் என் னவோ சட்டிக்காரனுக்குத் தவனே சொல்லு வதைப் போன்ற மான உணர்வில் உடம் பெல்லாம் வியர்த்துக் கூசிக் குறுகி ஒடுங்கிப் போகிறேன்.

அந்தராத்மாவின் உபதேசத்துக்கு அடி பணிந்து அவர்கள், நா உளிகளால் ஏற்றி வைத்த சொல்லாணிகளின் சுமையை நான் அமைதியாய்ப் பொறுத்திருந்த அந்த நாட்கள்....

வழக்கு தொடர்ந்து நடந்து கொண்டிருக் கிறது.

''பாக்கிப் பணத்தை நாம கொடுக்கலே யேன்னு அவா கோபமாய் இருந்தது வாஸ் தவம்தான். ஆனுத் தப்பு நம்ம பேரிலேயும் இருக்கறச்சே... நீயும் அவாளே அப்படி எடுத்தெறிஞ்சு பேசியிருக்க வேண்டாம்!'' — இது சித்தப்பாவின் முறை!

''ஏண்டா! லட்சுமி மாமி பிள்ளே ராஜா ராமனுக்கு அடுத்த வாரம் கல்யாணம் நிச் சயம் பண்ணியிருக்காளாமே!''

''அதைத்தாம்மா நானும் சொல்ல வாயெடுத்தேன். கையிலே ரொக்கமா ஐயா யிரம் ரூபாய் கொடுக்கிறதோடே, ஒரு ஸ்கூட்டரும் வாங்கித் தரதாப் பேச்சாம்! பொண்ணுத்திலே என்னடான்னு அதுக் குள்ளே ஒரு 'புல்லெட்'டையே வாங்கி 'ரெடி' பண்ணி வச்சிட்டா!''

''எல்லாத்துக்கும் கொடுப்பினே வேணும் டா! பத்தாயிரம் ரூபாய் கனேயா வரதட்



இப்படியும் ஒரு துணைவேந்தர்

ஒரு கூட்டத்திற்குத் தலைமை தாங்குவதற்காகத் துணைவேந்தர் டாக்டர் டி. கே. சாளுங்கே புறப்பட்டுக் கொண்டிருந்தார். அப்போது மகாத்மா பூலே கிருஷி வித்யாபீடத்திலிருந்த விடுதி மாணவர்கள், போதிய கவனிப்பின்மையால் தங்கள் விடுதியின் கழி வறைகள் ஆபாசமாகவும், ஆரோக்கியக் குறைவாகவும் இருப்பதைக் கண்டித்துக் கிளர்ச்சி செய்து கொண்டிருப்பதாய்த் துணைவேந்தருக் குத் தகவல் வந்தது.

அந்த நேரத்தில் உடனடியாய் ஒரு குழுவை நியமித்து விட்டோ, உதட்டளவில் திடீர் உத்தரவுகளைப் போட்டுவிட்டோ துணைவேந்தர் கூட்டத்திற்குக் கிளம்பியிருக்கலாம். ஆனால் துணைவேந்தர் டாக்டர் சாளுங்கே ஒரு கூடையையும், துடைப்பத்தையும் கையில் எடுத்துக் கொண்டு மாணவர் விடுதியின் கழிவறைகளைத் தாமே சுத்தம் செய் யத் தொடங்கிவிட்டார்! உடனே அங்கேயிருந்த ஆசிரியர்களும், மாணவர்களும் அவருடன் துப்புரவுப் பணியில் உற்சாகமாக இறங்கி விட்டார்கள். கழிவறைகள் தூய்மையாகிச் சிக்கல் தீர்ந்தது!

நாமெல்லோரும் மறந்துவிட்ட மகாத்மா காந்தியின் மனத்தைக் குளிரவைப்பது போல் இந்நிகழ்ச்சி அமைந்துள்ளது.

இந்தியன் எக்ஸ்பிரஸ் நாளிதழிலிருந்து

- முத்து. தங்க. ஐயப்பன்

சிணைப் பணமா மட்டும் வாங்கிண்டு ரவிக்கு என் பொண்ணை எடுத்துக்கோங்கோன்னு வெங்கிட்டு என் கையைப் பிடிச்சுண்டு கெஞ்சினான். பொண்ணு சித்தே கறுப்புன்னு நீதான் வேண்டான்னு சொல்லிட்டே!... ம்! யார் முடிச்சை யார் போட முடியும்?''

''உன்னை நுழைஞ்சப்பறம்னும்மா எல்லாம் ஊழல்னு புரியறது? பேசின பணத்தைக் கொடுக்க வக்கில்லாட்டா நம்பளை இப்படி ஒரு வம்பிலே மாட்டி விடாமலேயாவது இருந்திருக்கலாமே!''

''ஹூம்!... இப்பக்கூட நீ 'ம்'னு ஒரு வார்த்தை சொல்லு... அடுத்த முகூர்த்தத்துக்கு வெங்கிட்டு ரெடியாயிடுவான்.''

''என்னம்மா நீ வேறே வயத்தெரிச்சலைக் கொட்டிண்டு!... காலைச் சேத்திலே நுழைச்சிண்டாச்சு! இனிமே சந்தனத்தைப் பத்திப் பேசி என்ன?''

'நாம என்ன மரமா? இல்லே மண்ணு?...' என்னையும் எதிரே வைத்துக் கொண்டு சர்வ சாதாரணமாய்த் துணி அலசுவது போல இந்தப் பிரச்னையையும் அலசுவது உங்களுக்கு எப்படிச் சாத்தியமாகிறது?'

பெண்ணை வாழ வைப்பதற்கு அவளிடமே பணம் வாங்காமலிருக்கும் கம்பீரமான ஆண்மை மிகுந்த கணவன் கூட எனக்குக் கிடைத்திருக்க வேண்டாம். ஆனால் ஒருத்தியிடம் கைநீட்டிப் பணம் வாங்கி அவளை உரிமையாக்கிக் கொண்ட பிறகு அவள் முன்னிலையிலேயே இன்னும் அதிக விலைக்குத் தன்னை விற்க முடியாமல் போய்விட்டதே என்று ஆதங்கப்படும் ஓர் ஆண் வேசிக்கல்லவா... கோழைக்கல்லவா நான் கழுத்து நீட்டியிருக்கிறேன்!

'ஆனாலும் உன் பெயருக்கு முன்னால் மரியாதைக்குரிய ஒரு (Mrs) 'மிஸ்ஸஸ்' சேர வேண்டுமென்பதற்காக இவர்களிடம் இத்தனை பணத்தைக் கொட்டிக்கொடுத்தார்களே அந்த நல்ல மனங்களை ரணமாக்காமல் இருப்பதற்காகவாவது ஆறு மனமே ஆறு!'

எப்படிச் சுற்றினாலும் ஒரு புள்ளியிலே வந்து முடிகிற வட்டத்தைப் போல... எதைப் பற்றிப் பேசினாலும் இறுதியில், பத்தாயிரம் கொடுக்கக் காத்திருந்த பெண்ணை மணமுடிக்க முடியாமற் போன சோகத்தில் வந்தே அவர்கள் பேச்சு முற்றுப் பெறும் போது... பலவீனமான ஒரு கணத்தில், வீரியம் பெற்று விசுவரூபம் எடுத்த நான், வெடித்து விடுகிறேன்.

''இப்பக்கூடக் காலம் கடந்திடலே! எங் காத்திலே கொடுத்த வரதட்சிணைப் பணம் ஆறாயிரத்தை எண்ணி வைச்சிடுங்கோ! அப்புறம் எந்த ஊர் மகாராணி லட்சமோ, கோடியோ வச்சிண்டு கூப்பிடறாளோ அவகிட்டே போய் உங்களைத் தாராளமாய் ஏலம் போட்டுக்கோங்கோ! எனக்கு எந்த ஆட்சேபணையும் இல்லே!''

சாது மிரண்ட அதிர்ச்சியில் ஒரு விநாடி அதிர்ந்து போன அவர்கள் உடனே சமாளிக்கிறார்கள்.

''என்னடீ சொன்னே! திருப்பிக் கொடுக்கிறதுக்கு இங்கே யாரும் யார்கிட்டேயும்கடன் வாங்கலே தெரிஞ்சிக்கோ! நான் ஆண்பிள்ளை! இந்த நிமிஷமே உன்னைத் தள்ளி வச்சிட்டு வேறே கல்யாணம் பண்ணிக்க என்னாலே முடியும்!''

சிறிது நேரத்துக்குப் புலியாய் மாறிய பூனை... கூட்டுக்குள் நத்தையாக மாறி... மீண்டும் ஓட்டுக்குள் சுருண்டு ஒடுங்கிவிடுகிறது.

''இரண்டாயிரம் ரூபாயைக் கொடுக்காட்டாப் போறது! எங்களுக்கு இப்படிக் கொலைகாரப் பட்டம் கட்டிட்டாளேன்னு ''அந்த மாமியும் மாப்பிள்ளையும் சொல்லிச் சொல்லி மாஞ்சு போறா!''

''தற்செயலா எனவோ நடக்கப் போய் நாங்க வேணும்னே திட்டம் போட்டுச் செஞ்சதா நினைச்சு அவ அரண்டு போயிட்டா! நாங்க வேணுமானு வாயாலே பொல்லாத



துணுக்கு வேட்டை

சென்னையிலேயே பிறந்து வளர்ந்த டாக்டர் எஸ். பாபு இருபத்தைந்து ஆண்டுகளாக மருத்துவத் துறையில் பணியாற்றியும் சென்னையில் பணியாற்றியதில்லையாம். தற்போது தென்னார்க்காடு மாவட்ட மருத்துவ அலுவலராம். கடலூர் தலைமை மருத்துவ மனையில் பணியாற்றும் இவர் சொன்னது :

''உத்தரவுகளை அப்படியே ஏற்றுக்கொள்வேன். எங்கே மாற்றினாலும் போய்ப் பணியாற்றுவேன். இதுவரை எந்த மாறுதல் உத்தரவையும் ரத்து செய்யவேண்டுமென்று போய்க் கேட்பது கிடையாது''

மூடம் நீக்கி மருத்துவம் பிரிவில் பெரிதும் ஆர்வமுடைய இவர் ஐம்பதுகளின் இறுதிப் பகுதியில் ஏரோட்டுக்கு அருகிலுள்ள கொலா நல்லி என்கிற சின்னஞ்சிறிய கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையத்தில் பணியாற்றிய காலங்கள் மறக்க முடியாதவை என்கிறார். மின்சார வசதிகூட இல்லாமல் மிகவும் பின்தங்கிய கிராமம் அது. அங்கு பணியாற்றியபோது தான் இவருக்குத் திருமணமும் நடந்ததாம். ஹைதராபாதில் வளர்ந்த இவருடைய துணைவியார், அந்தமாதிரி ஒரு கிராமத்தைப் பார்த்து மிகவும் அதிர்ச்சியடைந்தாராம்.

''ஆனாலும் அந்த மனிதர்கள் மிகவும் அருமையானவர்கள். அதுபோன்ற பின்தங்கிய பகுதிகளில், முக்கியமாக உடல் ஊனமுற்றவர்களுக்காகச் சேவை செய்வதில் எனக்கு எப்போதுமே ஆர்வமுண்டு'' -என்று சொல்லும் டாக்டர் பாபு பச்சையப்பனிலும், ஸ்டான்லியிலும் படித்துப் பட்டம் பெற்றவர்.

இந்த இதழ்க் கல்லியில் இடம் பெறும் துணுக்குகளைத் தேர்ந்தெடுத்துத் தந்துள்ள இவர், டாக்டர்களைப் பற்றிய ஜோக்குகளையும் ரசித்துக் கொண்டே எடுத்தது குறிப்பிடத்தக்கது.

அமைப்பு : வெல்பால் போட்டோ : வி.என்.ஆர். பாபு



''பரவாயில்லையே...! மந்திரிகள் பதவி ஏற்கும் விழாவிற்கு இவ்வளவு கூட்டம் வந்திருக்கே...''.
''நாசமாப் போச்சு .! அத்தனை பேரும் பதவி ஏற்க வந்துள்ள மந்திரிகள்..!''
-வினைத்துக்கடவு ரவி

வாளை தவிர இன்னிக்கு வரைக்கும் எங்க கண்டு விரலாவது அவ மேலே பட்டிருக்கான்னு கேளுங்கோ, அப்பமங்களு!''

''ராதாவைக் கண்ணாலே பார்த்தப்பறம் தான் தொண்டைக் குழிக்குள்ளே தூலமே இறங்கும்னு கண்ணீர் வடிக்கிறடி உன் மாமியார்! அதைக் கூடவா நடிப்புன்னு நீ சொல்றே!''

சாத்தான்கள் ஓதிய வேதம்... மாமி சித்தியிடம் நன்றாகவே எடுபட்டிருக்கிற அதிசயத்தை எண்ணி மனத்துக்குள் சிரித்துக் கொள்கிறேன்!

தற்செயலா...? விடியற்காலையில் எழுந்து வெந்நீருக்காக ஹீட்டரை 'ஆன்' செய்யும் முதல் ஆள் நான் என்பதை நன்றாக அறிந்து கொண்டு, மாமியாரும் ஊரில் இல்லாத வேளை பார்த்துப் புத்தம் புதிய அந்த 'இம்மர்ஷன் ராடி'ன் செப்புக் கம்பிகள் கைப்பிடி அருகே பிரிக்கப்பட்டிருந்தது... தற்செயலா? சலவைக்குப் போட எடுத்த இவருடைய பாண்ட் பாக்கெட்டில் பிரிக்கப்பட்ட செப்புத் துணுக்குகள், ஸ்க்ரூட்ரைவர்.! இதெல்லாம் பதுங்கியிருந்ததும், தரகர் கிட்டாவுக்கு இவர் கைப்பட எழுதிய கடிதத்தில் 'கூடிய சீக்கிரத்தில் எனக்கு விடுதலை கிடைத்து விடும்' என்று எழுதியிருந்ததும் கூடத் தற்செயலாக நடந்தவைதாமா?

அன்றென்னவோ அதிசயமாக நான் பச்சைத் தண்ணீரில் குளித்ததும் வீட்டுச் சாமான்களை ஒழித்து வைக்கும்போது இந்தத் தடயங்கள் கிடைத்தது மல்லவா தற்செயல்! - தெய்வச் செயல்!

அடுத்த அரை மணி நேரத்தில், கோவையை விட்டுக் கிளம்பிய விரைவுப் பேருந்தில் நான் சென்னைக்குப் பறந்ததும் உயிர் தப்பிய பேரதிசயத்துக்காகக் கடவுளுக்கு நன்றி கூறும் உணர்வையும் மீறிக்கொண்டு... மனித உயிர் இத்தனை கேவலமாய் மலினப்பட்டுப் போய்விட்ட சோகத்தில் ஆழ்ந்து போனதும் கூட வெறும் பிரமைகள்தானா?

தீர்ப்பு வாசிக்கப்படாமலே.. அன்றைக்குக் கோர்ட் கலைகிறது.

இரவு தூக்கம் பிடிக்காமல் கொஞ்ச நேரம் புரண்ட பிறகு தண்ணீர் குடிக்க எழுந்து வருகிறேன். மதிப்புக்குரிய கனம் கோர்ட்டாரின் அந்தரங்கங்கள்.. நானில்லாத தைரியத்தில்... சன்னக் குரலில்... அங்கே அம்பலமாகிக் கொண்டிருக்கின்றன.

''என்ன இந்தப் பொண்ணு இப்படிப் பிடிவாதம் பிடிக்கிறதே! நமக்கும் குழந்தை, குட்டி, வீடு, வாசல்னு இல்லையோ? எத்தனை நாள்தான் இங்கே தங்கியிருக்க முடியும்?''

''ஒருவேளை... 'கோர்ட்', 'போலீஸ்'னு போகணும்னு எதிர் பார்க்கிறாளோ என்னவோ!''

''காலம்பற முதல் காரியமா பி. எஃப். லோன் இரண்டாயிரத்துக்கு அப்ளை பண்ணி அவளைக் கொண்டு போய் விடற வழியைப் பாருங்கோ! இவளைச் சாக்கிட்டு வேறே எல்லாரும் குடும்பம் குடும்பமா இங்கே 'டேரா' போட்டாறது! எல்லாருக்கும் வடிச்சுக் கொட்ட யாராலே முடியும்!''

''**ரா**தாக் கண்ணு! நாங்க ஊருக்குப் போயிட்டு வரோம்மா! இந்த வாரத்துக்குள்ளே உன்னைப் பணத்தோடே அங்கே கொண்டு போய் விடறதா அண்ணா சொல்லியிருக்கான். சமர்த்தா நடந்துக்கோ!''

ஆக, ஒரே வரியில் தீர்ப்பு எழுதப்பட்டாயிற்று.

'இரண்டாயிரம் ரூபாய் இப்போது பிரச்னையில்லை என்பதைப் புரிந்தும் புரியாதது மாதிரி நடிப்பது உங்களால் எப்படி முடிகிறது? ஆனாலும் உங்கள் சுமைகளை உங்கள் தோள்களை அழுத்திக் கொண்டிருக்கும்போது இதற்கு மேல் யாரால்தான் என்ன செய்ய முடியும்?

''நாங்க எல்லோரும் உன்னை 'அம்போ'னு விட்டுட்டுப் போயிட்டதா மட்டும் நினைச்சுக்காதே! என்னிக்கானாலும் எங்க சப்போர்ட் உனக்குக் கட்டாயம் உண்டு!''


''பணத்தோட போயும் அவா ஏதானும் விஷமம் பண்றதா மனசிலே பட்டாத் தந்தியடி! பறந்து வந்திடறேன்!'' – இது குமார்.

'ஐயோ, குமார்! நீகூடவா சாவுக்குப் பயந்த கோழையாய் என்னை நினைச்சுண்டிருக்கே? நான் சாகப் பயப்படலே! ஆனா, அந்தக் கோழைகள் கையாலே அகாரணமாய்ச் செத்துப் போறதை விட ஆயுள் பூராத் தைரியமா எதிர் நீச்சல் போடறதைத் தான் நான் விரும்பறேன்.'

சாப்பிட்டுவிட்டுக் கூடத்துக்கு வரும் அண்ணாவை ஒரு தீர்க்கமான முடிவுடன் எதிர்கொள்கிறேன்.

''அண்ணா! உன்கிட்டே ஒரு சின்ன 'ரிக்வெஸ்ட்'. எனக்காக நீ லோன் போடவோ அங்கே கொண்டு போய் விடவோ சிரமப்பட வேண்டாம். நானும் அம்மாவும் கொஞ்ச நாள் இந்த ஆத்திலே தங்கியிருந்துண்டு சாப்பிடறதுக்கு அனுமதி கொடுத்தாப் போறும்'' என்று சொல்லியபடி என் அறைக்குள்ளே நுழைகிறேன்.

அங்கே குவிந்து கிடக்கும் ஆங்கில நாளிதழ்களின் 'வாண்டட்' காலம்களை அவசரத்தோடு புரட்டுகிற அதே நேரத்தில் எதிர் காலம் என்ற சிலுவையைத் தோளிலும் தனிமை என்ற முள்முடியைத்தலையிலுமாய்ச் சுமந்தபடி ஒரு மகா பெரிய மலையேற்றத்தை எதிர் கொள்வதற்குத் தீவிரமாகத் தயாராகிறேன்.



லக்மே வதன ரேகா

மினுக்காத மென்வண்ண இயற்கைப் பொலிவுக்கு லக்மே முகப் பவுடர்—இழைக்கிறுள் ரேகா, பட்டுச் சல்லாத் துணிவழியே சலித்தெடுத்த பனி மகரந்தம்: லக்மே முகப்பவுடர்... உறைக்கும் ஸ்டுடியோ விளக்கொளியிலும் மலர்ச்சியோடு நிலைக்குது. வெளிப்புற ஷூட்டிங்கா—விரலசைவில் விருக்கென ரேகாவுக்குக் கைகொட்டுவது லக்மே காம்பேக்ட். சிங்காரச் சிற்றடக்கச் சிமிழ், நங்கையர் கைப் பைக்குள் கைணாகப் பொருந்தும். ரேகா முக ராசி வாகாய் உமக்கும் வாய்த்திட, வரவேற்பீர் லக்மே.

லக்மே அல்ட்ரா-சில்க்
முகப் பவுடர் மற்றும்
லக்மே காம்பேக்ட்



எழிலைப்
படைப்போர்—லக்மே

Lakmé

daCunha L-53R TM

டாடா ஸ்டீல் அளிக்கும் அதிக சக்தி வாய்ந்த
ரீயின்ஃபோர்ஸிங் பார்ஸ்

கோல்ட் டுவிஸ்டட் டிஸ்கான் 42
கோல்ட் டுவிஸ்டட் டிஸ்கான் 50

திடமான பாலங்கள், அணைக்கட்டுகள், வீடுகள் கட்டுவதற்கு—பலகாலங்களுக்கு அழிவில்லாத அமைப்புகளுக்கு- தங்களது அதிகபட்ஷ சக்தியை ஈர்த்து இந்த ரீயின்ஃபோர்ஸிங் பார்கள், ஆயுட் காலங்களை அதிகரித்தும், இரும்பின் சேர்வையைக் குறைத்தும் மேலும் பொருளாதார சிக்கனத்தையும் கொடுக்கிறது.

மற்ற விவரங்களுக்கும், உங்கள் தேவைகளுக்கும் கீழ்கண்ட முகவரிகளுக்கு தயவு செய்து எழுதவும்:

டைரக்டர் ஆப் மார்க்கெட்டிங்
தி டாடா அயர்ன் அண்ட்
ஸ்டீல் கம்பெனி லிமிடெட்
43 சௌரங்கி ரோடு
கல்கத்தா 700071

ரீஜன்ஸ்:

தி ரீஜனல் மானேஜர் [நார்த்]
தி டாடா அயர்ன் அண்டு
ஸ்டீல் கம்பெனி லிமிடெட்
பாங்க் ஆப் பரோடா பில்டிங்
16 பார்லிமென்ட் வீதி
புது டெல்லி 110 001

தி ரீஜனல் மானேஜர் [ஈஸ்ட்]
தி டாடா அயர்ன் அண்டு
ஸ்டீல் கம்பெனி லிமிடெட்
43 சௌரங்கி ரோடு
கல்கத்தா 700071


தி ரீஜனல் மானேஜர் [சௌத்]
தி டாடா அயர்ன் அண்டு
ஸ்டீல் கம்பெனி லிமிடெட்
30J, மஹாத்மா காந்தி ரோடு
பாங்களூர் 560 001

தி ரீஜனல் மானேஜர் [வெஸ்ட்]
தி டாடா அயர்ன் அண்டு
ஸ்டீல் கம்பெனி லிமிடெட்
நியூ இந்தியா அஷ்யூரன்ஸ்
பில்டிங்
87 மஹாத்மா காந்தி ரோடு
ஃபோர்ட், பம்பாய் 400023

ஏரியா மானேஜர்ஸ்:

அஹமதாபாத், பாங்களூர், பம்பாய், போபால், கல்கத்தா, கொச்சின் [எர்ணாகுளம்], டெல்லி, ஜாம்ஷெட்பூர், ஜலந்தர், கான்பூர், மதுரை, நாக்பூர், பாட்னா, செகந்தராபாத், விஜயவாடா.

டாடா ஸ்டீல்



HTC-TIS-4047-1

தெய்வ யத்தினம்



திருமுருக கிருபானந்தவாரியார்

சுரேந்திரனும் நரேந்திரனும் நெருங்கிய நண்பர்கள். இருவரும் நன்கு படித்தவர்கள். தெய்வநம்பிக்கை உள்ளவர்கள். சுரேந்திரன் முழுக்க முழுக்கக் கடவுளை நம்புகிறவன். நரேந்திரனுக்குத் தெய்வ நம்பிக்கை இருந்தாலும், முழுவதும் கடவுளையே நம்பியிருக்கக் கூடாது. தெய்வம் காட்டும், ஊட்டாது. மனித யத்தினம் அவசியம் தேவை என்று சாதிக்கிறவன். இந்த வகையில் இருவரும் விவாதித்துக் கொள்வார்கள். எல்லாம் தெய்வத் திருவருளால் தான் விளைகின்றன. தெய்வ யத்தினம் சிறந்தது என்பான் சுரேந்திரன். நரேந்திரன் இது பொருந்தாது. தெய்வயத்தினம் இருப்பினும் மனிதயத்தினம் இன்றியமையாதது ஆதலால் மனித யத்தினம் தான் சிறந்தது என்று கூறிச் சாதித்தான்.

இந்தக் கொள்கையில் இருவருக்கும் மாறுபாடு உண்டாகி, வலிமையாகச் சொற்போர் புரிந்தார்கள். இது அவர்களுக்குள் தீராப் பிணியாக வளர்ந்தது:

ஒரு நாள் சுரேந்திரனும் நரேந்திரனும் அந்த நகரத்தை ஆளுகின்ற அரசனிடம் போய்த் தங்கள் கருத்தைக் கூறி "தெய்வத் யத்தினம் சிறந்ததா மனித யத்தினம் சிறந்ததா? இதனைப் பரிசீலனை புரிந்து தீர்ப்பு வழங்க வேண்டும்" என்று கூறினார்கள்.

அறிவு நிறைந்த அரசன் இவர்களுடைய வாதப் பிரதிவாதங்களைக் கேட்டு "இதற்கு நாளை தீர்ப்புக் கூறுவேன்" என்றுகூறி அனுப்பி விட்டான். அந்த ஊர்ப் பத்திரகாளி கோயிலில் காலை தொடங்கி மாலை வரைக்கும் நடைபெறும் பூஜைகள் அனைத்தையும் மொத்தமாக நடத்த ஏற்பாடு செய்தான்.

அடுத்த நாள் காலையில் சுரேந்திரனையும், நரேந்திரனையும் உணவு செய்யாமல் வருமாறு செய்து, அவர்களை அழைத்துக் கொண்டு காலை 6 மணிக்கே பத்திரகாளி கோயிலுக்குச் சென்றான். இருவருடனும் காளி தேவியை வணங்கிவிட்டு அவர்கள் இருவரையும் அங்கு இருக்குமாறு கட்டளையிட்டு, அர்ச்சகர் முதலாகிய பரிஜனங்களை அழைத்துக் கொண்டு, கோயிலைச் சாத்தி வெளியே பூட்டிவிட்டுப் போய்விட்டான். இருவரும் உள்ளே அடைபட்டுக் கிடந்தார்கள். நேரம் ஆக ஆக அவர்களைப் பசித் தீ வாட்டியது. ஆனால் சுரேந்திரன் எல்லாம் திருவருளின் செயல் என்று எண்ணித் தெய்வத் திருவருளை நினைந்து அம்பிகையினுடைய திருநாமங்களை நினைந்து துதிப் பாடல்களைப் பாடிப் பரவசமாக இருந்தான்.

நரேந்திரன், "அடே சுரேந்திரா! பசியோ காதை அடைக்கிறது. குடல் சுருண்டு பசி வயிற்றைக் கிள்ளுகிறது. நீ வரட்டு ஜம்பம் பேசிக் கொண்டு பஜனை செய்து இருக்கின்ற பசியை அதிகப்படுத்துகிறாய். உன் பாட்டு என் காதைத் துளைக்கின்றது. சும்மாயிருந்து தொலை" என்று கூறிக் கடிந்து கொண்டான்.

உச்சி நேரத்தில் கதவு திறப்பார்கள், உணவு அருந்தலாம் என்று நரேந்திரன் எண்ணினான். சுரேந்திரன் உணவைப் பற்றிய உணர்வே யின்றி, தெய்வத் திருவருளைச் சிந்தித்து ஆழ்ந்த தியானத்தில் அமர்ந்திருந்தான். நண்பகலும் நகர்ந்தது. நரேந்திரன் பசி தாகத்தால் களைத்துப் போனான். அரசனை மனத்துக்குள் நிந்தித்தான்.

மாலை நேரமாயிற்று. கோயில் பூசைக்கும் யாரும் வரவில்லை. கோயில் திறந்தபாடு மில்லை. நரேந்திரனுக்குப் பசி காதை அடைத்தது. கைகால்கள் சோர்ந்தன. "இந்த அரசனுக்கு அறிவு இருக்கின்றதா? சிறையில் அடைத்தது போல் எங்களைக் கோயிலில் அடைத்து விட்டானே! சாப்பாட்டுக்காவது வழி செய்யக் கூடாதோ! இரக்கமில்லாத அரக்கன். கோயில் பூசையும் நடைபெறவில்லையே! இது என்ன அநியாயம்!" என்று முணுமுணுத்துக் கொண்டான்.

இரவு மணி 12. எங்கும் நிசப்தம் நிலவியது. சுரேந்திரன் உணவைப் பற்றிய நினைவே இன்றி எல்லாம் ஈசன் செயல் என்று எண்ணி ஆறுதலாக இருந்தான்.

நரேந்திரன் மெல்ல நகர்ந்து இருட்டில் கையால் தடவிக் கொண்டு ஏதாவது உணவுப் பொருள் கிடைக்குமா என்று தேடினான். காளி தேவிக்குப் பின்புறம் ஒரு வெண்கலப் பாத்திரத்தில் கற்கண்டு சாதம் இருந்தது. அதை எடுத்தான். தரித்திரனுக்குத் தனப் புதையல் கிடைத்தது போல் இருந்தது. மட்டற்ற மகிழ்ச்சி அடைந்தான். கடும் பசியால் களைத்துப் போனவனுக்கு அது அமுதமாக இருந்தது. அந்தக் கல்கண்டு

சாதத்தை அள்ளி அள்ளி வாயில் வைத்து விழுங்குவானாயினான். "அடே! சுரேந்திரா! இப்பொழுதுதாவது நீ தெரிந்து கொள். தெய்வ யத்தினம் என்று சொல்லிக்கொண்டு பட்டினியாகக் கிடக்கின்றனையே! நான் பிரயத்தனப்பட்டு மனித யத்தினத்தால் கற்கண்டு சாதம் கிடைத்து உண்டு உவக்கின்றேன். நீ பட்டினி கிடந்து சாகின்றாயே! உன் தெய்வ யத்தினம் உனக்குத் துணை செய்கின்றதா?" என்று கூறி, அன்னத்தை விழுங்கினான். கல்கண்டு சாதப் பானையில் அடியில் நெல்லிக்காய் அளவுள்ள கற்கள் இருந்தன. நரேந்திரன் சுரேந்திரன் மீதுள்ள கோபத்தால் ஒவ்வொரு கற்களையும் அவன் மீது வீசி எறிந்தான். சுரேந்திரன் அதற்கும் கோபிக்காமல் அவன் கூறிய சொல் எறியையும் கல் எறியையும் தாங்கிக்கொண்டான். என்மீது கல்லால் எறிவது நரேந்திரன் அன்று. அம்பாள் தான் எறிகின்றாள். இந்த ஒவ்வொரு கல்லும் தேவி எனக்குத்தரும் அரும் பெரும் பரிசு என்று எண்ணி, அந்தக் கற்களைக் கண்ணில் ஒத்திக்கொண்டு மடியில் வைத்துக் கொண்டான்.

உண்ட மயக்கத்தால் நரேந்திரன் தூங்கி விட்டான். சுரேந்திரன் தியான சமாதியிலேயே தன்னை மறந்து இருந்தான்.

பொழுது புலர்ந்தது. அரசர் பெருமான் பரிஜனங்களுடன் வந்து கதவைத் திறந்தான். யோக நித்திரையில் இருந்த சுரேந்திரனும், கால் படி கற்கண்டு சாதம் தின்று போக நித்திரையிலிருந்த நரேந்திரனும் கண் விழித்து எழுந்து அரசனை வணங்கினார்கள்.

நரேந்திரன், "அரசே! என் கட்சிதான் வென்றது. பிரயத்தனத்தால் எனக்குக் கல்கண்டு சாதம் கிடைத்தது. உண்டு உவந்தேன்" என்றான்.

சுரேந்திரனுடைய நெற்றியில் வடுக்கள் இருந்தன. அரசன் "இது என்ன வடு?" என்று வினவினான். சுரேந்திரன் "அரசே! என்னை அம்பிகை கல்லால் எறிந்து கருணை புரிந்தாள்" என்று கூறி மடியில் இருந்த கற்களை எடுத்துக் காட்டினான். அவை கற்கள் அல்ல. முத்து, இரத்தினம், கோமேதகம், வைரம், வைடூரியம், நீலம், புட்பராகம், மரகதம், பவழம் என்ற நவரத்தின மணிகளாக ஒளி செய்தன. ஒவ்வொரு கல்லும் ஒரு லட்சம் பெறுமதியாகும்.

அரசர் "மனித யத்தனம் அற்ப பயனைத் தரும். அது கால் படி கற்கண்டு சோறாக அமைந்தது. ஒருவேளை பசியாற்றியது. தெய்வ யத்தினம் வாழ்நாள் முழுதும் வறுமையின்றி வாழ வைத்தது. ஆதலால் மனித யத்தினமும் வேண்டும். அது பெரும் பயனைத் தந்துவிடாது. தெய்வ யத்தினம் அளவற்ற பயனைத் தரும்" என்று கூறித் தெளிவித்தான்.

● சிவாஜி, ஸ்ரீதர், புதிய கதை, நான்கு நாயகிகள், இருந்தும் பிசுபிசுக்கும் படம். சிவாஜி என்ற இளைஞரை (அப்படித்தான் சொல்கிறார்கள்) சுற்றி நான்கு பெண்கள். இவர் இலங்கையில் ஒரு பெண்ணைப் பார்த்து (கீதா) மனத்தைப் பறிகொடுத்து, தன்னை நிருபர் ராகவன் என்று பொய்யாய் அறிமுகம் பண்ணி கலகலப்பாய்ப் போய், கல்யாணத்தின்போது மாமா பெண் (பத்மப்ரியா) எதிர் பாராமல் அவளைச் சுட்டு தானும் இறக்கிறாள். இரண்டு பேர் அம்பேல்.

பிறகு கூடவே இருந்து இயல்பாய் நலன்களைக் கவனிக்கும் செக்ரடரியை (ஜெயபாரதி) மணக்க எண்ணி அவளைக் கேட்காமலேயே(!) பத்திரிகையெல்லாம் அடித்து அவளிடம் சொல்லப் போகையில் அவள் தன் காதலனை அறிமுகப்படுத்துகிறாள். மூன்றாவதும் வாபஸ்.

நான்காவது ஏழை வேலைக்காரப் பெண் சரஸு (அனுராதா). தினமும் சிவாஜி வெளியே போகையில் ஒரு சிவப்பு ரோஜா தருவாள். அவள் வீட்டி உரிமை எடுத்துக்கொண்டு சிவாஜியைத்தான் மணப்பேன் என்று ஒரே போடாய்ப் போட, தடுமாறிய சிவாஜி ஒரு வழியாய் மனத்தைச் சரிப்படுத்திக் கொண்டு சரஸுவுக்கு வேறு ஒருவனை மணம்செய்து வைக்கிறார். கடற் கரையில் காத்து நிற்கும் சிவாஜியிடம் அவள் பிணமாக வர, சிவாஜி தனக்கும் பாசத்தைக் காட்ட முடியும் என்று அவளைத் தூக்கிக்கொண்டு கடலுக்குள் நடந்து போய்க்கொண்டேயிருக்கிறார்.

சிவாஜி என்ற இளைஞரின் மனம் தாவிக் கொண்டே இருப்பதால் அவர்மேல் பரிதாபம் வரவில்லை; கோபம்தான் வருகிறது. சிறந்த நடிகர் தான் சந்தேகமில்லை; அவர் நடிப்பாற்றல் மீண்டும் ஒரு முறை வீணாக்கப் பட்டிருக்கிறது.

இது ஸ்ரீதர் படம் என்று சத்தியம் பண்ணினாலும் சந்தேகம் வருகிறது. எம். எஸ். வி.யின் இரண்டு பாடல்கள் எங்கும் அடிக்கடி ஒலிக்கும். ரொம்ப நாளைக்கப்புறம் பொரிந்து தள்ளும் நாகேஷ்.

- நளினி சாஸ்திரி



அமுல், ஹெல்ப் மீ!

பிஸ்கோத்





அன்புள்ள 'டிங்-டாங்' கடிகார கம்பெனி உரிமையாளருக்கு,

உங்களின் ஒரே கஸ்டமர் ஜே. பல்லவி எழுதும் கடிதம். தங்கள் கடைக்குத் திக் விஜயம் செய்து என் ஒரே கைக் கடிகாரத்தை ரிப்பேர் செய்து தருமாறு தங்களிடம் கொடுத்தேன். 'சரி செய்து கடைப் பையனிடம் கொடுத்து அனுப்புகிறேன்' என்று சொன்னீர்கள். இப்படிச் சொல்லி இன்றோடு எழுபத் தேழு நாட்கள் ஓடிவிட்டன. இன்னும் என் கைக் கடியாரம் என் கையை வந்து சேரவில்லை. ஏன்? கடைப் பையன் அவ்வளவு மெதுவாக நடந்து வருகிறானா? அல்லது வேறு ஏதாவது காரணமா? எதுவாக இருப்பினும் இக்கடிதம் கண்டவுடன் விரைவில் என் கைக் கடியாரத்தைக் கொடுத்து அனுப்புமாறு கேட்டுக் கொள்கிறேன்.

ஜே. பல்லவி

குறிப்பு: ரிப்பேர் செய்ய வரும் கடிகாரத்தைச் சரி செய்து வாடகைக்கு ஏதாவது விடுகிறீரா?

பின் குறிப்பு: பேசாமல் நீங்கள் புண்ணாக்குக் கடை வைத்திருக்கலாம்.

மதிப்பிற்குரிய பல்லவி அம்மையாருக்கு,

'டிங்-டாங்' அமுலின் வணக்கம். தங்களின் கடிதம் போஸ்ட்மேன் அருளால் வந்து சேர்ந்தது. தங்களின் முக அழகிற்குச் சற்றும் குறைந்ததல்ல தங்களின் கையெழுத்து! ஆஹா!

ஏதோ, கடியாரம் என் கடையில் சர்விசுக்குக் கொடுத்திருப்பதாக எழுதியிருந்தீர்கள். ரொம்ப நல்லது. அதைத் தேடி, அது கிடைத்தால் ரிப்பேர் செய்து அனுப்பி வைக்கிறேன்.

தாமதத்துக்கு ஹி...ஹி...ஹி... ஆமாம், இப்போது பல்லவி எப்படி இருக்கிறது?

அமுல்

குறிப்பு: கடியாரத்தை வாடகைக்கு விடுவதா? ஆஹா! நல்ல யோசனை. இனி செயல்படுத்த முயற்சி செய்கிறேன்.

பின் குறிப்பு: முதலில் புண்ணாக்குக் கடை தான் வைத்திருந்தேன். இப்போதுதான் மாடுகள் போஸ்டர்கள் தின்ன ஆரம்பித்து விட்டதே? அதனால் கடை ஓடவில்லை. 'கடியாரம் ரிப்பேர் செய்வது எப்படி?' என்ற புத்தகத்தை 'ஒரே ஒரு தடவை படித்தேன். அவ்வளவுதான். கடியாரக் கடை வைத்து விட்டேன்!

அமுல் பேபிக்கு,

உம்முடைய பெயர்தான் குழந்தைத் தனமாக இருக்கிறதென்றால் உம் அறிவுகூடவா அப்படி இருக்க வேண்டும்? த்சொ... த்சொ..

என் கடிதத்தை நன்றாக உற்றுப் பாரும். என் பெயர் பல்வலி என்றா இருக்கிறது? பல்லவி! பேசாமல் இலவச கண் சிகிச்சை முகாமுக்கு ஒரு தடவை போய் வாரும்.

நிற்க, என் கடியாரம் என்னவாயிற்று தேடிக் கண்டு பிடித்து விட்டீரா, இல்லையா? போன வாரம் நான் கடைக்கு வந்தபோது 'பத்து நிமிட வேலைதான். உட்கார்ந்து. சரி செய்து கொடுத்து அனுப்புகிறேன்' என்று சத்தியம் செய்தீர்? இன்னுமா உட்காரவில்லை?

ஜே. பல்லவி

குறிப்பு: ஒரு சின்ன ரிஸ்ட் வாட்ச் ரிப்பேர் செய்வதற்கே இத்தனை மாமாங்கம் என்றால், உம்மிடம் 'வால் கிளாக்' கொடுத்து விட்டால் அவ்வளவுதான். இன்னொரு ஜென்மம் எடுத்து வந்துதான் வாங்கிக் கொள்ள வேண்டும்.



நல்ல நண்பன்

நீ எப்பொழுதும் நண்பனாகவே இருக்க வேண்டுமென்றால் அடுத்தவனுக்கு அடிக்கடி புத்தி மதிகளைச் சொல்லாதே.

- அந்தோனி ஈடன்

அனுப்பியவர்: சி. ஆர். டி.

வெறுக்கும் பல்லவிக்கு,

ராகுகாலத்தில் உங்களிடமிருந்து கடியாரத்தை வாங்கினேனோ என்னவோ தெரியவில்லை. இப்போதுதான் திருதிருவென்று யாரோ மாதிரி விழிக்கும்படி ஆகிவிட்டது. தேடுகிறேன், தேடுகிறேன், தேடிக்கொண்டே இருக்கிறேன். தாமதத்துக்குப் பொறுக்க.

அமுல்

குறிப்பு: சுஜாதா 'கணேஷ்' துப்பறியும் புலியாமே? அவர் அட்ரஸ் தெரிந்தால் கொஞ்சம் அல்லது முழுதும் சொல்லுங்களேன். உங்க விஷயத்தைத் தேடச் சொல்லலாம்.

பின் குறிப்பு: எனக்கொரு சந்தேகம். ரிப்பேருக்காகக் கடியாரத்தை என்னிடம் தான் கொடுத்தீர்களா?

தமிழகத்தின் கோயபல்லே!

அவரவர்கள் மணலில் கயிறு திரிப்பார்கள் என்றால் நீர் அதுகூட இல்லாமல் திரிக்கிறீரே? பின்னே என்னவாம். கடியாரத்தை வெளியில் விற்று 'வில்வாத்ரி பவ' னில் விழுங்கிவிட்டு உள்ளே தேடினால் எப்படிக் கிடைக்கும்?

இன்று காலை என் தோழி வளவர்கோன் பாவை திருமணத்துக்குச் சென்றிருந்தேன். அவள் அடிக்கடி கையை உயர்த்தி எல்லோருக்கும் வணக்கம் போட்டுக் கொண்டிருந்தாள். 'தேவையில்லாமல் ஏன் அப்படிச் செய்கிறாள்?' என்று ஆச்சரியப்பட்டுக் கொண்டிருந்த நான் அப்போதுதான் கவனித்தேன். அவள் கையில் கட்டி இருந்தது என்னுடைய கடியாரம்! மெதுவாக அவளிடம் 'இந்தக் கடியாரம் ஏது?' என்று கேட்டேன். 'இது என் அண்ணன் எனக்குத் திருமணப் பரிசாகக் கொடுத்ததாக்கும்!' என்றாள்.

யூ ஹெல்! எத்தனை நாளா இந்த பில்லா வேலை நடக்கிறது? சரிசெய்யக் கொடுக்கிற கடியாரத்தை இப்படித்தான் கிடைத்த காசுக்கு விற்றுவிடுவதா?... என் தாத்தா. ஒரு கராத்தே வீரர். ஞாபகம் இருக்கட்டும்-பல்லவி!

குறிப்பு: இந்த மாதிரியான பெரிய விஷயத்துக் கெல்லாம் கணேஷ் வருவதில்லை என்று கேள்வி.

ஐயோ பல்லவி!

எனக்கு ஒன்றுமே தெரியாது. நான் பில்லாவும் அல்ல; அவன் தம்பியும் அல்ல. நான் சாதா அமுல்! தயவு செய்து என்னை நம்பு!

இதில் ஏதோ சதி நடந்திருக்கிறது. என் எதிரிகள் என்னிடம் காசுதான் வாங்க முடியவில்லையே என்று பழிவாங்கி யிருக்கிறார்கள். பென்ஷனில் இருக்கும் ஒரு நீதிபதி தலைமையில் ஒரு கமிஷன் போட்டால் உண்மை தெரிந்து விடும்.

நான் எதற்கு உன் கடிகாரத்தை விற்கிறேன்? அப்படி என்னிடம் செலவுக்குப் பஞ்சம் என்றால் உன்னிடம் குறைந்த வட்டியில்லைமாற்று வாங்கிக் கொள்கிறேன். இப்படியிருக்கும்போது ஐந்தோ பத்தோ போகும் உன் கடியாரத்தை விற்று ஏமாற்றுவேனா? உண்மை ஒரு நாள் வெளிப்படும்... ல.. ல.. ல

ஹ... ஹ... ஹ

அமுல்

குறிப்பு: தப்பாக நினைக்க வேண்டாம். உன் தோழி – அதுதான் அந்தத் தமிழ் மூதாட்டியின் முகவரி என்ன?

சிரிக்கும் அமுலுக்கு,

அந்தக் கடியாரம் துபாய் நாட்டில் பாய் வியாபாரம் செய்யும் என் மாமா (வயது 49.5) பிரியமாக எனக்கு அனுப்பிய லேட்டஸ்ட் கடியாரமாகும்! நாம் 'இப்போது என்ன நேரம் இருக்கும்?' என்று நினைத்தாலே போதும். 'பளிச்'சென்று நேரம் காட்டும்.

கடியாரத்தைத்தான் (விற்று) தொலைக்கிறீர். இந்த முகவரியையாவது பத்திரமாக வைத்துக் கொள்ளும். இதோ என் தோழியின் முகவரி: ஓய். வளவர்கோன் பாவை, 7, தீ. நகர், சென்னை-17.

பல்லவி.

குறிப்பு: செலவுக்கு ஏதாவது பணம் தேவையா?

கண்ணே பல்லவி!

உன் தோழி வளவர்கோன் பாவையின் அண்ணன் பெயர் ஆலங்காடன். அவன்

என் இனிய நண்பன். 'என் தங்கை திருமணப் பரிசாகக் கடியாரமொன்று கொடுக்க நினைத்திருக்கிறேன், விலைக்கு ஒன்று வாங்கித் தா!' என்று என்னிடம் கேட்டிருந்தான். சர்வீஸ் செய்து வைத்திருந்த உன் புத்தம் புது கடியாரத்தை அவனுக்குத்தான் நான் வாங்கி வைத்திருக்கிறேன் என்று நினைத்து, நான் கடையில் இல்லாத நேரத்தில் எடுத்துக் கொண்டு போய்த் தன் தங்கைக்கு, அது தான் உன் தோழிக்குப் பரிசாகக் கொடுத்து விட்டான். இதுதான் நடந்தது.

கடியாரத்தைத் திருப்பித் தருமாறு ஆலங்காடனிடம் கேட்டேன். பாவம் அவன், தன் தங்கைக்குப் பரிசாகக் கொடுத்துவிட்டதை எப்படித் திருப்பிக் கேட்பது என்று புரியாமல் விழித்துக் கொண்டிருக்கிறான். இன்னும் தூங்கவில்லை. இப்படி அறியாமல் நடந்துவிட்ட நிகழ்ச்சிக்குப் பரிகாரமாக நீ எதைச் சொன்னாலும் செய்கிறேன்.

அமுல்

குறிப்பு: வானத்தை வில்லாக வளைத்தல், மணலைக் கயிறாகத் திரித்தல், சந்திரனைக் கையில் பிடித்தல் — இதெல்லாம் பழையது புதிதாக ஏதாவது சொல். முடிந்தால் செய்கிறேன்.

பின் குறிப்பு: 'பணம் தேவையா?' என்று கேட்டிருந்தாய். தேங்க்ஸ். பணம் அனுப்பினால் இன்னொரு தேங்க்ஸ் சொல்கிறேன்.

டார்லிங் அமுல்!

நான் அவசரப்பட்டு உங்களைத் தப்பாக எடை போட்டு விட்டேன்.

என் கடியாரத்துக்குப் பரிகாரமாக 'நீ எது சொன்னாலும் செய்கிறேன்' என்று சத்தியம் செய்திருந்தீர்கள். அப்படியென்றால் ஒன்று செய்யுங்களேன். என் கிளப்பில் ஆண்டுதோறும் விளையாட்டுப் போட்டி நடக்கும். செஸ் பந்தயத்தில் அந்தக் குண்டு சுகன்யா வருடம் தவறாமல் செஸ் சாம்பியனாக வருகிறாள். நான் ஃபைனலில் அவளுடன் மோதித் தோற்று விடுகிறேன். இந்தத் தடவை நான் தான் செஸ் சாம்பியனாக வரவேண்டும். நீங்கள்தான் இதற்கு ஒரு வழி செய்ய வேண்டும். இதுதான் நீங்கள் எனக்குச் செய்ய வேண்டிய உதவி. இதை உரிமையுடன் உங்களிடம் கேட்கிறேன். ப்ளீஸ் அமுல்!

பல்லவி

குறிப்பு: உங்கள் ராசி என்ன?

பின் குறிப்பு: இத்துடன் 'பிளாங்க் செக்' ஒன்று அனுப்பியுள்ளேன். 'சுட்டிக்காரனைச் சௌக்கியமா?' என்று கேட்கவும்.

அன்பே பல்லவி!

பூ! ஊதிவிடுகிறேன். கிளப்பில் நீதான் இந்தத் தடவை சாம்பியன்! அந்தச் சுகன்யாவை என்ன செய்யப் போகிறேன் பார்! எங்கே நீ இரண்டு லிட்டர் கெரசின் வாங்கித் தாருங்கள்!' என்று கேட்டுவிடப் போகிறாயோ என்று பயந்து நடுங்கிக்கொண்டிருந்தேன். அப்பாடா, தப்பித்தேன்.

அமுல்

குறிப்பு: போன வாரம் காளை ராசி. இந்த வாரம் கன்னி ராசி.



ஒருசமயம் தஞ்சை அரசரிடம் சேவகம் செய்து வந்த ஒருவன், தியாகராஜ ஸ்வாமிகளிடம் சென்று ஒரு கீர்த்தனையைச் சொல்லித் தரும்படி வேண்டினான். ஸ்வாமிகளும் சேவகனின் இசை ஆர்வத்தை உணர்ந்து அவனுடைய குரலின் கருநிலை நிதானித்து அதற்கேற்றபடி அதிக ஸ்வர ஸஞ்சாரமில்லாமல் "யதுகுல காம்போதி" ராகத்தில் "நீதயசே ராம" என்ற கீர்த்தனையை இயற்றி அவனுக்குச் சொல்லிக் கொடுத்தார்.

- ஏ. சங்கரசேது

பின் குறிப்பு: கேட்டேன். சுட்டிக்காரன் சௌக்கியம் என்று சொன்னான்.

டியர் அமுல்!

உங்களுக்கு எப்படி நன்றி சொல்வதென்றே எனக்குத் தெரியவில்லை. தாங்க்யூ! எனக்கே ஆச்சரியம். முதல் ரவுண்டிலேயே சுகன்யா தோற்று ஓடிவிட்டாள். என் வெற்றிக்குக் காரணம் நீங்களே! என்ன பரிசு தேவை?

ஜே. பல்லவி அமுல்.

குறிப்பு: அது என்ன வாரத்துக்கு வாரம் ராசி மாறுகிறது? வரும் புதன்கிழமை ஓடியனுக்கு ஓடிவாருங்கள்.

அன்பே? அமுதே!

என் காதலியின் வெற்றிக்காக வியர்வை சிந்தாமல் நான் பட்ட கஷ்டம் எனக்குத்தான் தெரியும்.

உன் எதிரி சுகன்யா இருக்கிறாளே, அவள் வேறுயாரும் இல்லை. என் மாமா மகளாக்கும்! இவள் தலையில்தான் என்னைக் கட்டுவதாக இருந்தார்கள். என்னை அவளுக்குப் பிடிக்கவில்லை. காரணம், அவள் ஒரு புத்திசாலியைத்தான் கட்டிக் கொள்வாளாம். இருந்தாலும் உண்மை அதுவல்ல. பின்? சைஸில் அவள் மாதிரியே இருக்கும் பிரசன்னா என்பவனை அவள் காதலிப்பதுதான் காரணம். இவளுடைய காதல் விஷயத்தைத் தெரிந்து கொண்ட நான் இதை மாமாவிடம் சொல்லி விடுவதாகப் பயமுறுத்தினேன். அவ்வளவுதான். பயந்து விட்டாள். அப்புறம் நான் எதைச் சொன்னாலும் கேட்பதாக ஒப்புக்கொண்டாள். உன் செஸ் விஷயத்தைச் சொன்னேன். முதலில் மறுத்தாள். அப்புறம் ஒப்புக் கொண்டாள். தன் காதலுக்காக செஸ்ஸைத் தியாகம் செய்தாள். உன்னிடம் தோற்பது போல் நடித்தாள். தோற்றாள். வெற்றி உனக்கே! எப்படி என் சாமர்த்தியம்! உத்தன் அமுல்.

குறிப்பு: ஓடியனுக்கென்ன, கம்போடியாவுக்கே ஓடி வருகிறேன்!

நெடுங்காலமாக உபயோகித்தாலும், கேடு ஒன்றுமில்லை



அவருடைய நைலான் மீன்வலைகள் உறுதியானவை, நீடித்து உழைப்பவை — அவரைப் போலவே இயற்கைச் சக்திகளை எதிர்த்து சமாளிப்பவை.

இயற்கையின் தீங்கிழைக்கும் சக்திகளை எதிர்த்து தினந்தோறும் விடியற் காலையில் ஆரம்பமாகிறது மீனவரின் அன்றைய கடினப் போர்.

வெற்றி என்பது அபூர்வம். தன் வாழ்க்கைக்கு வேண்டியதை சம்பாதிக்க ஒவ்வொரு நாளும் தன் உயிரையே பணயம் வைத்து மீன் பிடிக்கிறார்.


ஆனால் இப்பொழுது... ஸ்ரீராம் ஃபைபர்ஸ் தயாரிக்கும் குதிரை மார்க் 'டஃபலான்' நைலான் மீன்வலை நூலினால் பின்னப்பட்ட அவருடைய மீன்வலைகள் மிக உறுதியாய் இருக்கின்றன. கடல்நீர் மற்றும் கடுமையான வெய்யிலினால் ஏற்படும் கேடுகளை சமாளிக்கின்றன.

இனி அவர் குவியல் குவியலாய் மீன் பிடிப்பது நிச்சயமே!

ஸ்ரீ ராம் ஃபைபர்ஸ் லிட்

நைலான் மீன்வலை நூல், நைலான் டயர் கார்ட் மற்றும் நைலான் மோல்டிங் பவுடர் தயாரிப்போர்.

OBM 6536 TM



காந்தியடிகள் இந்து மதத்தில் ஆழ்ந்த பற்றும் பெரு நம்பிக்கையும் கொண்டவர். அவர் வெறும் நம்பிக்கையுடன் மட்டும் நின்றுவிடவில்லை. இந்து மதக் கொள்கைகளில் பற்றுக் கொண்டு அவற்றின்படி நடப்பதையே, தன் இலட்சியமாகக் கொண்டு மனத்தாலும், செயலாலும், உடலாலும் உண்மையான இந்துவாக விளங்கினார். தம் வாழ்வின் ஒவ்வொரு அம்சத்திலும் மதமே காரணமாகக் கொண்டார். சத்திய ஆவேசத்தை வாழ்க்கையின் பிரதான உணர்ச்சியாகக் கொண்ட அவர், மதமும் அறநெறியும் ஒன்றே என்று கருதினார். வாழ்வின் மற்ற அலுவல்களிலிருந்து மத அம்சத்தைப் பிரிக்க முடியாது என்பது கர்ம யோகியாக விளங்கிய அவருடைய கருத்து.

''மனிதர்களைப் பிரித்து வைப்பது மதங்களின் நோக்கமல்ல. சேர்த்து வைப்பதே அதன் நோக்கமாகும்'' என்று பறைசாற்றிய அவர் —ஹிந்து மதத்தின் சிறப்புக்கள் குறித்து பெருமிதம் கொண்ட அவர் — தம்மை ஒரு ஹிந்து என்று அழைத்துக் கொண்ட அவர் — அதன் பெயரால் நிலவிய தீண்டாமை முறையைப் பகுத்தறிவுக்கும், மனித வர்க்கத்துக்கும் எதிரானது என்று நிராகரித்தார். இராமாயணத்தின் அறநெறி, உபநிடதங்கள், பகவத்கீதை ஆகியவற்றில் ஆழ்ந்த ஆன்மீக உண்மைகளை இதற்குச் சான்றுகளாகக் காட்டினார்.

''மனித குலத்துக்குச் சேவை செய்வதன் வாயிலாகத் கடவுளைக் காண்பதற்கு நான் முயல்கிறேன். ஏனெனில் கடவுள் சுவர்க்கலோகத்திலோ, கீழே மண்ணுலகிலோ இல்லை என்பதும், ஒவ்வொருவரின் உள்ளத்திலும் உறைகிறார் என்பதும் எனக்குத் தெரியும்'' என்று கூறிய காந்திஜி நற்கருமங்கள் நம் உள்ளத்தைத் தூய்மைப்படுத்திக் கடவுளைக் காட்ட வல்லவை என்று கருதியதால் ஹரிஜன 'சேவையைத் தேர்ந்தெடுத்தார்.

உயர்ஜாதியினர் தீண்டாதாரை 'அந்தியஜன்' (கடைசியாகப் பிறந்தவன்) என அழைத்தபோது, அவர்களை 'ஹரிஜன்' (ஆண்டவனுடைய மனிதன்)என்று அழைத்தார். ஹரிஜன சேவையை ஒரு மதக் கடமையாகக் கருதிவந்த அவர்,


''ஈதாவாஸ்யம் இதம் ஸர்வம்
யத்கிஞ்ச ஜகத்மயம் ஜகத்''

என்பதை எல்லா இந்துக்களும் உணர்ந்து, பொருளாதார, கல்வித் துறைகளில் ஹரிஜனங்களைக் கைதூக்கி விடுவதைத் தங்கள் பணிகளாக ஏற்றுக் கொள்ள முன்வர வேண்டும் என விரும்பினார்.

ஹிந்து மதம் விழுதுகள் விட்டிறங்கிய பிரம்மாண்டமான ஆலமரம். புத்திக்கு எட்டாத காலத்திலிருந்து படர்ந்து வருவது புத்திக்கு எட்டாத காலம்வரையில் அது வாழ்ந்திருக்கும் என்பது மறுக்க இயலாத உண்மையாகும். இவ்வுண்மையை உணர்ந்து போற்றிய அண்ணல்,

'வேறு எந்த மதத்திலும் உயர்வாகக் கருதக்கூடிய தத்துவங்கள் எல்லாம் ஹிந்து மதத்தில் அடக்கம். ஹிந்து மதத்தில் கூறப்படாதது எதுவேனும் உண்டென்றால் அது

இரண்டாம் பரிசுக் கட்டுரை



அருள்வாக்கு

பயமில்லாமல் செய்துகொள்வது எப்படி?

'நரஜன்மம் துர்லபம்; அதுவே உயர்ந்தது' என்பது ஏன் என்று யோசித்தேன். யோசனை செய்ததில் மிருக ஜன்மத்தில் உள்ள ஒரு பெரிய குறை தெரிய வந்தது. மிருகங்களுக்குப் பாவம் இல்லாவிட்டாலும் பயம் இருக்கிறது. எப்பொழுது யார் தன்னைக் கொல்வார்களோ என்ற பிராண பயம் கொடிய மிருகத்துக்கும் நிறைய உண்டு. மனிதனுக்கும் பலவிதமான பயங்கள் உண்டு. ஆனால் பயமில்லாமல் செய்து கொள்ள மனிதனுக்கு மட்டுமே வழி இருக்கிறது. மிருகத்துக்கு இந்த வழி இல்லை. பயம் இல்லாமல் செய்து கொள்வது எப்படி? பிறவி இல்லாமல் செய்து கொண்டால்தான் பயம் இல்லாமல் இருக்கலாம். 'எல்லாம் நாம்தான்' என்கிற ஞானம் வந்து விட்டால் எதனிடமும் பயம் இராது. அந்த அந்த ஞானத்துக்குப் பின் சரீரம் விழுந்தால் இன்னொரு சரீரம் எடுக்க மாட்டோம். இந்த ஞானத்தை அடைகிற மார்க்கங்கள் மனிதனுக்குத்தான் இருக்கின்றன. மிருகங்களுக்கு இல்லை. மனிதன் ஞானத்தை, அபாய நிலையை ஜன்ம நிவிருத்தியை அடையவே மகான்கள் வாக்கைப் பயன்படுத்தினார்கள். வேத, வேதாந்த இதிஹாஸ, புராண தர்ம சாஸ்திரங்கள் எல்லாம் வாக்கு இருப்பதால்தானே உண்டாயின.

-ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள்

தேவையற்றது என்பதாகவே இருக்கும்' என்று தீவிர நம்பிக்கையுடன் கூறி வந்தார். ஆனால் ஹிந்து மதத்தின் பெயரால் ஹிந்துக்கள் அனுஷ்டிக்கின்ற தீண்டாமையானது கடவுளுக்கும் மனிதனுக்கும் எதிரான பாபம் என்பது அவருடைய கருத்தாகும். நம் சமூகம் மிக தாழ்ந்த நிலையில் இருந்த காலத்தில் இந்த விஷம் அதில் புகுந்திருக்க வேண்டும் என்று கருதிய காந்திஜி, ஹிந்து சாஸ்திரங்களில் இதற்கு ஏதேனும் அங்கீகாரம் உள்ளதா என்பதைத் துருவி ஆராய்ந்தார். ஹிந்து மதத் தத்துவத்தை அந்த ஆராய்ச்சியின் மூலம் கண்டு, 'பிரும்ம சத்தியம்; ஜகம் மித்திய' என்ற பேருண்மையை உணர்ந்தார். அதன் பின்,

'என்னைப் பொறுத்தவரை தீண்டாமைப் பிரச்னையானது ஹிந்து மதத்துக்கு ஜீவ மரணப் பிரச்னையாகும். தீண்டாமை வாழ்ந்தால் ஹிந்து மதம் அழியும். இந்தியா கூட அழியும். எனவே தீண்டத்தக்க ஒவ்வொரு ஹிந்துவும் தம்முடைய இருதயத்திலிருந்து தீண்டாமையை விரட்ட வேண்டும். இது மனித வர்க்கத்துக்கே நன்மை தரக் கூடிய செயலாகும்' என்றும்,

'சுய நல நோக்கங்கள் காரணமாக நம்மை உயர்ந்தவர்கள் என்றும், மற்றவர்களைத் தாழ்ந்தவர்கள் என்றும் கருதுவது ஒரு தவறு. தீண்டாமை போன்ற தீமையை மதத்துடன் முடிச்சுப் போடுவது இரட்டைத் தவறாகும். ஆனால் இந்த அப்பட்டமான தீமைக்கு ஆதாரமாகப் படித்துத் தேர்ந்த பண்டிதர்கள் வாதாடுவதும், சாஸ்திரத்திலிருந்து ஆதாரம் காட்டுவதும் எனக்கு வருத்தம் தருகின்றன' என்றும் நவஜீவனில் எழுதினார் நம் அண்ணல்.

எழுத்தின் மூலமும், சொல்லின் மூலமும் தீண்டாமையை ஒழித்துப் பிரசாரம் செய்த காந்திஜி அதன் பின் தீரராக நின்று செயல்படத் தொடங்கினார். வீட்டுக்குள்ளேயே விந்தைப் புரட்சியை முதலில் செய்து காட்டினார். ஆம், தம் மனைவியின் உள்ளத்திலிருந்து தீண்டாமை உணர்வை அடியோடு ஒழிக்க வேண்டி, ஆசிரமத்தில் வளர்ந்து வந்த 'லட்சுமி' என்ற தீண்டாத சிறுமியைத் தம் மகளாகச் சுவீகாரம் எடுத்துக் கொண்டார்.

தீனபந்து, அனாதரட்சகன், தீன தயாளன் என்று வர்ணிக்கப்படும் இறைவனின் பெருமைகளையும், ஹிந்து மதத்தின் பாரம்பரிய தர்மத்தையும் ஜாதி ஹிந்துக்களுக்கு எடுத்துக் காட்டி, ஹிந்து மத தர்மமே தான் மேற்கொண்ட ஹரிஜன சேவையின் அடிப்படை என்பதை உணரச் செய்தார். ஹிந்து மதத்தின் மேல் படிந்துள்ள களங்கத்தைப் போக்க, கோவில்களை ஹரிஜனங்களுக்குத் திறந்து விடும்படி ஜாதி ஹிந்துக்களைக் கேட்டுக்கொண்டார். கலப்பு மணத்தையும், சமபந்தி போஜனத்தையும் வற்புறுத்தினார். ஹரிஜனங்கள் செல்லாத கோயில்களுக்குத் தாமும் செல்ல மறுத்து விட்டார். அவருடைய இடை விடாத முயற்சியால் கோயில்கள் ஹரிஜனங்களுக்காகத் திறந்து விடப்பட்ட அன்று, ஹரிஜனங்களைவிட மிகவும் மகிழ்ந்து, அன்று காலை பல்லாயிரக் கணக்கான ஜாதி ஹிந்துக்களுடனும், ஹரிஜனங்களுடனும் திருவனந்தபுரம் பத்மநாப கோயிலுக்குச் சென்று தரிசனம் செய்தார். அதன் பின்பும் ஹரிஜன முன்னேற்றத்துக்காகப் பலவாறு பாடுபட்டார் அண்ணல் காந்தியடிகள்.

சுருங்கக் கூறின், 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' என்ற தெய்வத் திருவள்ளுவனின் குறளைப் பின்னணியாக்கி வாழ்வு நெறியை அமைத்துக் கொண்ட அண்ணலின் அரும் பெரும் முயற்சியில் ஹிந்து மதத்தின் மேல் படர்ந்திருந்த தீண்டாமை எனும் தூசு அகற்றப்பட்டது.

''சம திருஷ்டினே திருஷ்ணா, தியாகி
பரஸ்திரீ, ஜேனே, மாதரே,
ஜிஹவாதகிஅஸத்ய, னபோலே
பரதன் நவஜாலே ஹாதரே—
வைஷ்ணவ ஜனதோ.''



Dr. S. R. சிவராஜ்

வாலிபர்கள் !! **மணமானவர்கள் !!**

வாழ்க்கையில் ஏற்பட்டுள்ள பலஹீனங்களை நீக்கி,
தாம்பத்திய வாழ்வை இன்பமுடன் அனுபவித்து மகிழ,
இன்றே புகழ் பெற்ற 'ரகசிய வியாதி நிபுணர்'
ஆண்மைக் குறைவு நீக்கும் 'அரிய வைத்திய மேதை'

'கவிராஜ்' டாக்டர் S. R. சிவராஜ், R.I.M.P.

அவர்களிடம் சிறந்த முறையில் சிகிச்சை பெற, அவர் சுற்றுப்பயண முகாம்களில் நேரில் சந்தித்து வாழ்வில் மகிழ்ச்சி காணுங்கள். நேரில் சந்திக்க முடியாதவர்கள், குறைகளை விபரமாகத் தலைமை அலுவலகத்துக்கு எழுதவும். (கடிதங்கள் ரகசியமாகப் பாதுகாக்கப்படும்.) மருந்துகள் விரிவான விளக்கங்களுடன் வி.பி.பி. மூலம் அனுப்பி வைக்கப்படும்.

❋ **குழந்தை பாக்கியம் (கர்ப்ப அணுக்கள்) இல்லாதவர்கள்**
❋ **கல்யாணமாகி பல ஆண்டுகளாகக் குழந்தை பாக்கியமே இல்லாதவர்கள்**

சிறந்த முறையில் சிகிச்சை பெற்று, கர்ப்ப அணுக்கள் தேவையான அளவு உற்பத்தியாகி குழந்தை பாக்கியம் பெற்று மகிழ்ச்சியடையும் வாய்ப்பை ஏற்படுத்திக் கொள்ளுங்கள். 25 வருட சுற்றுப் பயணத்தில், அவரிடம் சிகிச்சை பெற்றுப் பலன் அடைந்தவர்கள் பல்லாயிரம் பேர்கள். அவர்களைப் போல் நீங்களும் பலன் அடைய வேண்டுமல்லவா?

விரைவில் பலன் காண விசேஷ 1 மாத சிகிச்சை ★ குறைந்த ஸ்பெஷல் 1 மாத சிகிச்சை

A-வகுப்பு	B-வகுப்பு	C-வகுப்பு	மீடியம்	ஸ்பெஷல்	1-ம் நெம்பர்	நேரில் பெறலாம்
ரூ. 350-00	250-00	175-00	115-00	90-00	75-00	V.P.P.மூலம் பெறலாம்

தலைமை அலுவலகம்:

சிவராஜ் சித்த வைத்தியசாலை

C-56, தமிழ்ச் சங்கம் ரோட் பின்புறம்
(சென்ட்ரல் டாக்கீஸ் வடபுறமுள்ள ஏரியின் முன் பக்கம்)
காந்தி ஸ்டேடியம் – சேலம்-636007

இந்தி தாய்மொழி இல்லாத ஆசிரியர்கள் எழுதும் இந்தி நூல்களுக்கான பரிசுகள்

நீங்கள் ஓர் எழுத்தாளரா? இந்திய பிரஜையா? உங்கள் தாய்மொழி ஹிந்தி அல்லாத ஒரு இந்திய மொழியா? இந்தி தாய் மொழியில்லாத பிரதேசத்திலோ அல்லது இந்திய சர்க்கார் நிர்வாகப் பகுதியிலோ குடியேறியுள்ளவரா? தாங்கள் சொந்த கலைத் தயாரிப்பாக, கலை விமர்சனமோ, நுண்கலை மனிதாபிமானம், விஞ்ஞானம், சமூக இயல் தொழில் நுணுக்கம் பற்றியோ நூல்கள் எழுதியுள்ளீர்களா?

அப்படியானால் தாங்கள் **1980 – 81** ஆண்டுக்கான இலக்கியப் போட்டியில் பங்கேற்க அழைக்கிறோம். உங்கள் விண்ணப்பங்களை வேண்டிய அத்தாட்சிகளோடு **1981 பிப்ரவரி 28-ந் தேதிக்குள் இயக்குநர், மத்திய ஹிந்தி டைரக்டரேட், கல்வி, கலை மந்திராலயம், மேற்கு பிளாக் எண் 7, ஆர். கே. புரம், புது தில்லி – 110022** அனுப்ப வேண்டும்.

தேசியப் போட்டியிலோ, சர்வ தேசப் போட்டியிலோ முன்பே பரிசு பெற்ற நூல் இந்தப் போட்டிக்கு ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. மேலும் இந்தத் திட்டத்தின்படி சென்ற ஐந்து வருஷங்களில் பரிசு பெற்ற ஆசிரியர் பங்கேற்க இயலாது.

ஒவ்வொரு வருஷமும் இந்தப் பரிசுத் திட்டப்படி ஒவ்வொன்றும் **1500 ரூபாய்** வீதம் பதினாறு பரிசுகள் வழங்கப்படுகின்றன.

மேலும் விவரங்களுக்கும் விண்ணப்ப பாரங்களுக்கும் உதவி இயக்குநர் (விஸ்தரிப்புத் திட்டங்கள்) அவர்களுக்கு மேலே கண்ட விலாசத்தைக் குறிப்பிட்டு எழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.

davp — 511(125)/80



வெந்து தணிந்த காடுகள்

இந்திரா பார்த்தசாரதி

15

'மனித சுபாவத்தை இது இப்படித்தான் என்று வரையறுத்துச் சட்டம் போட்டு, 'ப்ரேம்' பண்ணி மாட்டிவிட முடியாது' என்று அருண் சொன்னது, என்ன வாஸ்தவமானவார்த்தைகள்!...அவனுக்கும் வாழ்க்கை அலுக்கத் தொடங்கியிருக்கிறது. அவனுக்கும், ராதிகாவுக்கும்... ஏன் தாமோதரனுக்குந்தான்... ஆனால் அவன் இதை ஒப்புக்கொள்ளத்தான் மறுப்பான்.


இவற்றில் எந்த அனுபவத்தினால் ஏற்படுகின்ற அலுப்பு, உயர்வு' எது 'தாழ்வு' என்று எதைக் கொண்டு சொல்ல முடியும்? ஒரு காலத்தில் இந்த 'உயர்வு ''தாழ்வு' பிரச்னை அவள் மனத்தை அரித்துக்கொண்டிருந்தது என்பதை இப்பொழுது நினைத்துப் பார்க்கும்போது வேடிக்கையாய்த்தான் இருக்கிறது! அவளுடைய கலை ரசனையையும், இலக்கிய ஈடுபாட்டையும் புரிந்துகொள்ளவில்லை என்று அருண் மீது அவளுக்கு எவ்வளவு கோபம் வந்திருக்கிறது! இது கோபங் கொள்ள வேண்டிய விஷயம் தானா?

சில மாதங்களுக்கு முன் அவள் பஸ்ஸில் வந்து கொண்டிருந்தபோது ஏற்பட்ட அநுபவம் அவள் நினைவுக்கு வந்தது. அவள் முன் 'சீட்'டில் இருவர் உட்கார்ந்து கொண்டிருந்தார்கள். ஒருவருக்குஅறுபது வயதிருக்கலாம். இன்னொருவன் இளைஞன்.

''மை காட்... லுக் அட் தட்...'' என்று மேற்குத் திசையைக் காட்டினான் இளைஞன் பெரியவருக்கு.

சூரியனைப் பார்க்கும்போது தங்கத் தாம்பாளம் போலிருந்தது. திடீரென்று நெஞ்சை நிறைக்கும் இன்ப அதிர்ச்சி.


பெரியவர் அவ்விளைஞன் சுட்டிக் காட்டிய திசையை நோக்கினார். அவருக்கு ஒன்றும் புரியவில்லை.



''என்ன அங்கே?''

''சூரியனைப் பாருங்கோ...''

சிறிது நேரம் பார்த்தார். அவர் ஏதோ சொல்லிக் கொண்டிருந்தபோது, இடைமறித்து. இதைப் போய்ப் பெரிய அதிசயம் போல் 'பாருங்கள்' என்கிறானே என்ற எரிச்சல் அவர் முகத்தில் வெளிப்படையாகத் தெரிந்தது. ''ஹூம்... நன்றாயிருக்கு... அப்புறம் வந்து 'பென்ஷனைக் கம்யூட்' செஞ்சிடறது நல்லதுதானே? ரெண்டு பெண் கல்யாணத்துக்கு நிற்கிறது. இந்தப் பணம் வந்தா சௌகரியமாயிருக்கும்னு பார்க்கறேன்.... நீங்க என்ன சொல்றீங்க?''



இளைஞன் அழுதுவிடுவான் போலிருந்தது. அவனை அப்பொழுது அவளால் புரிந்து கொள்ள முடிந்தது. ஆனால் பெரியவரைக் குற்றம் சொல்ல முடியுமா? இரண்டு பெண்கள் கல்யாணத்துக்கு நிற்கின்றபோது, சூரிய அஸ்தமனக் காட்சியில் அவர் மனம் ஈடுபடவில்லை என்பது அவர் தவறா? — அந்த இளைஞன் அவருடைய வயதில் அவனுக்கும் இதே மாதிரிப் பிரச்னை இருந்தால், சூர்ய அஸ்தமனக் காட்சியில் மனம் லயித்திருப்பான் என்று கூற முடியுமா?—

அருண் கூறியது போல் ராதிகாவும் மாறித்தான் இருக்கிறாள். சந்தேகமில்லை. எதைப் பற்றியும் கவலைப்படாமல் ஒவ்வொரு நிமிஷத்திலும் புதுப் புது ஆச்சரியத்தைக் காண விரும்பும் ராதிகாவாக அவள் தோன்றவில்லை.

அவள் மனத்தை ஏதோ அரித்துக் கொண்டிருப்பது போலப் பட்டது. அருணை அவள் 'கவர்ட்' என்று சொன்னதும், வந்த கோபத்தை அடக்கிக் கொண்டு அவன் பேசாமல் எழுந்து போய் விட்டான். அதற்குப் பிறகு அவள் அவர்களுடன் வெகு நேரமிருந்தாள். அவளுடைய இப்பொழுதைய வேலையைப் பற்றிச் சொன்னாள். அவ்வேலையைப் பற்றிய சிறு சிறு தகவல்களையெல்லாம், அவர்களுக்கு அதைப் பற்றி அக்கறை இருக்கிறதோ இல்லையோ என்று கூடக் கவலைப்படாமல், அவள் சொல்லிக் கொண்டு சென்றது, தன்னைத் தானே அவள் வருத்திக் கொள்ளும் பயிற்சியாக அதைச் செய்கின்றாளோ என்று கூட விம்மிக்குப் பட்டது.

பிறகு திடீரென்று சிரித்துக் கொண்டே ''நான் உங்களைப் போரடிக்கிறேனா?'' என்று கேட்டாள்.

''நோ...நோ... சொல்லுங்கள்'' என்றான் தாமோதரன்.

''ஃபர்கெட் இட்.... விம்மி, நீ உன்னைப் பற்றிச் சொல்....''

தன்னை அவள் முன்பெல்லாம் ஒருமையில் விளித்ததில்லை என்பது விம்மியின் நினைவுக்கு வந்தது.

''என்ன சொல்ல இருக்கிறது?''

''ஆர் யூ ஹாப்பி?''

''ஆர் யூ?''

ராதிகா வாய் விட்டுச் சிரித்தாள். பிறகு பேச்சின் திசையை மாற்றி ''உன்னுடைய பெயிண்டிங்ஸைப் பாக்கணும் எப்போ உங்க வீட்டுக்கு வரலாம் சொல்லு'' என்றாள்.

''எப்போ வேணுமானாலும் வரலாம்.''

''நான் முழுக்க முழுக்க ஒரு 'காரியர் கேர்ல்' என்னோட ரஸனையெல்லாம் உனக்கு ஒரு முக்கியமான விஷயமில்லே.... இருந்தாலும்....''

விம்மி சிரித்தாள்.

''எதுக்குச் சிரிக்கிறே?''

''உனக்கு இந்த மாதிரியெல்லாம் காம்ப்ளெக்ஸ்இருக்கும்னு நான்எதிர்பார்க்கலே...''

ராதிகா உடனே மௌனமாகி விட்டாள். மனத்தில் ஏற்பட்ட உணர்ச்சியின் செறிவு முகத்தில் தெரிந்தது. சிகரெட் புகையை ஆழமாக உள்ளுக்குள் இழுத்து மெதுவாக வெளியே விட்டாள்.

சிறிது நேரத்துக்குப் பிறகு தாமோதரனைக் கேட்டாள். ''நான் ஒரு 'அப்நார்மல் பர்ஸனு' உங்களுக்குப் படறதா, மிஸ்டர் தாமோதரன்?''

'' 'ஒரு 'நார்மல்-பர்ஸனை'க் காட்டு, அவனைக் குணப்படுத்திக் காட்டறேன்'னு 'யூங்' சொன்னானும்... அதான் ஞாபகத்துக்கு வரது...'' என்றான் தாமோதரன்.

ராதிகா உரக்கச் சிரித்தாள்.

'லௌஞ்சி'லிருந்தவர்கள் அவளைத் திரும்பிப் பார்த்தார்கள்.....

விம்மி படுக்கையில் எழுந்து உட்கார்ந்தாள். மேஜையிலிருந்த கடியாரத்தைப் பார்த்தாள். மணி இரண்டு.

''தூக்கம் வரல்லியா?''

படுத்துக் கொண்டிருந்த தாமோதரன், அவள் உட்கார்ந்திருப்பதை உணர்ந்து ஆனால் கண்களைத் திறக்காமலேயே, இவ்வாறு கேட்டான்.

''எஸ்....''

''அருணைப் பற்றிய நினைவா?''

''நீங்களும் தூங்கலியா?''

''தூங்கினதோடு மட்டுமில்லே. சொப்பனம் வேறே....''

தாமோதரன் கண்களைத் திறந்து அவளைப் பார்த்தான்.

''எனக்கு வர வர நிஜத்துக்கும் சொப்பனத்துக்கும் வித்தியாசமே தெரியலே...''

''மத்தியானம் அருணைப் பார்த்தது நிஜமா சொப்பனமான்னு தெரியலியா?''

அவன் மிகவும் இயல்பான குரலில்தான் இவ்வாறு கேட்டான். ஆனால் லேசாகப் பொறாமை நிழலிடுவது போல் அவளுக்குப் பட்டது. இது அவளுக்குச் சிறிது எரிச்சலைத் தந்தது.

கடைக்காரர்: ''ரொம்ப நேரமா தேடறீங்களே... என்ன புஸ்தகம் வேணும்... கந்தர் சஷ்டி கவசமா.... திருப்புகழ் அமிர்தமா...?''

பண்டாரம்: ''ஊஹூம்! எனக்கு வேண்டியது இன்கம்டாக்ஸ் தொந்தரவிலிருந்து மீள்வது எப்படி... இருக்கா அது..?'' உ. ராஜாஜி



''ஆமாம்....''

தாமோதரன் எழுந்து உட்கார்ந்தான். ஒரு சிகரெட்டைப் பற்ற வைத்துக் கொண்டான்.

''அருண் மாறிப் போயிருக்கிறதா உனக்குத் தோணறதா?''

''அவரேதான் சொன்னாரே, மனுஷ சுபாவம் எப்பொழுதும் ஒரே மாதிரி இருக்கணும்னு அவசியமில்லே அப்படின்னு....அவர் 'ஃபீல்' பண்ணிச் சொன்ன மாதிரிதான் எனக்குப் பட்டது....''

''அருண்மாறியிருக்கிறாரா, இல்லாட்டா'' என்று சொல்ல ஆரம்பித்தவன் சிறிது நேரம் பேசாமலிருந்தான்.

''இல்லாட்டா....?''

''உன்னோட பார்வை மாறியிருக்கலாமல்லவா?''

''அதுவும் சாத்தியம்தான்...''

சிறிது நேரம் மௌனம்.

தாமோதரன் எழுந்து முன் ஹாலுக்குச் சென்றான்.

அவன் திடீரென்று ஏன் எழுந்து போனான் என்று விம்மிக்குப் புரியவில்லை. தான் அவ்வாறு பதில் சொன்னது அவனை மிகவும் பாதித்திருக்க வேண்டும் என்று அவளுக்குப் பட்டது. அவள் சொன்னது உண்மைதான் என்றாலும், அவள் பதில் கூறாமல் மௌனமாக இருந்திருக்கலாமென்று அவளுக்குத் தோன்றிற்று.

அவன் 'ஹாலி'ன் விளக்கைப்போடவில்லை. என்ன செய்கிறான்?

அவன் திரும்பி வரக் கூடும் என்று சிறிது நேரம் காத்திருந்தாள். அவன் வரவில்லை.

அவள் எழுந்து ஹாலுக்குச் சென்றாள். விளக்கைப் போட்டாள்.

தாமோதரன் ஹாலில் இல்லை.

அவள் விளக்கை அணைத்து விட்டு வெளியில் சென்றாள். 'டெர்ரேஸி'ல் அவன் நின்று கொண்டிருந்தான்.

''எதுக்காக இங்கு வந்து நின்றுகொண்டிருக்கிறீர்கள்?''

''சும்மாத்தான்... நடு ராத்திரியிலே, ஊரெல்லாம் தூங்கிண்டிருக்கிறபோது, இப்படி நின்னுண்டு ஆகாயத்தைப் பார்க்கிறபோதுதான் என் தனிமையை என்னாலே இன்னும் நன்கு புரிஞ்சுக்க முடியறது...''

''தனிமையிலிருந்து தப்பிச்சுக்கத்தான் நாம என்னென்னமோல்லாம் செய்யறோம். அப்படி இருக்கிறபோது, தனிமைதான் எனக்குப் பிடிச்சிருக்குன்னு என்ன அர்த்தம்?''

''நான் அப்படிச் சொல்லலே... எனக்குப் பிடிச்சிருக்கா இல்லையாங்கிற பிரச்னையேயில்லே. என் தனிமையை என்னாலே தவிர்க்க முடியாதுங்கிறதை நான் புரிஞ்சுக்கணும்.''

''நான் என் பார்வை மாறியிருப்பது சாத்தியந்தான்னு சொன்னதிலே கோபமா?''

''எதுக்காகக் கோபம்? அருணை விட்டு வந்தது தப்புன்னு உனக்குத் தோணித்துன்னா நீ மறுபடியும் தாராளமாத் திரும்பிப் போகலாம்...''

''நான் உங்களை ஒண்ணு கேட்கலாமா?''

''என்ன?''

"திரும்பிப் போக, நான் உங்க கிட்டே அனுமதி கேட்க வேண்டிய நிலையிலே இருக்கேன்னு நீங்க எதுக்காக நினைக்கிறீங்க?"

தாமோதரன் சிறிது நேரம் மௌனமாயிருந்தான். பிறகு சொன்னான்: "ஐ ஆம் ஸாரி."

"அருண் கிட்டே திரும்பிப் போகணுமா, வேண்டாமாங்கிற பிரச்னையே இப்போ இல்லே... அருண் சொன்னதைப் பத்தி யோசிச்சுப் பார்த்தேன். ஒவ்வொரு காலத்திலே 'இதுதான் அர்த்தம்'னு நமக்குப் படறது. இன்னொரு காலத்திலே 'இது தானா அர்த்தங்கிற மாதிரி நமக்கு ஆயிடறது. அதனாலே ஏற்படறது விரக்திதான்... விரக்தியை ஒப்புக்கொள்ள மறுக்கிறவங்க, 'இது தான் அர்த்தம்' 'இதுதான் அர்த்தம்'னு ஒரு வெறியோட, கண்ணை மூடிண்டு அவங்களுக்கு அதைப் பத்திய நம்பிக்கை போயிட்டாலும் ஒரு பழக்க தோஷத்தினாலே விடாப் பிடியாச் சொல்லிண்டிருக்கிறதையும் நான் பார்க்கிறேன்...."

"என்னைப் பத்திச் சொல்றயா?"

விம்மி பதில் கூறவில்லை.


"அருணோட நீ சண்டை போட்டுண்டு இங்கே வந்தது. 'பெயிண்டிங்ஸ்' ஒரு வெறியோட போட ஆரம்பிச்சது, நடந்த எக்ஸிபிஷன்லே கிடைச்ச பாராட்டு, நீ இப்போ யாருன்னு ஓர் அடையாளத்தோட இருக்கிறது எதுக்குமே அர்த்தமில்லையா? நீ என் கூட இருக்கிறதினாலே என் வாழ்க்கைக்கு ஒரு அர்த்தம் ஏற்பட்டிருக்குன்னு நினைச்சிண்டு வேற ஒண்ணும் வேணாம், நீ கூட இருக்கிறதே போறும்னு நான் சந்தோஷமா இருக்கிறதா பாவனை பண்ணிண்டு இருக்கேனே, இதுக்கும் அர்த்தம் இல்லியா?"

"பாவனைதானே?"

"பாவனைதான்... பின்னே என்னாலே நிஜமாவே சந்தோஷமா இருக்க முடியும்னு நினைக்கிறியா? என் உடம்பு எல்லோருடைய கண்ணுக்கும் தெரியறதே தவிர, என் உடம்புக்குள்ள இருக்கிற சிந்தனை, கற்பனையெல்லாம் யாருக்காவது தெரியுமா? ஆரம்பத்திலே நீ மத்தவங்க மாதிரி இல்லே, நீ பார்க்கிற கண்ணு வேறென்னு நினைச்சேன். ஆனா என் உருவத்தை ரொம்ப நெருங்கிப் பார்க்கிறபோது உன்னுடைய அருவருப்பை உன்னாலே தவிர்க்க முடியல்லே. இதையும் என்னாலே புரிஞ்சுக்க முடியறது...."

"நோ... நான் அன்னிக்கு உங்களை மறுத்ததுக்குக் காரணம் உங்க உருவமில்லே. அன்னிக்கே சொன்னேன், நம்ம உறவை இப்படிக் கொச்சைப்படுத்தவேணாம்னு. அன்னிக்கும் சரி, இன்னிக்கும் சரி, நீங்க எப்படி இருக்கிறீங்கங்கிறதைப் பத்தித் துளிக்கூட எனக்குப் பிரக்ஞை கிடையாது. எனக்கு உங்களைப் பத்தித் தெரியறது, உங்க அறிவு, படிப்பு, கலை ரசனை இவைதான்... நீங்களாவே ஏதேதோ நினைச்சுண்டு கஷ்டப்பட்டா அதுக்கு நான் பொறுப்பில்லே..."

தாமோதரன் சிறிது நேரம் அவளை உற்றுப் பார்த்துக் கொண்டே நின்றான். பிறகு ஒன்றும் பேசாமல் உள்ளே போனான்.



தலைவர்: என்னங்க இது! எதுக்கு ஆளுக்கு ஆள் ஆட்டுரலும் குழவிக்கல்லுமா வந்திருக்காங்க..?"

செயலாளர்: "பத்திரிகைகளில் நாம் கொடுத்த விளம்பரம் தப்பா அச்சாகித் தொலைச்சிருக்கு... தொண்டர்களே! மாவாட்ட மகா நாட்டுக்கு வரத்தவறாதீர்கள்னு!" -உ. ராஜாஜி

நான் கொஞ்சம் அதிகமாகப் பேசிவிட்டோமோ என்று நினைத்தாள் விம்மி.

சுவரருகே சென்று வீதியை நோக்கினாள். நிசப்தமாக இருந்தது. குடித்ததினாலோ என்னவோ ஒருவன் தள்ளாடிக் கொண்டு நடந்து சென்றான்.

மற்றவர்களிடமிருந்து வேறுபட்டவனாகத் தன்னை என்னதான் அவன் காட்டிக்கொள்ள முயன்றாலும், தாமோதரனும் பார்க்கப் போனால், ஆதார உணர்வுகளைப் பொறுத்த வரையில் சாதாரண மனிதன்தான்...புதிய சமுதாயத்தை உருவாக்கப் போவதாக அவன் சொல்லிக் கொள்வதெல்லாம் அவனுடைய தன் முனைப்புக்கு அவனே போட்டுக்கொள்ளும் தீனிதான், சந்தேகமில்லே.... 'நம்மிருவருக்குமிடையே உள்ள உறவை நான் கொச்சைப்படுத்த விரும்பவில்லே' என்று அவள் சொல்லுவதை அவன் ஏன் புரிந்து கொள்ள மறுக்கிறான்?

அவள் திரும்பிப் பார்த்தாள். ஹாலில் விளக்கு எரிந்து கொண்டிருந்தது. அவன் என்ன செய்கிறான்?

அவள் அறையை நோக்கிச் சென்றாள்.

தாமோதரன் கையில் தம்ளர் இருந்தது. சோடாவோ, தண்ணீரோ கலக்காமல், தம்ளரில் முக்கால் அளவு விஸ்கி.

"வாட் ஈஸ் திஸ் தாமோ?"

அவன் தண்ணீர் குடிப்பது போல் மடமடவென்று குடித்துத் தீர்த்தான். பக்கத்திலிருந்த பாட்டிலினின்று மறுபடியும் எடுத்து ஊற்றிக் கொண்டான்.

"வாழ்க்கையில் ஏமாற்ற மடைகின்றவர்கள் தங்களிடமிருந்து தாங்களே தப்பித்துக்கொள்ள இதை ஒரு மரபாக நினைத்துக் குடிக்கிறார்கள். இது ஒரு சராசரி போக்கு... அவர்களுக்கும் உங்களுக்கும் என்ன வித்தியாசம்?" என்று ஆங்கிலத்தில் கேட்டாள் விம்மி.

அவன் பதில் சொல்லவில்லை. தம்ளரை உறிஞ்சினான்.

"ஆதார உணர்வுகளைப் பொறுத்தவரையில் நீங்கள் ஒரு சாதாரண மனிதன்தான் என்று நிரூபிக்க விரும்புகிறீர்களா?"

"வில் யூ ஷட் அப் அன்ட் கோ டு ஸ்லீப்!" என்று உரக்கக் குரலெழுப்பிக் கத்தினான் தாமோதரன். (தொடரும்)



520 கிலோமீட்டர், 23 நாட்கள் ஒரு பாதயாத்திரை

['சரணம் ஐயப்பா' படத்தில் தயாரிப்பாளர்களுள் ஒருவரும் டைரக்டருமான நடிகர் தசரதன் சபரி மலைக்குச் சென்னையிலிருந்து 520 கிலோமீட்டர் தூரம் நடந்து சென்று திரும்பியுள்ளார்.]

"சரணம் ஐயப்பா'' படத்துக்குப் பூஜை போட்ட அன்று ஒரு பிரார்த்தனை செய்து கொண்டேன்.:

"ஐயப்பா! இந்தப் படத்தை வேகமாக எடுத்து ரிலீஸ் செய்ய எனக்கு அனுக்ரகம் செய்யப்பா, உன் சந்நிதானத்துக்குக் கால் நடையாகவே நடந்து வருகிறேன்!''

என் வேண்டுகோளுக்கு ஐயப்பன் செவி சாய்த்தார். மூன்றே மாதங்களில் படத்தை எடுத்து முடித்தேன். பிறர் அதிசயப்படும் வகையில் விநியோகஸ்தர்களுக்குத் திரையிட்டுக் காட்டாமலேயே வியாபாரத்தை முடித்து வெளியிட்டேன்.

சொன்னபடி டிசம்பர் 15ம் தேதி காலை இரு முடி ஏந்தி மலைக்கு நடந்தே புறப்பட்டேன். என்னுடன் சின்னமணி, சந்திரன், விஜயன், சாரி, வெற்றி வேல், ராஜா ஆகியோரும் புறப்பட்டனர்.

எல்டாம்ஸ் சாலை சுப்பிரமணிய ஸ்வாமி கோவிலிலிருந்து பதினான்கு கால்களும் உற்சாகமாக நடை போட்டுப் புறப்பட்டன.

அன்று இரவு செங்கல்பட்டு வரை நடந்து இரவு அங்கு தங்குவது என்பது எங்கள் திட்டம். ஐய்யப்பனின் திரு நாமத்தைஉச் சரித்தவாறே வேகமாக நடந்தோம். திட்டப் படியே அன்று உற்சாகமாக செங்கல்பட்டை அடைந்தோம். வழி நெடுகிலும் எங்களுக்குத் தெரிந்தவர்களும் தெரியாதவர்களும் மாலை அணிவித்து வரவேற்றார்கள்.

மறுநாள் அங்கிருந்து புறப்பட்டு திண்டிவனம், விழுப்புரம், திருச்சி, திண்டுக்கல், வத்தலகுண்டு, தேனி, கம்பம், வண்டிப் பெரியாறு, கோழிக்கானம் வழியாக 22 நாட்கள் நடப்பது என்றும், 23வது நாள் சபரிமலையை அடைவது என்றும் திட்டம் போட்டிருந்தோம்.

ஆனால் செங்கல்பட்டிலிருந்து புறப்படும் பொழுது எங்கள் குழுவில் வெற்றிவேலும், சாரியும் சோர்ந்து, "நாங்கள் பஸ்ஸில் வருகிறோம்'' என்றனர்.

மிஞ்சியிருந்தவர்கள் பஞ்ச பாண்டவர்களைப் போல நடந்தோம்.

செங்கல்பட்டைத் தாண்டி ஒரு மைல் நடந்திருப்போம். பின்னால் வெற்றிவேலும் சாரியும் ஓடி வந்து "என்ன ஆனாலும் சரி, உங்களுடன் நடந்தே வரப்போகிறோம்'' என்றனர் உற்சாகத்துடன். அதற்குள் அவர்கள் மனமாற்றத்துக்கும் புதிய உத்வேகத்துக்கும் காரணம் தெரியாமல் மீண்டும் அவர்களை எங்களுடன் சேர்த்துக் கொண்டோம். என்றாலும் நான்கு கிலோ மீட்டர் நடந்ததும் இருவரும் சோர்ந்து போவார்கள். அனைவரும் பெட்ஷீட்டை விரித்து அமருவோம்.

டீக்கடையை எங்கு கண்டாலும் அளவிலா உற்சாகம் பிறக்கும். உண்மையைச் சொல்லப் போனால் எங்கள்கால்களுக்கு டீதான் பெட்ரோலாகப் பயன்பட்டது.

திண்டிவனம் செக் போஸ்ட் தாண்டிச் செல்லும்பொழுது நன்கு இருட்டி விட்டது. இன்னமும் சில மணி நேரங்கள் நடக்கலாம் என்று நடந்து கொண்டிருந்தோம். ஜன நடமாட்டம் குறைந்துள்ள ஒரு பாதையில் மீசையும் தாடியுமாக ஒருவன் "ஓகோ! மலைக்குப் போற சாமிகளா நீங்க?'' என்று கேட்டவாறே வந்து போனான். அவன் கையில் ஒரு அரிவாள் இருந்ததை அப்போது தான் கவனித்தோம்.

ஐயப்ப பக்தர்கள் என்பதால் அவன் எங்களை ஒன்றும் செய்யாமல் விட்டு விட்டான் என நினைக்கும்பொழுது 'சாமியே சரணம்' என எங்கள் வாய் முணு முணுத்தது.

உளுந்தூர்ப்பேட்டையில் எங்களுடன் ஒரு பைத்தியக்காரனும்சேர்ந்துகொண்டு மலைக்கு வருவதாகச் சொல்லிக் கொண்டே நடக்க ஆரம்பித்து விட்டான். சாரி, பைத்தியக் காரனைப் பார்த்து "வேர்க் கடலை வேண்டும். எங்கிருந்தாலும் கொண்டு வா, காசு தருகிறேன்'' என்றான். அவன் வேர்க் கடலை வாங்கப் போனால் அங்கிருந்து நழுவி விடலாமே என ஒரு திட்டம். பைத்தியக்காரன் தலைதெறிக்க ஓடினான்.

'அப்பாடா' என்று பெருமூச்சு விட்டவாறே வேகமாக நடக்கலானோம். இரண்டு மூன்று பர்லாங்கு தூரம்கூட நடந்திருக்க மாட்டோம். பைத்தியக்காரன் மேல் மூச்சு கீழ் மூச்சு வாங்க ஓடிவந்து எங்களைப் பிடித்து விட்டான். அவன் கைநிறையச் செடியோடு வேர்க் கடலை கொத்துக் கொத்தாக இருந்தது. வேர்க்கடலையைப் பெற்றுக் கொண்டு அவன் கை நிறையக் காசுகொடுத்து அனுப்பி வைப்பதற்குள் போதும் போதும் என்றாகி விட்டது.

எங்கள் கால்களெல்லாம் கொப்பளித்துப் போயின. ஓடிகோலோன், அயோடெக்ஸ் எல்லாம் போட்டுக் கால்களை இரவு நேரங்களில் தேய்த்து விட்டுக் கொள்வோம்.

மடப்பட்டு ஊர் எல்லையில் ஒரு வயதான பாட்டி எங்களைப் பார்த்துவிட்டு, ஓடி வந்தாள். சற்று நின்றோம்.

''உங்களைப் பார்த்தா மலைக்கே நடந்து போற சாமிங்க மாதிரி தெரியுது. சாமீ! இந்த ஊரிலே ரொம்ப நாளா மழை இல்லே. செடி கொடி எல்லாம் வாடுது. ஆடு, மாடு எல்லாம் சாகுது. எங்களுக்காக ஐயப்பன் கிட்டே வேண்டிக்கோ சாமீ'' என்று அந்த வயதான பாட்டி சொன்னது எங்களை மெய் சிலிர்க்க வைத்தது.

திருச்சியில் மூன்று நாட்கள் தங்கி காவிரி ஸ்நானம் செய்து அங்கு நடைபெற்ற ஐயப்பன் பூஜைகளில் கலந்து கொண்டு தொடர்ந்து நடக்க எங்களை உற்சாகப்படுத்திக் கொண்டோம். சமயபுரம் அம்மனைத் தரிசனம் செய்தோம்.

மீண்டும் பயணம் துவங்கிற்று. வட மதுரைக்குள் நுழையும் முன்பு ஏராளமான மயில்களைப் பார்த்தோம். அதுவரை கூட்டம் கூட்டமாக மயில்களைப் பார்த்ததில்லை.

திண்டுக்கல்லில் மாரியம்மனைத் தரிசனம் செய்தோம். வத்தலக்குண்டில் ஐயப்பனைத் தரிசித்தோம். பயணம் தொடர்ந்தது.

பாதை பிரிந்து பம்பை நதிக்கு நடந்து சென்று குளித்து விட்டு, சபரிமலையை ஐந்தாம் தேதி மாலை ஆறு மணிக்கு அடைந்தோம். காலையில் கடவுளைத் தரிசனம் செய்துவிட்டுத் திரும்பும்பொழுது உடலில் 520 கிலோ மீட்டர் நடந்து வந்த சோர்வே தெரியவில்லை.

—நிரைஞானி

''செஸ்' விளையாட்டின் தாயகம் இந்தியா என்பதை ருஷ்யாவில் உள்ள அத்தனை செஸ் ஆட்டக்காரர்களும் நன்கு உணர்ந்திருக்கிறார்கள்! இந்தியாவின் செஸ் தலைநகரமான சென்னைக்கு வருவதில் பெருமித மடைகிறேன்'' என்று ரஷ்ய செஸ் கிராண்ட்மாஸ்டர் வி. கே. பாகிரோவ் சொன்னார். ரஷ்யாவில் லாட்வியா மாநிலத்தின் பிரதான 'கோச்' வி. கே. பாகிரோவ். சென்னை வந்திருந்த போது வருமான வரி காரியாலயத்தில் முப்பது செஸ் விளையாட்டுக்காரர்களோடு ஒரே சமயத்தில் ஆடி 23 ஆட்டங்களில் வென்று 7 ஆட்டங்களில் 'டிரா' செய்து தமது ஆட்டத் திறமையை வெளிப்படுத்தினார். டான் பாஸ்கோ பள்ளியைச் சேர்ந்த ஆறுவது வகுப்பு மாணவனும் சோவியத் கிராண்ட் மாஸ்டரோடு ஆடிக் களித்தான். ''முதல்லே பயமாயிருந்தாலும் ஆட ஆரம்பித்த பிறகு குளிர் விட்டுப் போச்சு'' என்றான் ஆனந்த்.

சோவியத் கலாசாரக் கழகக் கட்டடத்தில் பாகிரோவ் பேட்டி அளித்தபோது உதவி கான்சல் ஆஸ்ட்ரகோவ் மொழிபெயர்ப்பாளராக இருந்து உதவினார்.

''செஸ்ஸுக்கு இந்தியாதான் தாயகமாயினும் இந்நாடு செஸ்ஸில் அவ்வளவாக முன்னேறாததற்குக் காரணம் என்ன? இந்திய செஸ் ஆட்டத்துக்கும் ருஷ்ய ஆட்டத்துக்கும் இடையில் அணுகுமுறையில் ஏதும் வித்தியாசம் உண்டா?''

''உலகம் முழுவதுமே செஸ்ஸில் அணுகுமுறை ஒரே மாதிரிதான்! இந்திய செஸ் ஆட்டக்காரர்களின் தரம் உலக தரத்துக்கு இன்னும் வரவில்லை யெனில் போதிய பயிற்சியின்மைதான் காரணம். செஸ் போட்டிகளை இந்தியாவில் நடத்துவதுடன் முறையான பயிற்சிகளை இந்திய செஸ் ஆட்டக்காரர்கள் பெறவும் வேண்டும்.''

''சோவியத் நாட்டில் செஸ் ஆட்டத்தில் முன்னேற என்ன வசதிகள் உள்ளன?''

''அங்கே 46 கிராண்ட மாஸ்டர்கள் இருக்கிறார்கள். உலகில் உள்ள 130 கிராண்ட் மாஸ்டர்களில் இது மூன்றில் ஒரு பங்கு ஆகும். இவர்கள் எல்லோரும் இளைஞர்களை இந்தஆட்டத்தில் முன்னேற உதவுகிறார்கள்.''

''சிறு வயதிலேயே செஸ் கற்றுக்கொள்ள வேண்டும் என்று நீங்கள் கருதுகிறீர்களா?''

''சாம்பியன் ஸ்கோரின் பதினெட்டு வயதில்தான் செஸ் கற்றுக் கொண்டு ஆட ஆரம்பித்தார். ஆனாலும் இந்தக் காலத்தில் செஸ் ஆட்டத்தில் அழுத்தமான பிடிப்பும் ஆட்ட நுணுக்கங்களும் தேவைப்படுவதால் அதை விடவும் சீக்கிரம் குழந்தைப் பிராயத்திலேயே ஆரம்பிப்பது நல்லதுதான்!''

''ரஷ்யாவில் செஸ்ஸுக்குரியஇடம்யாது?''

''அங்கே செஸ்ஸைப் போல் மற்றொரு 'பாபுலர்' ஆட்டம் இல்லை. ஒவ்வொரு மாவட்டத்திலும், ஏன், ஒவ்வொரு விளையாட்டுக் கழகத்திலும் செஸ் பள்ளி இயங்கி வருகிறது.''


சோவியத் கலாசாரக் கழக மண்டபத்தில் கிராண்ட் மாஸ்டர் பாகிரோவ் செஸ் பிரியர்களுக்குப் பல ரஷ்யச் சாம்பியன்களின் ஆட்ட முறைகளை செஸ் போர்டில் ஆடி விவரித்துக் காட்டி வியப்பில் ஆழ்த்தினார்.

வி. கே. பாகிரோவ் தமது செஸ் தரம் உயரும்வரை ஒரு பெரிய தொழிற்சாலையில் மெக்கானிக்கல் இன்ஜினியராகப் பணி புரிந்தவர். மூன்று தடவை உலக சாம்பியன்இளைஞர் விருதுக் கோஷ்டியில் இடம் பெற்றவர். இன்று முழு நேரப் பயிற்சியாளராக வாரத்தில் ஐந்து நாள் இயங்குகிறார். மற்றப் பணிகளில் ஈடுபட்டுள்ளவர்களைப் போல் இவருக்கும் போதிய வருவாய் கிடைக்கிறது. எனவே செஸ்ஸையே முழு நேரத் தொழிலாகக் கொள்ள முடிகிறது. இளம் செஸ் ஆட்டக்காரர்களை உருவாக்கும் பணியில் நிறைவு காண்கிறார்.

—குண்டுமணி



செஸ்
மேதை



மனவாசம்

கண்ணதாசன்

13. சங்கமம்

பதினேழு ஆண்டுகள் பிரதமராக இருந்த ஜவாஹர்லால் நேரு இறந்தார் என்றவுடனேயே இந்தியாவில் அந்நிய சக்திகள் விளையாடத் தொடங்கின. அமெரிக்க ஆதரவாளர்களும், அவர்களுக்கு விரோதிகளும் தூக்கமின்றி அலைந்தார்கள். பம்பாய் நகரத்துப் பெரு முதலாளிகள் டெல்லிக்குப் பறந்தார்கள்.

இந்தியாவின் பல்வேறு அரசியல் கட்சிகள் காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர்களைச் சிறையெடுக்கத் தொடங்கின.

'இனி என்ன?' என்ற கேள்வி விஸ்வரூபம் எடுத்தது.

'கலப்படமான மந்திரி சபை அமையுமா? வேறு கட்சிகள் அரசு அமைக்குமா?' என்று ஆருடங்கள் கிளம்பின.

டெல்லி நகரத்துத் தெருக்களிலே கூட அரசியல் சதுரங்கம் நடைபெறத் தொடங்கிற்று.

அந்த ஆறேழு நாட்களிலும் அவன் கூர்ந்து கவனிக்கத் தொடங்கினான்.

தினசரி ஏதாவது விபரீதமான செய்தி வந்ததே தவிர, சாதகமான செய்திகளைக் காணோம்.

மொரார்ஜி கச்சை கட்டிக் கொண்டு நிற்பதாகவும், ஜெகஜீவன்ராம் ஒரு பக்கம் கொடி தூக்குவதாகவும், லால் பகதூரையே நேரு விரும்பியதாகவும் பல்வேறு செய்திகள்.

அவன் கேள்விப்பட்ட செய்திகளிலிருந்து பிரதமர் தேர்தல் முனிசிபாலிடி தேர்தலாக ஆகியிருப்பது தெரிந்தது.

கடைசியில் ஒரு நாள் எல்லாவற்றையும் மீறி ஒருமனதாக லால் பகதூரைத் தேர்வு என்று முடிவு வந்தது.

இந்தச் செய்தியை அவன்தான் விசேஷமாகக் கொண்டாடினான்.

காமராஜருக்கு உலகப் புகழ் வந்தது அவனுக்கு நன்றாகப் புரிந்தது. பத்திரிகையில் அவன் அதையே எழுதினான்.

காமராஜரின் பிறந்த நாள் வந்தது. அந்தப் பிறந்த நாளைப் பிரம்மாண்டமாகக் கொண்டாட வேண்டும் என்று, அன்றைய வட சென்னை காங்கிரஸ் தலைவர் திரு கே. ராமதாஸ் அவனிடம் வந்தார். அவரும் தென் சென்னை திரு டி. பார்த்தசாரதி செட்டியாரும்தான் ஆண்டுதோறும் அவரது பிறந்த நாள் விழாவை அற்புதமாகக் கொண்டாடியவர்கள்.

அந்த மூன்று பேரும் ஒன்றாகச் சேர்ந்து ராயல்டே ஹாலில் ஒரு அலுவலகத்தை அமைத்துக் கொண்டார்கள்.

பிறந்த நாள் விழாவுக்கான நோட்டீஸ்களும், ரசீதுகளும் தயாராயின.

உடனே இந்தச் செய்தியைக் கேள்விப்பட்ட தமிழ் நாடு காங்கிரஸ் தலைவர் திரு கிருஷ்ணசாமி நாயுடு, ''த. நா. கா. க. சார்பிலேயே இதை நடத்தலாமே'' என்று கேட்டார்.

''நல்ல வேலை, கைப்பணம் மிச்சம். வசூலுக்கு அலைய வேண்டாம்'' என்று அவர்களும் சம்மதித்து விட்டார்கள்.

பிறந்த நாளையொட்டி சென்னைக்கு வரும்படி ஒரு தேதியை நிர்ணயித்து காமராஜருக்கும் தெரிவித்து விட்டார்கள்.

அவன் பிரசாரத்தில் ஒரு நூதனமான வழியைக் கையாண்டான். 'கூட்டம்தானே வேண்டும், காட்டுகிறேன் வா' வென்று மேடைக்கு மேடை முழக்கம் செய்தான்.

சென்னையிலும், சுற்றுப்புறங்களிலும் சுமார் முப்பத்து ஆறு கூட்டங்களில் பேசினான்.

'காமராஜர் வருகிறார். மோட்டார் சைக்கிள்கள் அணிவகுப்பு, குதிரைகள் அணிவகுப்பு; விமானம் மலர் தூவுகிறது' என்று விளம்பரம் செய்தான்.

எம். ஏ. எம். ராமசாமி இருபது பயிற்சி பெற்ற குதிரைகளைக்கொடுத்து உதவியதோடு அவரும் ஒரு குதிரையில் சவாரி செய்து வந்தார்.

'ஊர்வலத்தில் ஒரு குதிரையில் வருவதாக' நடிகவேள் எம். ஆர். ராதா சொல்லி அனுப்பியிருந்தார்.

விமான நிலையத்திலிருந்து காமராஜர் ஊர்வலமாக அழைத்து வரப்பட்டார். வழி நெடுகிலும் மக்கள் வெள்ளம் திரண்டிருந்தது.

கூட்டத்தைப் பார்த்து அவன் குதூகலித்தான். விடுதலைப் போராட்ட காலத்தில் பெற்றிருந்த பெரும் வரவேற்பை காங்கிரஸ் பேரியக்கம் மீண்டும் பெற்றுவிட்டதாக அவனுக்குத் தோன்றிற்று.

'எந்தக் கூட்டத்தைக் கண்டு தி. மு. க. வாழ்ந்து வந்ததோ, அந்தக் கூட்டத்தைக் கொண்டே அதை முறியடித்து விட முடியும்' என்று நம்பினான்.

காமராஜரின் காலைத் தொட்டு வணங்கும்படி ஜனங்களை மாற்றினான்.

கவியரங்கம், கருத்தரங்கம் என்று விழாவை உருவாக்கினான்.

நாமக்கல் கவிஞர் தலைமையில் கவியரங்கம் நடைபெற்றது.

காங்கிரஸிலிருந்து ஒதுங்கி நின்றவர்கள் எல்லாம் மீண்டும் வரத் தொடங்கினார்கள்.

காங்கிரசை இப்படியே வளர்த்துவிட்டு, தி. மு. க.வை அழித்து விட வேண்டும் என்று அவன் கங்கணம் கட்டிக் கொண்டான்.

அந்த நேரத்தில் அவன் மீது தி.மு.க. கவுன்சிலர்கள் தொடுத்த ஒன்பது வழக்குகள் நடந்து கொண்டிருந்தன.

அவர்கள் லஞ்ச லாவண்யங்களில் ஈடுபடுவதாக மாநகராட்சித் தேர்தலின்போது அவன் எழுதியதால் போடப்பட்ட வழக்குகள் அவை.

அப்போது சென்னை நகரத்தில் மட்டும் 'தென்றல் திரை' பத்திரிகை இருபதினாயிரம் பிரதிகள் விற்பனையாயிற்று.

வாரத்தில் ஐந்து நாட்கள் கோர்ட்டுக்கு அலைந்தும் கூடக் கவலைப்படாமல் விழாவை நடத்தினான்.

ஏ. வி. எம். சின்னப்ப தேவர், ஏ. எல். எஸ்., நாகி ரெட்டி ஆகியோரைக் கொண்டு பெரும் பெரும் வளைவுகளைச் சாலைகளில் போட வைத்திருந்தான். அந்த வளைவுகளைப் பார்த்துக் கொண்டே விழுப்புரம் சென்ற அண்ணா அவர்கள் ஆத்திரம் தாங்காமல் அங்கே பேசினார்: 'நான் நினைத்தால் எனது தோழர்களையே வளைவாக நிறுத்தி வைப்பேன்' என்றார். அவருக்குத்தான் அத்தனை அழகாகப் பேசத் தோன்றும்! அவர் அவ்வாறு கூறியதைத் தனது வெற்றியாகவே அவன் கொண்டாடினான்.

காமராஜர் பிறந்த நாள் விழாவில் இரண்டாவது நாள் கருத்தரங்குக்கு ஜெயப் பிரகாஷ் நாராயணன், சந்திரசேகர், மற்றும் எஸ். கே. பாட்டீல் ஆகியோர் வந்திருந்தார்கள்.

எஸ். கே. பாட்டீலும், சி. சுப்பிரமணியமும் பிராட்வேயில் நடந்த கூட்டத்தில் பேசினார்கள்.

ஊர்வலம்தான் பிரம்மாண்டமாக அமைந்தது. அனைத்தையும் அவன் படமாக்கினான்.

விஸ்வநாதன் — ராமமூர்த்தி இசையில் பி. சுசீலா, டி. எம். சௌந்திரராஜன் ஆகியோர் பாடினார்கள்.

மனைவி: "ஒரு ஐநூறு ரூபா கொடுங்க... உங்களுக்கு ஒரு சர்ட்துணி எடுத்துட்டு வாரேன்!"
கணவன்: "ஒரு சர்ட் துணி எடுக்க ஐநூறு ரூபாய் எதுக்கு?"
மனைவி: "ஐநூறு ரூபாய்க்குச் சேலை எடுத்தால் ஒரு சர்ட் துணி இலவசமா தர்றாங்க - குண்டப்பா ஜவுளி ஸ்டோரில்!"
-உ. ராஜாஜி.



விழா முடிந்தபோது, 'தான் வெற்றி பெற்று விட்டதாக' ஓர் அகந்தையும், ஆணவமுமே அவனுக்குத் தோன்றின.

தனது செல்வாக்கு அனைத்தையும் அவன் பயன்படுத்தி யிருந்தான்.

தமிழ் நாடு காங்கிரஸ் நன்றாகச் செலவழித்தது. அது முதல் தேனாம்பேட்டை காங்கிரஸ் மைதானமும் சத்தியமூர்த்தி பவனமும் களைகட்ட ஆரம்பித்தன. கேலி பேசியோரெல்லாம் வாயடைத்துப்போயினர்.

அந்த நேரத்தில்தான் தலைவர் காமராஜர் 'சோஷலிஸ சக்திகளெல்லாம் மீண்டும் காங்கிரஸிற்குள் வரவேண்டும்' என்று வேண்டுகோள் விடுத்தார்.

பல்வேறு இடங்களில், பல்வேறு நபர்கள் காங்கிரஸில் சேரத் தொடங்கினார்கள்.

தமிழ் தேசியக் கட்சியிலும் இந்தச் சிந்தனை உண்டாயிற்று.

கோவைச் செழியன் போன்ற இரண்டொருவரைத் தவிர மற்ற எல்லோரும் அதனை ஆதரித்தார்கள்.

தமிழ்த் தேசியக் கட்சியின் நிர்வாகக் கூட்டம் நடைபெற்றது. 'காங்கிரஸில் இணைவது' என்று அது முடிவெடுத்தது.

ஏற்கனவே 1962 தேர்தல் முடிவுகளுக்குப் பிறகு சோஷலிஸ்ட் கட்சிகளின் தலைவராக இருந்த தொழிற் கட்சித் தலைவர் அந்தோணிப் பிள்ளை தம்முடைய கட்சியை த. தே. க. வில் இணைத்திருந்தார். இப்போது அதையும் சேர்த்து காங்கிரசில் இணைப்பதன் மூலம் கட்சிகளின் எண்ணிக்கை குறையும் என்று சம்பத் பேசினார்.

அன்று காங்கிரசில் இணைவதை அவன் தீவிரமாக ஆதரித்தான். இன்று யோசித்துப் பார்த்தால், அந்த முடிவு முற்றிலும் சரியானதாக அவனுக்குப் படவில்லை.

ஏறக் குறைய இரண்டு லட்சம் தொண்டர்களையும் நாற்பது பேச்சாளர்களையும் அந்தோணிப் பிள்ளை போன்ற அற்புதமான தலைவர்களையும் கொண்டிருந்த த. தே. க. இன்று தனியாக இருந்திருந்தால், இன்றைய அரசியல் சதுரங்கத்தில் அதன் பங்கு பெரியதாக இருந்திருக்கும். த. தே. க. விலிருந்த எல்லாப் பிரமுகர் களுக்குமே தனி அந்தஸ்து இருந்திருக்கும். ஆயினும் அன்றைய சூழ்நிலையில் ஒரு பெரியக்கத்தில் கலந்து விடுவதே நியாயம் என்று கருதினான்.

அப்போதே கமிட்டியில் இருந்த சிலர் காங்கிரஸில் இருந்த உட்குழப்பங்களைப் பற்றிக் குறிப்பிட்டார்கள்.

காங்கிரஸ் உருப்படாமல் போனதே உட்குழப்பத்தினால்தானே! 'வாழ்கின்றார் முப்பத்து முக்கோடி மனிதரென்றால், சூழ்கின்ற பேதமும் அந்தத் தொகை இருக்கும்' என்று பாடினார் பாரதிதாசன்.

காங்கிரசின் ஒவ்வொரு உறுப்பினருக்கும் ஒவ்வொரு சுபாவம் உண்டு. அந்தக் கடலில் நீந்துவது கடினம் என்றாலும், அந்த நேரத்தில் அந்த முடிவைத்தான் எடுக்க வேண்டியிருந்தது.

காங்கிரஸில் இணைவதாக த. தே. க. முடிவெடுத்து தேதியையும், நிர்ணயித்து விட்டது.

(வளரும்)






சென்னையில் ஆறுவது நாய்கள் கண்காட்சி நடைபெற்றது. இதில் சுமார் 350 நாய்கள் கலந்து கொண்டன. அவற்றில் சில :

சீசர் — உரிமையாளர்: பி. அருள்ராஜ்

● இது டால்மீஷியன் வகையைச் சார்ந்த நாய். மிகவும் அன்புடன் இருக்கும். ஆனால் அதே சமயம் ஓடினால் துரத்தவும் செய்யும். மனிதனின் துணையை அதிகம் விரும்பும் நாய் இது. ஓடுவது என்றால் அதற்கு மிகவும் விருப்பம். ஒரு நாளைக்கு மூன்று அல்லது நான்கு மைல் தூரம் ஓடினால்தான் சுறு சுறுப்பாக இருக்கும். உண்ணி இல்லாதிருந்தால்தான் நாய் நன்றாக வளரும். எனவே ஒரு நாள் உண்ணி எதிர்ப்பு மருந்து தடவினேன். மாலை வந்து பார்த்தால் நாய் சோர்ந்து படுத்திருந்தது. எனக்குத் தூக்கி வாரிப் போட்டது. அதன் உடம்பில் தடவியிருந்த உண்ணி மருந்தைநாக்கால் நக்கியே— அது விஷமானதால் — மயங்கி கீழே விழுந்து விட்டது என்பது தெரிந்தது. சீசரைத் தூக்கிக் கொண்டு டாக்டரிடம் ஓடினேன். நல்லவேளை குணமாகி விட்டது.

போபோ வீ ரீகல் (Bobo wee Regal)
உரிமையாளர்: ரமேஷ்

● இந்த வகை நாய்களுக்கு நாம் பல்வேறு வகையான அலங்காரங்களைச் செய்ய முடியும். இதன் முடிகளை வெட்டுவதற்கென்றே அனுபவம் வாய்ந்த கலைஞர்கள் உள்ளனர். இந்த நாய் இன்று செய்து கொண்டுள்ள முடி அலங்காரத்துக்குப் பெயர் Continental Clip. ஒரு வருடம் நான்கு மாதமே வயதாகியுள்ள இது காலை ஐந்து மணிக்கு என்னை நாக்கால் நக்கியே எழுப்பிவிடும்.

தாரா — உரிமையாளர்: சிவாஜி

● சிவாஜி கணேசன் வீட்டு நாய். சிவாஜியின் செல்ல நாய். அவரிடம் நான்கு நாய்கள் உள்ளன. இதுதான் இருப்பதிலேயே பெரியது. அதனாலேயே சிவாஜியின் அன்பைச் சீக்கிரம் பெற்றுவிட்டது. கிரேட் டேன் வகையைச் சேர்ந்த இந்த நாய்க்குக் காரில் போக விருப்பம். சிவாஜியின் அண்ணன் மகன் முரளிதரன் இதைக் கவனித்துக் கொள்கிறார். முதன் முறையாக நாய்க் கண்காட்சிக்கு இது வந்திருந்தாலும் பரிசினைத் தட்டிச் சென்று விட்டது.

பாஸ் — உரிமையாளர்: ஷரீப் தயான்

● இங்கிலாந்தில் பிறந்த நாய் இது. வேட்டை நாய். வேகமாக ஓடும் மான், ஆடு இவைகளைப் பிடிப்பதற்கே இதை ஆப்கனிஸ்தானில் பலர் பயன்படுத்துவார்களாம். அதனால் இதற்கு ஆப்கன் ஹவுண்டு என்று பெயர். ரொம்பத் தைரியமுள்ளது.

ஸ்னிப்பெட் உரிமையாளர்: திருமதி ஜெயந்தி

● இதனைத் தூங்குமூஞ்சி நாய் என்று கூறலாம். இதை நாய் என்பதைவிட வீட்டின் மற்றொரு குழந்தை என்று கூறலாம். அத்தனை செல்லம். டேஷ் கவுண்ட் வகையைச் சேர்ந்தது. பரிசு பெற்றது.

ஜூலி ஹம்சா:
உரிமையாளர்: கிருஷ்ணகுமார்

● ஒரு நாள் யஜமானி மயக்கமாக பாத்ரூமில் விழுந்து விட்டார். வீட்டில் நாயைத் தவிர யாருமே இல்லை. நாய் ஏதோ தப்பு நடந்து விட்டது என்று ஊகித்து வெளியே சென்று பக்கத்து வீட்டில் உள்ள கம்பவுண்டரை அழைத்து வந்து எஜமானியைக் காப்பாற்றியது. அன்றிலிருந்து திருமதி கிருஷ்ணகுமாருக்கு நாய்கள் என்றால் மிகவும் பிரியம் ஏற்பட்டது. மூன்று மாதம் ஜெர்மனி சென்று நாய்களுக்குப் பயிற்சி தரும் கலையில் தேர்ந்து திரும்பினர். இன்று கிருஷ்ணகுமார் தம் பதியிடம் பல நாய்கள் உள்ளன. சில சொந்தமானவை; பல பயிற்சிக்காக வந்தவை.


பேட்டி : ''அசோக்''
படங்கள் : (சுபா) எம். என். ராஜன்

நவநவமான நாய்கள்




Kalki Shopping Page

என்னைப் போல படம் வரையணுமா?
மாயா சித்ராலயாவில் சேர்ந்து
வீட்டிலிருந்த படியே ஓவியம்
பயிலலாம்.....!




விவரங்களுக்கு: மாயா சித்ராலயா
67/4, இரண்டாம் பிரிவு, அசோக்நகர்,
சென்னை-600083 என்ற முகவரிக்கு
5 பத்து பைசா தபால் தலை இணைத்து
எழுதுங்கள்.

Good News to Madras People

New Electronic Show Room in Kodambakkam Dealers in

Bharat TV

Available All Varieties of TV, Radio & quality Electrical Home Appliances




20" Urvashi Solid State
(Shutter Type)

Visit once our Show Room

SREENIVASA ELECTRONICS

71, Arcot Road, Kodambakam,
Madras-600 024, Phone: 425284 PP

Adsigns. SE



EBE

Dealers for

Ganesh Fan, Allwyn TV, Fridges, Standard TV, Telerama TV, etc., Empire Radio, Transistor and Two-in-one, Cookers, Master Clocks, Ruby Wet Grinder, Moulimex, Steel Furnitures etc.

EVER BRIGHT ENTERPRISES

19, Perambur
Barracks Road,
Madras-600012
Phone: 663416

SPECIALISTS IN

Quartz, Electronic, Omega, Rolex, Rado, Seiko, Citizen, HMT, Etc



SERVICE ONLY

Sri Jagadeswari Electronic Service Centre

17, Ramanathan Street,
T. Nagar, Madras-600017
(Near Mambalam Railway Station)

ஆனந்தனுக்குக் குழப்பமாயிருக்கிறது...

கே. பாலஸ்வாமிநாதன்

இரவு இரண்டு மணிக்குத் திருட்டுத்தனமாக போஸ்டர் ஒட்டிக் கொண்டிருந்தான் ஆனந்தன், பி.ஏ.

''சுரண்டும் வர்க்கத்தை அடியோடு ஒழிப்போம்!''

''தனி உடைமை ஒழிக! பொதுவுடைமை வாழ்க!''

''பாட்டாளி வயிற்றில் அடிக்கும் சுந்தரேசன் ஒழிக!''

''ஓங்குக தொழிலாளர் சங்கம் புகழ்!''

ஒட்டிய போஸ்டர்களைச் சற்றுத் தள்ளி நின்று பார்த்துவிட்டுச் சற்று உரக்கச் சிரித்தான். நடைபாதையில் இன்னொரு போஸ்டருக்குப் பசை தடவிக் கொண்டிருந்த பஞ்சமுத்து ஆனந்தனை வியப்புடன் பார்த்தான்.

''என்னண்ணே, சிரிக்கிறீங்க?''

ஆனந்தன் மீசையை முறுக்கி விட்டுக் கொண்டே பஞ்சமுத்துவைக் கூர்மையாகப் பார்த்து. ''அண்ணே என்று சொல்லாதே! தோழா என்று கூப்பிடு!'' என்றான்.

பஞ்சமுத்து பலமுறை வியந்திருக்கிறான். ஆனந்தன் இளைஞன். பட்டதாரி. கோபக்காரன். நேர்மையானவன். நல்லவன். பொதுவுடைமைப் பிரசங்கி. உழைப்பாளி. அதனால் வேலை கிடைக்காதவன். சில சமயம் உணர்ச்சிவசப்பட்டு இலக்கணத் தமிழில் ஆனந்தன் பேசுவதைக் கேட்டு வெளிப்படையாகவே சிரித்திருக்கிறான் பஞ்சமுத்து. பஞ்சமுத்து ஓர் எடுபிடி. அவனுக்கு அரசியல் தத்துவங்கள் புரிவதில்லை. ஆனந்தனிடம் ஓர் அன்பு உண்டு.

ஆனந்தன் தான் ஒட்டிய போஸ்டரின் அறைகூவல்களை யெல்லாம் எண்ணி எண்ணி மகிழ்ந்தான்.

''தோழரே! ஒரு வேடிக்கை தெரியுமா? நான் யாருக்கு எதிராகப் போஸ்டர் ஒட்டுகிறேனோ அவருடைய சுந்தரேசன் இண்டஸ்டிரீஸிலிருந்தே எனக்கு ஓர் இண்டர்வியூ வந்திருக்கிறது'' — சொல்லிவிட்டு உரக்கச் சிரித்தான் ஆனந்தன்.


பஞ்சமுத்து உண்மையிலேயே சந்தோஷப்பட்டான். ''ரொம்ப நல்லதுங்க. உங்களுக்கு நிச்சயம் நல்ல வேலை கெடச்சுடும்!''

ஆனந்தன் உரிமையுடன் கோபித்துக் கொண்டான். ''என்ன தோழரே! நீங்களே இப்படிப் பேசறீங்க! ஒரு தனி நபர் ஸ்தாபனத்திலே நான் எப்படி உழைக்க முடியும்? எனக்குத் தெரியாம என் வீட்டில யாரோ எனக்காக விண்ணப்பிச்சிருக்காங்க. இண்டர்வியூவும் வந்துடுச்சு. அவ்வளவுதான். ஆனா ஒண்ணு. நான் நிச்சயம் இண்டர்வியூவுக்குப் போகப் போறேன். சம்பந்தமில்லாமக் கேள்வி கேக்கப் போறாங்க. என்கிட்டே விருந்து வாங்கிக் கட்டிக்கப்போறாங்க. அசட்டுத்தனமான கேள்விகளுக்கெல்லாம் சாட்டையடி கொடுக்கப் போறேன். எனக்கு வேலை கிடைக்காது. ஆனா சந்தோஷம் கிடைக்கும்.'' — ஆனந்தனின் முகத்தில் பெருமிதம் தாண்டவமாடியது.

''அது சரிங்க. ஆனா நீங்க எத்தினி நாளைக்கு இப்படி அரை வவுத்துக்குச் சாப்புட்டுட்டு இருக்கப் போறீங்க?''

''தோழரே, நான்கனவு கண்டிருந்த வேளை வரப்போகிறது. நமது தொழிலாளர் தலைவரை நேற்றுப் பார்த்தேன். நமது சங்கத்தின் காரியாலயத்துக்கு ஓர் ஊழியர் தேவைப்படுகிறது. என்னை விண்ணப்பிக்கச் சொல்லியிருக்கிறார். தகுதியின் அடிப்படையில்தான் தேர்வு. நான் வேலைக்குத் தேர்ந்தெடுக்கப்படுவேன் என்கிற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. அதன் பின் தொழிலாளர்களுக்காக நான் என் வாழ்க்கையையே அர்ப்பணிப்பேன்.''

பஞ்சமுத்துக்கு ஒன்றும் புரியவில்லை.



இண்டர்வியூ நடக்கும் அறைக்குள் நுழைந்தான் ஆனந்தன். குளிரும் அறை. பொதுவாக இண்டர்வியூ செய்பவர்கள் எப்படி இருப்பார்களோ அதே போலத்தான் இந்த மூவரும் இருந்தார்கள். — ஒருவர் வழுக்கைத் தலை, ஒருவர் இரட்டைச் சரீரம், ஒருவர் கோட்டு. டை இத்தியாதி.

''கம் இன்.... நீங்கதான்....''

''நான் உட்காரலாமா?''

அசடு வழிந்து அனுமதி கொடுத்தனர்.

''நீங்கள் பி. ஏ. வரை படித்திருக்கிறீர்களா?''

''அதைத்தான் தெளிவாகக் கொடுத்திருக்கிறேனே!''

''நீங்கள் முதலியார் ஜாதியைச் சேர்ந்தவரா?''

''மனித ஜாதியைச் சேர்ந்தவன்.''

வழுக்கைத் தலையரின் முகம் சிவந்தது. ஆனால் மற்ற இருவரும் ரசித்தனர். இரண்டாமவர் கேட்க ஆரம்பித்தார்.

''ஒரு மாளிகையைக் கட்டி முடிக்கப் பத்து ஆட்களும் பதினைந்து நாட்களும் தேவை. பதினேழு ஆட்களும் 136 நாட்களும் இருந்தால் எவ்வளவு மாளிகைகள் கட்டலாம்?''

''ஸார், உங்க ஆபீஸ்ல கால்குலேட்டர் இல்லையா தா?''

''உங்களுக்குப் பதில் தெரியுமா தெரியாதா?

''தெரியும். ஆனால் சொல்ல விரும்பவில்லை. நான் இங்கு செய்யவிருக்கும் வேலைக்கும் இந்தக் கேள்விகளுக்கும் சம்பந்தமில்லை. உங்களுக்குப் பொழுது போகாமலிருக்கலாம். ஆனால், எனக்கு நேரம் போதவில்லை. நான் படித்தவற்றில் கேள்வி கேளுங்கள். பதில் சொல்கிறேன். என்னைப் போல் ஆயிரக் கணக்கானவர்கள் வேலைக்காகக் காத்துக் கொண்டிருக்கின்றனர். இந்த மாதிரி கேள்விகளைக் கேட்டு வயிற்றெரிச்சலைக் கொட்டிக் கொள்ளாதீர்கள். எனக்குத் தெரிந்ததெல்லாம் ஒன்றுதான். உழைப்பு. உங்களைப் போல் வெட்டிப் பேச்சுப் பேச என்னால் முடியாது. நான் வரட்டுமா? வணக்கம்.''

முகம் சிவக்க, மூவரும் பிரமிக்க வெளியேறினான் ஆனந்தன்.

ஆனந்தன் உற்சாகமாகப்புறப்பட்டான். தலைவரைச் சந்திக்கப் போகிறான். பாட்டாளி வர்க்கத்தின் பிரதிநிதி கூப்பிட்டனுப்பியிருக்கிறார்.

சங்கத்தின் அலுவலகத்தை நோக்கி நடந்தான். தலைவர் இனிமையுடன் வரவேற்று ஆனந்தனை அணைத்துக் கொண்டார். ''தோழரே, உங்கள் சேவை பாராட்டுக்குரியது. உழைப்பவர் உலகம் உங்களுக்குக் கடமைப்பட்டிருக்கிறது. ஏற்றத் தாழ்வற்ற சமுதாயத்தை நாம் அமைத்தே தீருவோம். நீங்கள் செய்ய வேண்டிய பணி இன்னொன்று இருக்கிறது. இன்று இரவு நாம் துண்டுப் பிரசுரங்களை வெளியிட வேண்டும். அவ்வளவும் அபாயகரமானவை. இதை நீங்கள் ஒருவர்தான் செய்ய முடியும். உங்கள் உயிரைப் பணயம் வைத்து இதில் ஈடுபட

''எங்க பள்ளிக்கூடத்திலே ஒரு வாத்தியாருக்கு கோழின்னு பேர்வைச்சிருக்கேன். இன்னொரு வாத்தியாருக்கு வாத்துன்னு பேர் வைச்சிருக்கேன்!''

''ஏண்டா அப்படி?''

''அவங்க என் பரீட்சை பேப்பர்லே போடற முட்டை கைஸ் அப்படி!''

- மூந்து. தங்க. ஐயப்பன்



◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆

வேண்டும்.''

தலைவரின் வீராவேச உரையில் திக்குமுக்காடிப் போனான் ஆனந்தன். தன்னிடம் எப்பேர்ப்பட்ட பொறுப்பைத் தலைவர் ஒப்படைத்திருக்கிறார்! தலைவர் ஆனந்தனை மீண்டும் தழுவிக் கொண்டார். அவர் விடைபெற்றபோது ஆனந்தன் மெல்லக் கேட்டான்: 'தலைவரே சங்கக் காரியாலய ஊழியர் வேலை பற்றி...' தலைவர் புன்முறுவல் செய்தார். மீண்டும் அவன் தோளில் தட்டிக் கொடுத்து 'என் செயலாளரைப் பார்க்கவில்லையா நீங்கள்?' என்று கூறிச் சிரித்துவிட்டு வெளியே சென்று காரில் ஏறிப் புறப்பட்டார்.

ஆனந்தன் ஓடிப் போய்ச் செயலாளரைப் பார்த்தான். செயலாளர் சொன்னார்: 'அடேடே ஸாரி தம்பி, தலைவர் சொல்லலியா? அந்த வேலைக்கு இன்னொருத்தரைப் போட்டாச்சே!''

அதிர்ந்து போனான். ''இண்டர்வியூ இருக்கும்னு தலைவர்.....''

அட்டகாசமாய்ச் சிரித்தார் செயலாளர். ''என்ன தம்பி புரியாமப் பேசறீங்க? அந்த வேலைக்கு வந்திருக்கிறது, நம்ப தலைவரோட அண்ணன் மகன். அதுக்கப்புறம் இண்டர்வியூவெல்லாம் எதுக்கு? அப்படியே இண்டர்வியூ வெச்சாலும் தலைவரோட அண்ணன் மகன்தான் தேர்ந்தெடுக்கப்படுவார்னு தெரியாதா உங்களுக்கு?''

ஆனந்தன் மனத்தில் ஒரு சூன்யம் குடி கொண்டது. நடைப்பிணமாக வீட்டுக்கு வந்தான். அவனுக்கு ஒரு கடிதம் வந்திருந்தது.—

அன்புள்ள ஆனந்தனுக்கு. தங்களது கல்வி அறிவுத் தகுதி, வெளிப்படையான பேச்சு ஆகியவற்றின் அடிப்படையில் ஸ்ரீனார்க் வேலைக்குத் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிறீர்கள். உடனே உங்கள் விருப்பத்தைத் தெரியப்படுத்தவும். நன்றி. —சுந்தரேஸா இண்டஸ்ட்ரீஸ்.

ஆனந்தனுக்குக் குழப்பமாயிருக்கிறது!

களத்தில் தேச பக்தர்கள் நடத்திய வீர சாகசங்களையெல்லாம் பாடினான். அதில் அவனுக்கே சலிப்பு வந்து விட்டது. அதனால், பத்து ஆண்டுகளுக்குப் பின் பாரதி பரணை விட்டிறங்கிக் களத்திலே குதித்து விட்டான்! ஆம்; பாண்டிச்சேரியை விட்டு வெளியேறித் தமிழகத்துக்குள் பிரவேசித்தான். தமிழகத்தின் எல்லையில் கால் வைத்ததும் அந்த மாவீரன் — களம் பாடிய கவிஞன் — போர்க் களப் புலவன் – மாற்றான ஆங்கிலேயரால் சிறை பிடிக்கப்பட்டான். பல நாட்கள் கடலூர்த் துணைச் சிறையில் காவலில் வைக்கப்பட்டான்.

அவன் களம் பாடிய கவிஞன் மட்டுமல்லன்; களத்தில் நின்று போராடிய வீரனும் ஆவான்.

பாரதி மும்முனையில் போராடினார்; ஒரு முனை, பிரிட்டிஷ் ஆட்சி; மற்றொரு முனை காங்கிரசிலிருந்த மிதவாதிகள் கூட்டம்; இன்னொரு முனை அறியாமையில் ஆழ்ந்து கிடந்த பாரத மக்கள். இதே வகையில் பாரதியின் தேசியப் பாடல்களையும் மூன்று பிரிவுகளாக்கலாம்.

இப்போது மிதவாதிகளைத் தாக்கிப் பாடியவற்றைக் கவனிப்போம்.

அந்நாளில் காங்கிரஸிலே கலந்திருந்தமிதவாதிகளுக்குப் பேரறிஞரான கோபாலகிருஷ்ண கோகலே தலைவராக இருந்தார். அவர் ஒழுக்க சீலர்; உயர் கல்வி கற்றவர்; தன்னலம் பேணாத பொது நலத் தொண்டர். எளிய வாழ்க்கை நடத்தியவர்; காந்தியடிகளால் தம் குருவாக ஏற்கப்பட்டவர்.

மிதவாதிகளின் தலைவராக இருந்தும் பரங்கியரிடம் பதவியோ, பட்டமோ பெறும் ஆசையில்லாதவர். பதவியும் பட்டமும் தம்மை நாடி வந்த போது கூட, அவற்றை ஏற்க மறுத்தவர்.

இவ்வளவு நற்குணங்களும் பொருந்திய இன்னொருவரை அந்நாளைய மிதவாதிகள் கூட்டத்திலே பார்க்க முடியாது. இவ்வளவிருந்தும் பூரண சுதந்திரத்தை விரும்பாதவர். அற்ப சொற்ப சீர்திருத்தங்களோடு ஆறுதல் அடைபவர். ஆங்கிலேயரோடு தோழமை கொண்டவர் என்ற காரணங்களுக்காகக் கோகலேயைச் சாடிப் பாடினார் பாரதியார்.

வள்ளலார் அருட்பாவும் பாரதியின் அரசியலும் – ம.பொ.சி



கோகலே சாமியார்!

'கோகலே சாமியார் பாடல்' என்னும் தலைப்பில் எட்டயபுரம் கவிஞர் ஒரு விருத்தப் பாவைத் தந்திருக்கிறார். பாட்டு அவருடையதல்ல; வள்ளற்பெருமானுடையது. அதை இங்குமங்குமாகத் திருத்தம் செய்து தம்முடைய பாடல் போலப் பாரதியார் தந்திருக்கிறார்.

''பாரதியார் கூட இன்னொருவர் கவிதையைக் களவாடினாரா?'' என்ற எண்ணம் நமக்குத் தோன்றும். இக்காலத்தில் அப்படிப்பட்ட களவாணிகளை நிறையப் பார்க்கிறோம் அல்லவா. பாரதியார் வள்ளலாரின் பாடலை இங்குமங்குமாகத் திருத்தி, தமது கவிதையாகத் தந்தது நகைச் சுவையாகத்தான்!

கோகலேயின் கொள்கைகளைக் கிண்டல் செய்ய வள்ளலாரின் அருட்பாவைச் சற்று மாற்றி எழுதினார். நகைச் சுவை இலக்கியத்தில் இது ஒரு வகை. இலக்கிய உலகு ஏற்கின்ற ஒரு பாணி.

வள்ளலாரின் ஆன்மிகப் பாடலை பாரதியார் அரசியல் பிரசாரப் பாடலாக மாற்றிவிட்டார். வள்ளலார் பக்தி கொண்டது பரம்பொருளிடம்! பாரதி கண்ட கோகலே சாமியார் பக்தி கொண்டது பரங்கியரிடம்! வள்ளலார் விரும்பியது முக்தி, கோகலே சாமியார்விரும்பியது பதவி. பாரதியார் ஆன்ம விடுதலைக்கும் அரசியல் விடுதலைக்கும் தொடர்புகாட்ட முயல்கிறார். அதனால்தான் அருட்பாவைத் திருத்த முயன்றார்.

"நந்தனைப் போல் ஒரு பார்ப்பான் இந்த நானிலத்தில் இல்லை கண்டீர்'' என்று பாடிப் பறையறைந்த பாரதியார் தமக்கு முந்திய தலைமுறையினரான கோபால கிருஷ்ண பாரதியாரின் நாடக இலக்கியத்தில் உள்ளத்தைப் பறி கொடுத்து விட்டார் என்று சொல்ல வேண்டும்.

நந்தனார் சரித்திரக் கீர்த்தனையில் வரும் நந்தனாரை பூரண சுதந்திரம் விரும்பிய திலகரோடும், அரிசன நந்தனாருக்குத் தில்லை செல்வதற்கு அனுமதிதர மறுத்த அந்தண மிராசுதாரைப் பிரோஸிஷா போன்ற மிதவாதத் தலைவரோடும் ஒப்பிட்டு மூன்று கவிதைகளைப் பாடியுள்ளார் பாரதியார். அந்தப் பாடல்களிலே நந்தனார் சரித்திரக் கீர்த்தனையிலே உள்ள வர்ண மெட்டுக்களையும் பயன் படுத்தியுள்ளார், எட்டயபுரம் கவிஞர்.

இவையன்றி, சேரி வாழ்வில் இருந்து விடுதலை பெற விரும்பும் நந்தனாரோடு, அன்னிய ஆட்சி பூட்டிய அடிமைத் தளையைத் தகர்த்தெறிந்து விடுதலை பெற விரும்பிய தீவிர தேசியவாதிகளோடு ஒப்பிட்டுச் சில கவிதைகள் புனைந்துள்ளார்.


Printed by V. Murali and Published by V. Vaidyanathan on behalf of Messrs Bharathan Publications Private Ltd, at the Bharathan Press, Race Course Road Guindy, Madras-600 032. (Phone: 431543) Editor: K. Rajendran

இருமடங்கு விரைந்து கொல்லும்

ஷெல்டாக்ஸ்®

வீட்டுபயோகத்திற்கு ஒன்றிலே-இரண்டு பூச்சி கொல்லி

கொசுக்களைக் கொன்று வீழ்த்துகிறது மற்றும் கரப்பான் பூச்சிகள், மூட்டைப் பூச்சிகள், எறும்புகள் முதலிய வற்றைக் கொல்லுகிறது.



ஷெல்டாக்ஸ்—மிகவும் சக்தி வாய்ந்த ஒன்றிலே-இரண்டு பூச்சிக் கொல்லி

ஷெல்டாக்ஸ இரண்டு சக்தி வாய்ந்த கொல்லும் திறனைக் கொண்டுள்ளது. ஒன்று பறக்கும் கொசுக்களையும் பூச்சிகளையும் விரைவில் கொன்று வீழ்த்துகிறது. மற்றது கரப்பான பூச்சிகள், எறும்புகள், உண்ணிகள், மூட்டைப் பூச்சிகள் முதலியவற்றைக் கொல்லும் நீண்ட காலம் தங்கிச் செயல் புரியும் விடாப்பிடியான சக்தியை உடையது.

ஷெல்டாக்ஸ் உபயோகத்திற்குத் தயாராகக் கிடைக்கிறது

அதை தெளிப்பதற்கு முன் கலக்க வேண்டிய அவசியமில்லாததால் ஷெல்டாக்ஸ் மிகவும் பத்திரமானது. ஷெல்டாக்ஸை ஸ்ப்ரேயரில் கொட்டுங்கள். எல்லாக் கதவுகளையும் ஜன்னல்களையும் மூடிவிட்டு ஸ்ப்ரே செய்யத் துவக்குங்கள். முதலில் வெற்றிடத்திலும் பிறகு பர்னிச்சர், படுதாக்கள், படுக்கைகளுக்குப் பின்னால் வீட்டில் கரப்பான பூச்சிகளும் இதர பூச்சிகளும் மறைந்திருக்கும் இடத்தில் ஸ்ப்ரே செய்யவும். பிறகு அறையை விட்டுவெளியே வந்து விடுங்கள். அறையை 15 லிருந்து 20 நிமிடங்கள் பூட்டி வைக்கவும். முக்கியமான ஸ்டோர்களிலும் மருந்து கடைகளிலும் ஷெல்டாக்ஸ் ½ லிட்டர், 1 லிட்டர் மற்றும் 5 லிட்டர் டின்களில் கிடைக்கின்றது.



ஷெல்டாக்ஸ்

விரைவில் வீழ்த்தும் பூச்சிக் கொல்லி

விற்பனைக்கு விடுப்போர்:
நேஷனல் ஆர்கானிக் கெமிக்கல் இண்டஸ்ட்ரீஸ் லிட்.
மபத்லால் ஹவுஸ், கரிமன் பாயிண்ட், பம்பாய் 400 021

NOCIL

® ஷெல் ட்ரேட்மார்க்

CHAITRA-NOC-170-TAM-R

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Sri Lanka